# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET, COLOMBO—12.

புத்தகம் 11 ஏவிளம்பி ஞு ஆடி மாதம் 13 திகதி 28-7-57 ஞாயிற்றுக்கிழமை துல்கஜ் பிறை 29 இதழ் 9



மெய்யென்பேர்க் ஆட்டுப் பால் மா




இருமல், காசம் தொய்வு நோய் மூல வியாதி மற்றும் பலவீனம் முதலானவற்றிற்கு மிகச் சிறந்தது.

விபரங்களுக்கு:-
த. கணேசன். 53, மெயின் வீதி, கொழும்பு.


# மட்டக்களப்பிலே தேசிய மாநாட்டுக்கு

## கோலாகலமான ஏற்பாடு

—0—

## ஆகஸ்டில் சாத்வீகச் சமரா அல்லது சமாதானமா என அறியஆவல்

—:0:—

## விழாக்கோலம் பூண்டுவிட்டது நகர்
### திரண்டு வருகின்றனர் தமிழ்ப் பேசும் மக்கள்

(சுதந்திரன் விசேஷ மாநாட்டு நிருபர்)

—மட்டக்களப்பு ஜூலை 25

மட்டக்களப்பிலே தமிழரசுக் கட்சியின் விசேஷ தேசிய மாநாட்டுக்கு கோலாகலமான ஏற்பாடுகள் ஜரூராகச் செய்யப்பட்டு வருகின்றன. நகரே விழாக் கோலம் பூண்டு வெகு ரம்மியமாகக் காணப்படுகிறது.

ஆகஸ்டில் நடக்கவிருப்பது சாத்வீகச் சமரா அல்லது சமாதானப் பிரசாரமா என்பதை அறிய விரும்பும் உலகெங்குமுள்ள அரசியல் அவதானிகளைப்போல மட்டக்களப்பு மக்களுக்கும், அங்கு இதுவரை வந்து சேர்ந்துவிட்ட திரளான மக்களும் மிகுந்த ஆவல் உள்ளவர்களாகக் காணப்படுகிருர்கள்.

வந்தாரை மனதார வரவேற்று உபசரித்து மகிழும் மட்டக்களப்பு மக்களின் விருந்தோம்பும் பண்பை வெளிப்படுத்த மாநாடு வாய்ப்பளிக்கிறதே என்பதில் ஏற்படும் மனக்களிப்பு அவர்கள் முகங்களில் பிரதிபலிக்கிறது.

மட்டக்களப்பிலே ரோட்டிலும் சரி வீட்டிலும், யாரையும் கேட்டாலும், கேட்காவிட்டாலும் எல்லோரும் மாநாட்டைப் பற்றிப் பேசித்தீர்த்துக்கட்டிவிடுகிருர்கள். அவ்வளவு உணர்ச்சி வேகத்தோடு அவர்கள் காணப்படுகிருர்கள்.

தமிழரசுக் கட்சியின் விசேஷ தேசிய மாநாடு இம்மாதம் 26,27,28-ந் திகதிகளில் நடக்குமாகையால் அதற்கான ஒழுங்குகள் ஜரூராகச் செய்யப்பட்டு வருகின்றன. அவை அநேகமாக இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டன.

மகாநாடு நகரசபை மண்டபத்திலும் முற்ற வெளியிலும் நடைபெறவிருக்கிறது. முற்ற வெளியில் 410 அடி நீளமும் 241 அடி அகலமும் கொண்ட பிரமாண்டமான பந்தல் நிறுவப்பட்டிருக்கிறது. தென்னங் குருத்துகளாலான தோரணங்களும் வர்ணக் காகித பூவேலைப் பாடுகளும் ஏராளமான கொடிகளும் பந்தலை அலங்கரிக்கின்றன. பச்சை சிவப்பு, மஞ்சள் வர்ண மின்சார பல்புகள் பந்தலில் பொருத்தப்பட்டுள்ளன.

### மேடை

பந்தலுக்குள் 40 அடி நீளம் 20 அடி அகலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மேடை மிகக் கவர்ச்சிகரமாக அமைக்கப்பட்டுள்ளது. பெப்ரவரி 4-ந் திகதி திருமலையில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டபோது துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகிய திருமலைத் தியாகி நடராஜன், சென்ற ஆண்டிலே நடந்த கல்லோயாக் கலவரத்தின் போது மட்டக்களப்பில் மூர்த்தண்யமாகத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்ட ராஜேந்திரா ஸ்டீவன்ஸ், தங்கராஜா ஆகிய மூவரின் பிரதிமைகள் மேடையில் இடம் பெற்றிருக்கின்றன.

மாநாட்டிலே பார்வையாளர்களாகக் கலந்துகொள்ளும் பெண்களுக்குப் பிரத்தியேகமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### கொடிகள்

மாநாட்டு அரங்கிலே காணப்படும் இன்னெரு விசேஷம் அங்குகாணப்படும் கொடிகளாகும். இந்தியா, பாகிஸ்தான், பிரிட்டன் உள்

(8-ம் பக்கம் பார்க்க)

# 'பிச்சைச் சம்பளம்' வழங்குவதில் பாகுபாடு

—0—

## ஏழைகள் விஷயத்திலும் அரசாங்கத்தின் இனபேதம்

—0—

## யாழ்ப்பாணம் மட்டக்களப்பு மன்ஞர் புறக்கணிப்பு

(சுதந்திரன் நிருபர்)

தொழில் சமூக சேவா அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்னவின் ஆணையின்கீழ் செயல்படும் சமூக சேவை இலாகா ஏழை எளிய மக்களுக்கு வழங்கும் பொதுசன உதவியில்கூட இனபேத அடிப்படையான பாரபட்சம் காட்டி வருவதாகத் தெரிய வருகிறது.

அரசாங்கத்தின் பொது சன உதவித் திட்டத்தின் கீழ் நிராதரவான நிலையிலிருக்கும் பிணியாளருக்கும் வயோதிபருக்கும், ஊனர்களுக்கும், சித்தசுவாதீனமற்றவர்களுக்கும் விதவைகளுக்கும் கணவனல் கைவிடப்பட்ட பெண்களுக்கும் மாதாந்தம் உதவிப் பணம் அளிக்க வசதியிருக்கிறது. தனிப்பட்டவர்களுக்கு மாதம் 10 ரூபாய்வீதமும் வேறு சிலரையும் தாபரிக்க வேண்டிய நிலையிலுள்ளவர்களுக்கு மாதம் 20 ரூபாய் வீதமும் சகாயப் பணம் அளிக்கலாம். இப்படியளிக்கப்படும் பணத்தைப் 'பிச்சைச் சம்பளம்' என்றும் சொல்வதுண்டு.

### உபமான்யம்

கடந்த ஆண்டில் சுமார் 85,000 பேர்களுக்கு பொதுசன உதவிப் பணம் அளிக்கப்பட்டு வந்தது. இலங்கை முழுவதிலும் மேலும் சுமார் 7000 பேர்களுக்கு உதவியளிக்க எட்டரை லட்சம் ரூபாய் வேண்டுமென்று கோரி கடந்த பெப்ரவரியில் தொழில் சமூக சேவா அமைச்சர் ஒரு உபமான்யப்

(8-ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் பகுதியில் குடியேற்றிய சிங்களவர்களுக்கு பௌத்த கோயில்

—0—

## அரசாங்கம் முஸ்லிம்களுக்கு திட்டமிட்டு செய்யும் துரோகம்

—:0:—

## மூதூர் எம். பி. முகமது அலி இன்னமும் ஒற்றுமை உபதேசம்தான் செய்கிருர்

(சுதந்திரன் நிருபர்)

ஆண்டாண்டு காலமாக முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக வாழ்ந்து வரும் மூதூர்பகுதியை முஸ்லிம் பகுதியாக்க வகுப்புவாத எம். ஈ. பி. அரசாங்கம் எடுத்த முக்கிய நடவடிக்கைகளில் ஒன்று, அப்பகுதியில் அல்லைக் குடியேற்றத் திட்டத்தைத் தொடங்கி, அங்கே சிங்களவர்களைக் கொண்டு போய்க் குடியேற்றியதாகும். இப்படி அங்கே குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு இப்போ பௌத்த கோயில் கட்டிக் கொடுத்து அவர்களின் மத கலாச்சார அபிவிருத்திக்கு வழி செய்ய முன்வந்திருக்கிறது அரசாங்கம். இந்த வழி துறையெல்லாம் மூதூர்ப் பகுதியில் வாழும் பெரும்பான்மையினரான முஸ்லிம்களுக்கும் மற்றுமுள்ள தமிழர்களுக்கும் மறுக்கப்பட்டு வருகின்றன.

அல்லைக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் மூதூர்ப் பகுதியில் குடியேற்றப் பட்ட சிங்களவர்களுக்கு பௌத்த கோயில் ஒன்றைக் கட்ட இடது கால்வாய் காலனிப் பாடசாலைக் கருகாமையிலுள்ள நிலத்தில் மூன்று ஏக்கரை உபயோகப் படுத்த புதைபொருள் ஆராய்ச்சிக் கமிஷனரின் உத்தரவு கோரித் திருகோணமலை அரசாங்க அதிபர் அன்ஞருக்குச் சமீபத்தில் ஒரு கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. 17-6-57 தேதியிடப்பட்ட அவருடைய கடிதத்தின் இலக்கம் LL/48 ஆகும்.

### புறக்கணிப்பு

குடியேற்றப் பகுதியில் வாழும் சிங்கள மக்களில் அரசாங்கத்துக்கு உள்ள அக்கறை அங்கு வாழும் முஸ்லிம் தமிழ் மக்களில் இல்லாதிருப்பது அவர்களுக்கு மிகுந்த ஆத்திரத்தையும் வெறுப்புணர்ச்சியையும் ஊட்டி வருகிறது.

(8-ம் பக்கம் பார்க்க)





றெக் அன் றேல்

இன்னிசைபோன்ற அருமையான சங்கீதத்தை நீங்கள் விரும்பும் தமிழ் இசைத் தட்டுகளில் கேட்டு ரஸிக்கலாம்.

ஒரிஜினல் ஆங்கில ரிக்கார்டுகளையே பார்த்து வாங்குங்கள்.

★

லூயிஸ்பிரவுன் அன் கோ. லிமிட்டெட்,

இன்வெரஸ்க் ஹவுஸ்,

மக்கலம் வீதி, கொழும்பு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய ஆராய்ச்சிக்கு புலமை மட்டும் இருந்தால் போதாது

## உணர்ச்சித் துடிப்பும் ரசிக ஞானமும் உள்ளத்தெளிவும் சொல்வளமும் வேண்டும்

## டி. கே. சி. தமிழகத்தின் தலைசிறந்த இலக்கிய ஆராய்ச்சியாளர்

### மேல் நாட்டு கோல்ரிட்ஜோடு ஒத்து மதிக்கலாம்

(வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.)

இலக்கிய ஆராய்ச்சி என்பது ஒரு விளையாட்டான காரியமல்ல. ஒரு அருட்கவி பிறப்பதுபோல ஆராய்ச்சியாளனும் உண்மையாகவே அருளுடன் பிறக்கிறான். கல்லூரிப் புலமையில், கவிதையோ, ஆராய்ச்சியோ உதயமாகாது; பழைய பாடத்தை வேகமாய் ஒப்புவிக்கும் திறமை, வரண்ட திறமைதான் ஏற்படும்; உண்மைப் பயிற்சி ஏற்படாது. பள்ளிப் படிப்பில், அதுவும் தற்காலப் படிப்பில் ஆசிரியனும், மாணாக்கனும் பழைய பாடத்தை ஞாபகத்திலிருந்து மந்தமாய்க் கயிறு கட்டியிழுப்பதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம்.

### உணர்ச்சியுள்ளவனுக்கே இலக்கிய ஆராய்ச்சி

இலக்கிய ரசனையில் பயிற்சியுள்ள ஒருவன், தான் ஆராயும் காவியங்களின் நயங்களையும் குறைகளையும் எடுத்துக்காட்டும் ஆற்றலுடையவன்; மேடு பள்ளங்களைக் கண்டு கலையின் குறைகளை விலக்கவும் வழிதேடுவான். இலக்கியங்களின் மூலத்தை ஆராய்ந்து ஆசிரியனின் இதய பாவத்தை யொட்டி, சொற்களின் நயங்களையும் குறைகளையும் அபூர்வமாக அலசிப்பார்க்கும் ஆற்றல் அவனுக்கு விசேஷமாக உண்டு. காவியக் கட்டுக்கோப்பையும், கலையின் மலர்ந்த உணர்ச்சிக்கோபுரத்தையும், மனோபாவத்தால் அவன் உணர்கிறான். உணர்ச்சியற்றவன் இலக்கிய ஆராய்ச் செய்ய முடியாது.

### புலமைச் சுமை பயன்படாது

இப்போது சிலர் புலமைச் சுமையைக் கொண்டு ஆராய்ச்சி நூல் எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் பேரைக் குறிப்பிட நான் விரும்பவில்லை. விறகுக் கட்டுகள் போல சொற்கள் வந்து விழுந்திருப்பதைத் தவிர, அவ்வகையான நூல்களை ஆராய்ச்சி என்று நாம் உண்மையாக ஒப்புக்கொள்ள முடியாது. புலமைக் குப்பையில் ஆராய்ச்சி ஒளி பிறந்துவிடாது.

### கோல்ரிட்ஜின் ஆராய்ச்சி

ஆனால் தமிழ் இலக்கியக் கருவூலத்தையே சாதாரண மக்களும் அறியுமாறுசெய்த பெரியார்—ஆராய்ச்சி நிபுணர் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியாரவர்கள் தான் என்று நான் துணிந்து கூறுவேன். அவர்களை நான் ஐரோப்பிய இலக்கிய ஆராய்ச்சிமேதை(Coleridge) கோல்ரிட்ஜுடன் ஒப்பிட்டு மதிக்கிறேன். கோல்ரிட்ஜ் ஆராய்ச்சி மன்னர். ஷேக்ஸ்பியருக்கு அவர் செய்திருக்கும் ஆராய்ச்சி அபூர்வமானது; பல ஆராய்ச்சி உண்மைகளைக் கொண்டது. அவர் எழுதியிருக்கும் 1 Lectures on Shakespeare, 2 Biographia Literaria என்ற இரண்டு நூல்களும் இலக்கிய ஆராய்ச்சிச் சுரங்கம். இந்த ஆராய்ச்சிச் சுரங்கத்தில் சிந்தனைத் தங்கமும், உணர்ச்சி பவளங்களும் கிடைக்கின்றன. சொற்கள் கவிதை மணக்கின்றன. உணர்ச்சியை அள்ளிக்கொட்டுகின்றன. ஆராய்ச்சியின் இரகசியங்களைக் கண்ணாடிபோலப் பிரதிபலிக்கின்றன. கவிதைக் கடலின் எல்லை தெரிகிறது. அதேபோல திரு. டி. கே. சி.யின் ஆராய்ச்சியும் கலையின் உள்ளத்திலும் ஆழமாய்ப் பாய்கிறது.

### டி. கே. சி.யின் ஆராய்ச்சி

கம்பன் எழுதினாலென்ன, முத்தொள்ளாயிர ஆசிரியர் எழுதினாலென்ன, கலையின் கோபுரம், காவிய மாளிகை மங்காமல் தெரிகிறதா— இதுதான் அவருடைய முதல் கேள்வி. இலக்கிய உருவம் (Literary Form) சிதறாமல் அலங்காரமாகக் கலையின் உண்மையை தாங்கிக்கொண்டு ரசிகன் உள்ளத்தில் விளையாடுகிறதா? இது ஒரு நல்ல கேள்விதான்—நுட்பமான கேள்வி? இந்தக் கேள்வியையும் ஒரு ஆராய்ச்சி நிபுணன்தான் உணர்ந்து கேட்கக் கூடும். இது ஆனந்தமான கலைக் கேள்வியல்லவா? கவிஞனின் உள்ளம் சாதாரண மக்களின் இதயத்தில் பிரதிபலிக்கிறதா? அப்படியானால் எப்படி? கலையில் உலகு முழுதும் ஒரு பொது மனநிலை எங்கும் சூழ்கின்றதல்லவா (Cosmic Consciousness) இதைத்தான் இரசிகன், உண்மை இரசிகன் உணர்கிறான்—அதன் மர்மங்களையும் உள்ளத் தெளிவுடன் கண்டுபிடிக்கவும் முயல்கிறான்.

### முத்தொள்ளாயிரமும் டி. கே. சி.யும்

''முத்தொள்ளாயிர'' ஆராய்ச்சி டி. கே. சி. செய்திருப்பதும் மிக நுட்பமான ஆராய்ச்சி என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. 2700 பாடல்களில் மறைந்தனபோக, மிஞ்சிய 108 பாடல் [illegible] [illegible] லாமலுள்ள 9 பாடல்கள் நீங்கலாக 99 பாடல்களையும் எவ்வளவு நயமான முறையில் மூலத்தின் அழகு மங்காமல் டி. கே. சி. ஆராய்ந்திருக்கிறார். பார்த்தீர்களா? எனக்கொரு சந்தேகம். முத்தொள்ளாயிர ஆசிரியரே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பின் டி. கே. சி.யாக மீண்டும் வந்து பிறந்திருக்கக் கூடுமோ? என்ற எண்ணம் என் நெஞ்சில் ஆர்வத்துடன் உதிப்பதுண்டு. இதைக் கண்டு சிலர் வியக்கலாம். நான் சொல்லுவதெல்லாம் ஆராய்ச்சியில் மூலத்தின் கலாதீபத்தை எடுத்து விளக்கும் அபூர்வ ஆற்றலுடைய ரசிகர் முதநூலாசிரியரின் இதயப் பண்பையும் கவிதை ரேகையையும் ஆழ உணர்ந்தவராகவே யிருக்க வேண்டும். இதுவே டி. கே. சி.யின் கவிதையாராய்ச்சி இதய மொழி மர்ம விளக்கம்.

### கண்ணாடிபோலக் காட்டுகிறார்

ஆங்கில ஆராய்ச்சி நிபுணர் கோல்ரிட்ஜ் (Col rid ) ஷேக்ஸ்பியரின் நாடகக் கலையையும் கவிதைப் பண்பையும்பற்றிச் சொல்லும்போது மிக நுட்பமாக ஆராய்ந்து கூறுகிறார் "உண்மைக் கவிதையில் கவியின் இதயம் மலர்கிறது; கற்பனை மலர்கிறது; மொழி மலர்கிறது; உணர்ச்சி மலர்கிறது; சிந்தனை மலர்ந்து மணம் வீசுகிறது. இப்படி ஷேக்ஸ்பியரின் கலை சம்பந்தப்பட்ட வரையில் அவர் கலைக் கடலிலும் கவிதைக் கடலிலும் மூழ்கி முத்தெடுத்துக் காட்டுகிறார் அதே முறையில்தான் நமது இலக்கிய ரசிகர் டி. கே. சி.யும் தமிழ்க் கவிதையின் பண்பைக் கண்ணாடிபோலக் காட்டுகிறார். ''கம்பன் யார்?''—''இதய ஒலி''—''முத்தொள்ளாயிரம்''— இம்மூன்று நூல்களிலும், ஆராய்ச்சியின் உன்னதமான தத்துவங்கள் மின்னிப்பொலிகின்றன.

### பண்டிதர்களும் நற்சாட்சிப் பத்திரங்களும்

சொற்களையும் இலக்கணத்தையும், முன் பின் தொடர்பின்றி வேட்டையாடும் ஒரு பிடிவாதமான மன நிலையுள்ள சில பண்டிதர்கள் இத்தகைய ஆராய்ச்சியைச் செய்ய முடியாத நிலையில் தான் இருக்கிறார்கள். பண்டிதர்கள் எழுதும் சாதாரண வாக்கியங்களில் கூட, இலக்கண விலங்கமும் மொழிப் பின்னலும் இல்லாமலில்லை. அதனால்தான் மாணவர்கள் பொருள் புரியாமல் பாடங்களை தங்கள் ஞாபக சக்தியில் ஆணியடித்து மாட்டி வைக்கிறார்கள். இவர்கள் பெறும் நற்சாட்சிப் பத்திரங்களுக்கு (Certificates) ஏதாவது பொருளுண்டா?

### கூடப்பிறந்த ஆராய்ச்சி ஒளி

ஒரு உண்மைக் கவியின் இதய பாவத்தை எவ்வாறு ஒரு சிறு குழந்தையும் உணர்ந்து அனுபவிக்கலாம் என்பதைத்தான். பல சித்திரப் படலங்களாக மொழி மின்னல்களாக, ஒளிப்படலங்களாக, ஒலியோவியங்களாக டி. கே. சி. எடுத்துக் காட்டுகிறார். கவிதையின் அபூர்வ உறுப்புகளையும் இலட்சணங்களையும், ஆராய்ச்சித் தராசில் பிரித்துக் காட்டி, காவிய அணுக்களைத் துருவித்துருவி ஆராய்ந்து எடுத்துக்காட்டும் சக்தி (Analytical power) இவ்வாராய்ச்சியாளரின் இதயத்தில் பிறவியிலேயே ஊறிக் கிடக்கிறது. அவருடன் கூடப் பிறந்தது ஆராய்ச்சி ஒளி; முதனூலாசிரியனை, நிழல் போலப் பிரதிபலித்துப் பின்பற்றிச் செல்லும் ஆற்றலுடையவர் இவர். அதனால்தான் நீண்டநாள் பொது மக்களின் கண்ணில் படாமல் மங்கிமறைந்து கிடந்த முத்தொள்ளாயிரச் சித்திரம் டி. கே. சி.யின் ஆராய்ச்சி மேடையில் கலையாவேசத்துடன் உதயமாயிருக்கிறது.

### ஓவியமாகும் காவியம்

முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாட்டைப் பாடிப்பார்ப்போம். காதல் வெறிகொண்ட பெண் தனது காதல் நோயைச் சோழனுக்கு அறிவிக்கும்படி ஒரு செங்கால் நாரைப் பட்சியிடம் சொல்லும் சந்தர்ப்பம்.

''செங்கால் மட நாராய்!<br>
தென் உறந்தை சேறியேல்<br>
நின் கால்மேல் வைப்பன் என்<br>
கையிரண்டும்;வன் பால்க்<br>
கரைஉரிஞ்சி மீன்பிறழும்<br>
காவிரி நீர் நாடற(கு)<br>
உரையாயோ யான் உற்ற நோய்<br>
(பாட்டு 21)

இந்தப் பாட்டில் இயற்கையின் சஞ்சலமும், காதலின் அபூர்வ வேகமும், எளிய சிறு சொற்களில் சித்திர மொழியாகவே அமைந்திருப்பதைக் கண்டு வியக்காமலிருக்க முடியுமா? இதில் காவியம் ஓவியமாகவே உதயமாகிறது! இதன் ஆழ்ந்த கலைப் பண்பை டி. கே. சி. அவர்கள் இரண்டு பக்கங்களில் ஆராய்ச்சிக் குறிப்புடன் விளக்கியிருக்கிறார்கள். இதேபோல, மற்ற பாடல்களுக்கும் ஆராய்ச்சி ஒளி வெள்ளமாய் வீசுகிறது.

### கவிதை நாணில் தெறித்த சொற் சித்திரம்

முத்தொள்ளாயிர ஆசிரியர் பாண்டி நாட்டை நன்றாய்ச் சுற்றிப்பார்த்து அனுபவித்தவர். பாண்டியனது பக்கத்திலேயே இருப்பவர். சபா மண்டபத்தில் வரும் பொன் முடிச்சுகளைப் பற்றியும், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் ஊரில் அனுபவித்துக்கொண்டிருக்கும் மன நிலையைப் பற்றியும் விரித்துக் கூறுகிறார். மலை வளத்தில் வரும்யானைக் கூட்டமும், பாண்டியனது வீர வேலும் தெரிகின்றன. இக் கருத்துக்கள் பாட்டில் அமைந்திருப்பதைப் பாருங்கள்.

''பார் படுப செம்பொன்,<br>
பதிபடுப முத்தமிழ்,<br>
நீர் படுப வெண் சங்கும்.<br>
நித்திலமும், சாரல்<br>
மலை படுப யானை வயமாறன்<br>
கூர்வேல்த்<br>
தலை படுப தார்வேந்தர் மார்பு''<br>
(பாட்டு 47)

இது ஒரு அபூர்வ சொற் சித்திரம் கவிதை நாணில் தெறித்து வந்த சித்திரமல்லவா!

### டி. கே. சி. கண்டுபிடித்த உண்மை

தமிழ் மொழியானது தனித்த வளம், வேகம், எல்லாம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக படைத்து வந்திருக்கிறது என்று டி கே. சி. அவர்கள் உணர்ந்து உணர்ந்

(10-ம் பக்கம் பார்க்க)

INTERNATIONAL INSURANCE CO., LTD.

இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்.

உங்கள் கவனத்திற்கு ஒரு புதுமைச் செய்தி

தமிழ் பேசும் இனத்தின் தனிப்பெரும் ஸ்தாபனம் இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட் ஒன்றேயாகும்

★ ஆயுள் ★ மோட்டார் இன்சூரன்ஸ் மட்டுமல்ல

புதிய முறையில் அமைந்த
★ விவாக ★ அந்தியகால சேமலாபநிதிகளும்
கூட்டமைப்பு (Group Scheme) இன்சூரன்ஸ்களும்
எமது திட்டத்தில் உண்டு.

எல்லாவற்றுக்கும்
★ உறுதிமூலம் உத்தரவாதமளிக்கிறோம்.
★ விசேஷ கடன் வசதியும் செய்து கொடுக்கிறோம்

விபரங்களுக்கு:
280, இரண்டாம் மாடி, இராஜாபில்டிங்
பெரியகடை, யாழ்ப்பாணம்.

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்துகொள்ளலாம.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள்தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக்குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக்கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டுவந்தால் மூலவியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், ''ஆனந்தா தைலத்தை''த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச்சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடு நிசியில் காந்திஜி கள்ளத்தனமாகக் கைது!

## சூரத்தில் சத்தியாக்கிரகிகள் மத்தியில் இருந்த உத்தமர் மீது திடீர் நடவடிக்கை

## விசாரணையுமில்லை - நீதியுமில்லை

### நேரே சிறையில் கொண்டு போய்த் தள்ளப்பட்டார்

## இந்திய சுதந்திரப் போரில் ஓர் காட்சி

இச்சிறு கட்டுரை "சத்தியாக்கிரம்" என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது. சத்தியாக்கிரக தத்துவத்தைப்பற்றிக் காந்திஜி அவ்வப்போது எழுதிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். இந்த நூலில் காந்திமகான் சூரத் மாவட்டத்தில் கரடி என்னுமிடத்தில் 12-5-1930ல் கைதானதைப்பற்றி திருமதி மீரா பென் எழுதிய ஒரு சிறு குறிப்பும் சேர்க்கப்பட்டுள்ளது. அச் சிறு குறிப்புதான் சமய சந்தர்ப்பம் கருதி இங்கு வெளியிடப்படுகிறது.

227 பக்கங்களைக்கொண்ட இந்த அருமையான நூலை தமிழ் நாடு காந்தி நினைவு நிதிக்காக வெளியிட்டுள்ளார்கள். விலை ரூபா ஒன்றுதான். நூல் எம் சிவகுருநாதன், 29 ஹாமர்ஸ் அவனியு கொழும்பு விலாசத்திலும், மட்டக்களப்பு மாநாட்டிலும் கிடைக்கும்.

அவரை (காந்திஜியை) பிடித்துக்கொண்டு போவதற்காக, நடு நிசியில் திருடர்களைப்போல அவர்கள் பொலீஸார் வந்தார்கள். கோடிக்கணக்கான மக்களுக்கு அஞ்சி, தீர்க்கதரிசியான அவரைப் பகலில் கைது செய்ய அவர்கள் விரும்பவில்லை.

இரவில் 12—45 மணிக்கு மகாத்மா காந்தியும் சத்தியாக்கிரகிகளும் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்த சிறு வீட்டுக்குள் சூரத் மாவட்ட மஜிஸ்திரேட்டும் ரிவால்வருடன் இரண்டு இந்தியப் பொலீஸ் அதிகாரிகளும், சத்தமின்றித் திடீரென்று நுழைந்தார்கள். உடனே அவர்கள் சத்தியாக்கிரகிகள் எல்லோரையும் சூழ்ந்து கொண்டார்கள். ஆங்கில அதிகாரி ஒருவர் காந்திஜியின் படுக்கைக்கு அருகில் வந்து, காந்திஜி முகத்தில் "பேட்டரி" வெளிச்சத்தை அடித்து "நீங்கள்தானே, மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி" என்று கேட்டார்.

### 'அரஸ்ட்' உத்தரவு

"உங்களுக்கு நான் வேண்டுமா?" என்று காந்திஜி அன்புடன் கேட்டார். மேலும், "தயவுசெய்து கைகால் கழுவச் சிறிது அவகாசம் அளியுங்கள்" என்றும் கேட்டுக்கொண்டார். அவர் பல் துலக்கத் தொடங்கியபோது அதிகாரிகள் கையில் கடிகாரத்துடன் அவரைக் கவனித்துக்கொண்டிருந்தனர். இச் சந்தர்ப்பத்தில் தமக்கு

### திருமதி மீரா பென்

"வாரண்ட்" இருக்கிறதா என்று கேட்டார். அதிகாரி கீழ்க்கண்ட உத்தரவை வாசித்தார்.

"மோகன்தாஸ் கரம் சந்த் காந்திஜியின் நடவடிக்கைகள் பீதியை அளிப்பவையாய் இருக்கின்றன. ஆகையால் அரசாங்கம் விரும்பும் காலம் வரைமேற்கண்ட மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியை, 1827ம் ஆண்டு 25—வது சட்டத்தின் படி சிறையில் வைக்கவேண்டுமென்பது கவர்னரின் உத்தரவு. அவர் உடனே ஏர்வாடா மத்திய சிறைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும்"

### பிரார்த்தனை

சுத்தம் செய்துகொண்டு, தனக்குத் தேவையான சில சாமான்களைக் கட்டிக் கொண்டபின் தமது காகிதங்களைக் கோஷ்டியில் இருந்த ஒருவரிடம் அளித்தார் இதன்பின் அவர் அதிகாரிகளை நோக்கி, "பிரார்த்தனை செய்வதற்காக எனக்குச் சில நிமிஷ நேரம் அளியுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். இந்த வேண்டுகோளும் அளிக்கப்பட்டது. தனது சகாக்கள் தம்மைச் சுற்றி நிற்க அவர்களைச் சுற்றிப் பொலீஸார் நிற்க காந்திஜி நின்றுகொண்டே பிரார்த்தனை செய்தார்.

### திடீர் நடவடிக்கை

பிரார்த்தனை முடிந்தவுடனே வேகமாக அவரை 3 அதிகாரிகளுடனும் 8பொலீஸார்களுடனும்ஒரு மோட்டார் லாரியில் ஏற்றிக் கொண்டு சென்றுவிட்டார்கள்.

தந்தி, டெலிபோன் தொடர்புகள் எல்லாம் துண்டிக்கப்பட்டன. பொலீஸார் சாலைகளைக் காவல் செய்தனர்.

எல்லாம் திடீர் நடவடிக்கை; மறைவான இரகசியம்; விசாரணையுமில்லை—நீதியுமில்லை.

அரசாங்கம் தனது விருப்பம்போல் அறிக்கைகளை விட்டுக்கொண்டிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவரோ சிறைச்சாலையில் மௌனமாக உட்கார்ந்துகொண்டிருக்கிறார்.

அந்த மெலிந்த உடம்பை அவர்கள் தூக்கிக்கொண்டு போகலாம்; சிறையிலும் வைக்கலாம். அவருடைய தூய்மை நிறைந்த குரலை சிறைச்சாலையின் நான்கு சுவர்களுக்குள் ஒடுக்கிவிடலாம்; ஆனால் அம்மாபெரும் ஆத்மாவை அவர்கள் அடக்கிவிட இயலாது. அதன் ஒளி இவ்வுலகத்திலுள்ள எல்லாத் தடைகளையும் ஊடுருவிச் சென்றுவிடும். அந்த அளவுக்கு அதிக ஒளியுடன் பிரகாசிக்கும்; இந்தியா மட்டிலுமல்ல உலகமுழுவதும் சுடர்விடும்.

### விடுதலை கிடைத்துவிடும்

இந்தியாவே, இதுதான் உன்னுடைய மகத்தான சோதனை காலம் வெற்றியையும் அமைதியையும் நோக்கி ஆண்டவன் உன்னை அழைத்துச் செல்வாராக!

தாம் காட்டிய சத்தியம் அஹிம்சை ஆகிய பரிசுத்தமான மார்க்கத்திற் சென்றால் விடுதலை உன் கையில் கிடைத்துவிடும், என்று வார்த்தைகளால் விவரிக்க முடியாத அன்புடனும் அறிவுடனும், உன்னை நேசித்த அந்த மகான் கூறியிருக்கிறார். அதற்கு வேண்டிய [illegible] த்தை [illegible] வன் உனக்கு அளிப்பாராக!

## ஒளித்தனையோ?

அவன்:

மல்லிகைத் தோட்டத்திலே-மருண்டிடும்
மான்விழிப் பார்வை யெங்கே?
முல்லைச்சிரிப்பு எங்கே-அடிகள்ளி!
மோகன வார்த்தை எங்கே?
கொல்லத் துணிந்தனையோ-வள்ளிநெஞ்சில்
கூரம்பு பாயுதடி!
வெல்லத் தமிழ்மொழியால்-என்னவுன்
வேதனை சொல்லிடடி!

அவள்:

நெஞ்சிலுரமிலையோ?-ஆணினத்து
நேர்மை யுனக்கிலையோ?
கொஞ்சி மொழிய வந்தாய்-வள்ளி"தமிழ்க்
கோதை"யுணர்ந் திடுவாய்
அஞ்சி யொளித்தனையோ-தமிழ் காக்க
ஆட்கள் திரட்டுகையில்?
வஞ்சி எனக் குரைத்தாள்-தமிழினும்
வாழ்க்கை யுனக் குயிரோ?
மெல்லியர் என்று சொன்னார்-பெண்களின்
வீரமறிந்தனரோ?
வல்லியர் என் றுரைத்தார்-இவரினும்
மான மெமக் கிலையோ?
நல்லவ ராயிருந்தால்-வள்ளியிலே
நாட்டமுனக் கிருந்தால்
செல்லு படைநடத்து!-மறக்குலத்
திர முணர்த்திடு போ!

—"திமிலைத்துமிலன்"


## யப்பான் ஜுவல்லர்ஸ்

திறமான வைரங்கள்
அழகுமிக்க தங்க ஆபரணங்கள்

எல்லாவற்றுக்கும் சிறந்த இடம்

163, புதுச் செட்டித் தெரு, கொழும்பு.
டெலிபோன்: 5489.

64, கன்னாதிட்டி ரோடு,
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 518.

நினைவில் இருக்கவேண்டும்

## இன்லன்ட் அன் ஓவர்சீஸ்

டிரேட்ஸ் லிமிட்டெட்.

ஜுகி தையல் மெஷின்களும், றேயல் றீகல் சைசிக்கிள்களும் மற்றும் ஏனைய சாமான்களும் மிகவும் சகாயமான விலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

INLAND & OVERSEAS TRADES LTD.
180, Barber Street, COLOMBO.
Telephone: 78194.

ஷெல் மார்க் சுத்தமான அலுமினியம், பித்தளைப் பாத்திரங்களும், கோவில் பட்டுக் குடைகளும் அன்பளிப்புச் சாமான்களும் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளும் இடம்:

## சி. வி. பாட்

218 - 220, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

தலைமை ஸ்தாபனம்:
கொழும்பு.

## த நொதேர்ன் லைப் அன் ஜெனரல்

இன்சூரன்ஸ் கொம்பனி லிமிட்டெட்.

The Northern Life And General Insurance Co. Ltd.
P. O. BOX 807.

## தேவை

Agency Manager:
இன்சூரன்ஸ் வேலையில் கைதேர்ந்தவராகவும், மோட்டார் ரதமுடையவராகவும் இருத்தல்வேண்டும். இலங்கை முழுவதற்கும் ஏஜென்சி மனேஜர் ஒருவரே நியமிக்கப்படுவார். வசீகரமான சம்பளம் கொடுக்கப்படும்.

Inspectors.
யாழ்ப்பாணம், கண்டி என்னும் இரு பகுதிகளுக்கும் இன்ஸ்பெக்டர்கள் தேவை மோட்டார் வண்டியுள்ளவர்களானால் நன்று. அனுபவசாலிகளே விண்ணப்பிக்கவேண்டும்.

Representatives:
பின்வரும் பட்டினங்களுக்கு பிரதிநிதிகள் தேவை: ஊர்காவற்றுறை, மானிப்பாய், காங்கேசன்துறை, சாவகச்சேரி, மாத்தளை, புத்தளம், மூதூர், பொத்துவில், வதுளை, கண்டி, இறக்குவானை, இரத்தினபுரி.

சி. சிற்றம்பலம்,
மனேஜிங் டிரெக்டர்.

16 1/9, பெயிலி வீதி, கொழும்பு-1.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரத நாட்டுச் சுற்றுப் பிரயாணம் : 7

சென்ற வாரத் தொடர்ச்சி

# பொருட் காட்சிச் சாலையும் மூர் மார்க்கெட்டும்

## சென்னைக்குப் பெருமையளிக்கின்றன அவற்றில் இல்லாததொன்றில்லை

(நாவற்குழியூர் நடராசன்)

"சென்னை பதி வெட்டு
ஜில்லாவுக்குள்—அடி
உன்னைப்போல ரூபவதி
ஒருத்தரையும் காணவில்லை"

என்று ஏதோ ஒரு நாட்டுக் கூத்திலே இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் ஒரு பாடலைக் கேட்ட ஞாபகம் இருந்தது.

சென்னை பட்டினத்திலே கால் வைத்ததும் அந்தப் பாட்டுத்தான் சென்னையை எனக்கு அறிமுகம் செய்து வைக்க ஓடிவந்தது. அந்த வேலையைச் செய்ய அங்கு வேறு யாருமில்லாத பட்சத்தில். ஏற்கனவே எமது சென்னை விஜயம்பற்றி அறிவிக்கப்பட்டிருந்த திருவல்லிக்கேணி நண்பர் கிருஷ்ணமூர்த்தி (வல்லிக்கண்ணன்) அங்கு வந்திருக்கிறாரா என்று துார்ந்து துருவிப் பார்த்தோம் பாட்டையும் விடாமல் முணுமுணுத்துக் கொண்டு. நாடக மேடையிலே நகைச்சுவையை யூட்டும் அந்தப் பாட்டு, அந்த இடத்திலே அவலச் சுவையை ஊட்டினாலும் ஊட்டி விடக்கூடும் என்று பயந்து, அதன் சொற்சுவை பொருட்சுவை தோன்றாத வகையிற் சொல்லிக்கொண்டோம்.

### வாஹினி ஸ்டுடியோ

புகைவண்டி அன்று வழக்கத்துக்கு மாறாக இரண்டு மணி நேரம் பிந்திச் சென்றமையால் எமக்கும், எம்மை அங்கு எதிர்பார்த்தவர்களுக்கும் ஏமாற்றமாகவே முடிந்தது. எவ்வாறாயினும் எமது நண்பர் ராமலிங்க ரெட்டி ஏற்ற நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார். அதற்கு மேல் அவரே எமக்குச் சென்னையை அறிமுகஞ் செய்துவைத்தார்.

அதற்கிடையில் அவரை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டுமானால் வாஹினி ஸ்டுடியோ சொந்தக்காரரான ரெட்டி சகோதரருள் ஒருவர் என்று சொல்லுவதுதான் சுலபமாகும் ஏனென்றால் வாஹினி ஸ்டுடியோவைப் பார்க்கா விட்டாலும், அதைப்பற்றிக் கேள்விப்படாதவர்கள் இலங்கையிலோ இந்தியாவிலோ இருக்க முடியாது. அதுசலனப்படத்தயாரிப்புக் கலையகங்களுள் முதலிடம் பெறுவது. இந்தியாவில் மட்டுமன்று, தென் கிழக்கு ஆசியாவிலேயே அதற்கு ஒரு நல்ல ஸ்தானம் உண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

### மூர் மார்க்கெட்

சென்னையிலுள்ள மூர் மார்க்கெட்டைப்பற்றி கதைகள் கட்டுரைகள்மூலம் அதிகம் கேள்விப்பட்டிருந்தபடியால் அதை ஒருதரம் பார்க்கலாம் என்று விரும்பினோம், மத்திய புகைவண்டி நிலையத்துக்கு சமீபத்திலேயுள்ள பெரிய கட்டடந்தான் அது என்பதை அறிந்ததும், இல்லா விட்டால் ஒரு சந்தையை என்ன பார்ப்பது என்று அப்பாற் சென்றிருப்போம். மத்தியானச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு அலட்சியமாக, சும்மா பார்த்துவிட்டு வருவோமென்று மூர் மார்க்கெட்டுக்குள் நுழைந்த நாம் இராப் போசனத்துக்குத்தான் வெளியே வந்தோம் என்றால் அதிலே ஆச்சரியப்படுவதற் கொன்றுமில்லை.

என்ன பொருள் வேண்டுமானாலும் அங்கே வாங்கிக் கொள்ளலாம். 'ஊசி தொடக்கம் உவகை யூட்டும் கன்னி வரை எதையும் பெறலாம்' என்று ஆங்கிலத்தில் உள்ள பழமொழி அந்த மூர் மார்க்கெட்டுக்கென்றே தான் ஆக்கப்பட்டதோ என்னவோ!

இலங்கையிலே அந்த விதமான எல்லாம் அடங்கிய ஒரு சந்தையைஎங்கும்காண முடியது. இலங்கையிலேயென்ன, தென் இந்தியாவிலே கூட அதற்கு இணையாக வேறொன்றை நாம் காணவில்லை.

### மலிவு விலை

பொதுவாக இந்தியாவிலே உள்ளூர்ப் பொருள்கள் மலிவாக வாங்கலாம். ஆனால் மூர்மார்க்கெட்டை விட மலிவாக வேறெந்த இடத்திலும் வாங்க முடியாது. ஒரு சோடி சப்பாத்து பதினொரு ரூபாய், ஒரு தொப்பி இரண்டேகால் ரூபாய், ஒரு மேஸ் பனியன் 75 சதம் என்று இந்த விலையிலெல்லாம் அங்குதான் பொருட்கள் வாங்கலாம்; அதுவும் நாம் இலங்கையர் என்று காட்டிக்கொள்ளாத வரையிலேதான். 'சிலோனி'லிருந்து வருகிறோம் என்று தெரிந்துவிட்டால், பின்னர் எவ்வளவு உச்சலாமோ அவ்வளவுக்கு எம்மை உச்சத் தான் பார்ப்பார்கள். இது மூர்மார்க்கெட்டுக்கு மட்டு[illegible] இந்தியாவிலுள்ள எல்லா மார்க்கெட்டுகளுக்குமுள்ள ஒரு பொது இயல்பு என்றுதான் சொல்ல வேண்டும். நாம் எவ்வளவுக்கெவ்வளவு காட்டிக் கொள்ளாமலிருக்க முயன்றாலும், அவ்வளவுக்கவ்வளவு நமது நடை உடை பாவனைகள் காட்டிக்கொடுத்து விடுகின்றன.

### பொருட் காட்சிச்சாலை

மறுநாள் சென்னை பொருட் காட்சிச் சாலையைப் பார்க்கச் சென்றோம். அங்கு இல்லாள் அகத்திருந்தது போல, இல்லாத தொன்றில்லையாய், அந்த விசாலமான மூன்றுமாடி மாளிகை செறிந்து விளங்கிற்று. ஐயாயிரம் ஆண்டுக்கு முற்பட்ட மொகெஞ்சதாரோ, ஹரப்பாகாலப் பொருட்கள் முதலாக சகல நூதனப்பொருட்களும் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு அற்புதமான இடம் அந்தப் பென்னம் பெரிய பொருட்காட்சிச்சாலைஎன்று அப்பொழுது எனக்குப்பட்டது. அதன் பின் இந்தியாவிலுள்ள வேறு எத்தனையோ பொருட் காட்சிச் சாலைகளையெல்லாம் பார்த்தாலும் சென்னைப் பொருட் காட்சிச் சாலையை விடச் சிறந்த ஒன்றை நான் எங்கும் பார்க்கவில்லை.

### மூன்று சில்லு வண்டிகள்

இலங்கையிலிருந்து செல்பவர்களை-அதுவும் கொழும்பிலிருந்துசெல்பவர்களை-இந்தியாவில் எந்தப் பாதையிலேனும் உள்ள மோட்டார் வண்டிகளின் தொகை பிரமிக்கச் செய்துவிடாது. ஆனால் இங்கில்லாத ஒன்று, அங்கு ஈக்கள் போல எங்குமிருக்கின்றன, பம்பாயை விட.

மோட்டார் இணைக்கப் பெற்றதும் இணைக்கப்பெருததுமான மூன்று சில்லு வாடகை வண்டிகள் முன்னும் பின்னுமாக எங்கு பார்த்தாலும் மொய்த்துக் கொண்டேயிருக்கும். பம்பாயில் மட்டும் அவர்கள் அதனை எடுக்கவில்லை. அந்த நகருக்கு அது ஒத்துவராதென்று.

### வானொலி நிலையம்-பல்கலைக் கழகம்

சென்னையில் கடற்கரை வீதி மிகவும் பிரசித்தமானது. அதன் வழியே மோட்டாரில் செல்வதென்றால் ரம்மியமாயிருக்கும். ஆகவே நாமும் அதன் வழியாகவே சென்று சென்னை வானொலி நிலையம், பல்கலைக்கழகப் பரீட்சைகள் நடத்தும் ஸ்தாபனம் ஆகியனவற்றைப் பார்த்துக்கொண்டு, மைலாப்பூருக்குச் சென்றோம், அங்கு கபாலீஸ்வரரையும் கலைமகளையும் பார்க்கலாமென்று.

கபாலீஸ்வரர் கோயில் புது மெருகுடன் திகழ்வதைக் கண்டோம். கோபுர வாசலிலே உள்ள சிற்ப வேலைப் பாடுகளெல்லாம் புதுக்கச் செய்யப்பட்டனவாகத் தெரிந்தன.

சென்னைக்கு வந்துவிட்டு, அங்கிருந்து படையெடுத்து இலங்கைக்குவரும் பத்திரிகைகளின் காரியாலயங்கள் சிலவற்றையாவது பார்க்காமற் போனால் பயனில்லை என்று எண்ணி, அந்தக் கருமத்திலே அடுத்தபடியாகத் தலையிட்டோம்.

(தொடரும்)

---

### சந்திரமண்டலத்தில் மனிதர் காலனி!

கி. பி. 2000-ஆவது வருஷத்திற்கு மேல் சந்திர மண்டலத்தில் ஒரு புதிய நாகரிகம் உருவாகுமென்று பிலடல்பியாவைச் சேர்ந்த ஐ. எம். லெவிட் என்ற நிபுணர் சமீபத்தில் இங்கு கூறினார். சந்திர மண்டலத்தில் மனிதர்களின் நிரந்தரமான காலனியே ஏற்பட முடியுமென்றும் ஆனால் நமக்குத் தேவையான எல்லா பொருள்களையும் பூமியிலிருந்து எடுத்துச் செல்ல வேண்டியிருக்குமாகையால் சந்திர மண்டலப் பிரயாணத்திற்கு செலவு பிரமாண்டமானதாக ஆகுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

---


# தேவை

D 6, D 8 கற்றப்பில்லர் டிராக்டர்கள் மசகிடுவோரும் (கிறீசர்ஸ்), அனுபவமுள்ள இயக்குவல்லுனர்களும் (ஒப்பறேட்டர்கள்) தேவை

கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

அசோசியேட்டட் டிராக்டர்ஸ்,
சிலோன் இன்சூரன்ஸ் கட்டிடம்,
கண்டி.



உயர்ந்தது இமய மலை!

சிறந்தது தாஜ்மகால்!

ஆனால் புகழ்பெற்றது!

## "எலைட் பினிஸ் ஜார்ஜட்"

சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி ஆகியவை தமிழன்னையின் அழகின் அணிகலன்கள்

இன்றைய நவநாகரீக நங்கையர்களின் அழகின் அணிகலன் "எலைட்"

★ சிங்காரமான தோற்றத்தைத் தருவது......

★ பூவைப்போல்,பெண்களின் மென்மையான மேனியை மலரச் செய்வது......

★ தளிர் மேனித் தங்கையர்களின் மேனியை மென்மையடையச் செய்வது......

## "எலைட் பினிஸ் ஜார்ஜட்"

கன்னியர் விரும்பும் கண்கவர் வர்ணங்களிலும் எழிலான எடுப்பான டிசைன்களிலும், "எலைட்" பெற்றுக்கொள்ளலாம்.

சுருங்காது, நிறம் மங்காது, மடிப்புக் குலையாது என்பதற்கு 'எலைட்' உத்திரவாதம்பெற்றுள்ளது.

ஏக வினியோகஸ்தர்கள்:

# குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

| | |
|---|---|
| சில்லறை விற்பனை இலாகா, | மொத்த விற்பனை இலாகா, |
| மெயின் வீதி, | 26, கெய்சர் வீதி |
| கொழும்பு | கொழும்பு. |


---

## இனி நாட்கள் இல்லை!

—கா. சி. ஆனந்தன்—

பொருளுக்கு ஆதாரம் போய்த்தேடு கின்றீர்!
பூர்வீக வரலாறு பொடியாக்கு கின்றீர்!
அருளுக்கு 'மாஸ்கோ'வை அண்ணாந்து பார்த்து
அழகான சுயமண்ணில் அவமானம் சேர்த்து
மரபுக்கு மாறாக மரந்தாவு வோரே!
மானத்தின் மீதள்ளி மலை வீச வேண்டாம்!
குறளுக்கு வித்திட்ட தமிழுக்கு ஈனம்
குலமென்று போரிட்ட குழவிக்கு வெட்கம்!

★

உண்ணாதே சோறென்று உரைசெய்ய மாற்றான்
உயிருக்குப் பொருள்தேடி அலைகின்றமூடா!
முன்னான தமிழ்சாக முதலைக்கண் ணீரை
முற்றத்தே சொரிந்திட்ட முற்போக்கு வாதி!
கண்ணான குலம்விற்று நீகொள்ளும் காசு
கல்தூக்க வைத்திட்ட நம்மோர்க்குத் தூசு!
புண்ணான நெஞ்சத்து வேல்பாய்ச்ச வேண்டாம்!
பொய்யான வழிசென்று புகழ்தேட வேண்டாம்!

★

நாளுக்கு நாளெங்கள் குலமீது தோன்றும்
நாய்கூடத் தமிழ்வாழ நாதூக்கிப் பேசும்!
பாழுக்கு நீகாட்டு பரந்தகண் ணோட்டம்!
பார்வைக்கும் முன்வேண்டும் பறிபோன [கண்கள்!
கூழுக்கு நீவீரன்! கும்மாளம் போடு!
'குண்டர்கள்' கூட்டத்தே மரியாதை தேடு!
சுழுத்து நாம்வாழ இனிநாட்கள் இல்லை!
இழிசூழ வாழாத இனமென்று அறிவாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநீதியை எதிர்த்துப் போராட முஸ்லிம்கள் பின்வாங்கக் கூடாது

## வேண்டுமானால் உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக இருக்க வேண்டும்

### ஹுஸைனின் (ரலி) யஜீதுடன் நீதிக்காகப் போராடியது நம்மவர்க்கோர் சிறந்த எடுத்துக் காட்டு

இஸ்லாமியப் புத்தாண்டு ஆரம்பமாகி விட்டது. ஹிஜ்ரத் 1377 முடிவடைந்து விட்டது. எனினும் இப்புத்தாண்டின் மகத்துவத்தை, இதில் பொதிந்திருக்கும் தத்துவத்தை உணராமல் நாம் காலத்தைக் கழிக்கிறோம். இஸ்லாமியப் புத்தாண்டின் முதல் மாதமும் முஹர்ரம் மாத முமாகிய இத்திங்களில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள், நாம் அறிந்து கொள்ள வேண்டிய கருத்தமைந்த பாடங்கள் அநேகம் இருக்கின்றன. அவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் மகத்துவம் பொருந்தியதும், நபிகள் நாதரின் அருமைப் பேரரும் அலி (ரலி) அவர்களின் ஆருயிர்ச் செல்வருமான ஹுஸைனின் (ரலி) அவர்கள் கொடுங்கோன்மைச் சித்தர்களுடன் கடும் போர் புரிந்து வீர மரணமெய்தி புனித சுவர்க்கமடைந்த சம்பவமாகும்.

#### சம்பவத்தின் மகத்துவம்

யதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் ஏந்தலுக்குத் துணையாக இளமைசிந்தாச் சேய்களை அழைத்து வீர வுரைகூறி அமர்க்களத்துக் கனுப்பி அறப்போரில் அர்ப்பணித்த வீர வனிதையரின் தீர நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் சம்பவமாகும் அது. மக்கள் தலைவனுக்குத் துணைசெய்யத் துடித்துத் தியாகத் தீயிலே குதித்துத் தங்கள் இன்னுயிரைத் துறந்த தியாக சீலர்களின் தீர நிகழ்ச்சிகளைத்தரும் சம்பவமாகும். மக்கள் தலைவனைத் தெரிந்து கொள்ளும் உரிமை மக்களுடையதே என்பது இஸ்லாத்தின் அடிப்படை நியதி. மக்களுக்குச் சிறந்த சேவை செய்பவனே சமூகத் தலைவனாவான் என்ற இஸ்லாமிய அரசியல் தத்துவத்தை அகிலத்திற்குப் பிரகடனப்படுத்திய சம்பவமாகும். "மின்னு பூணணி பாத்திமா" மணி வயிற்றுதித்த மாணிக்கம் வெற்றி வாழ் அலியென்றோதும் வேந்தகோனை பெற்றெடுத்த பொன்மேனி, நபி பெருமான் தடமார்பிலே தவழ்ந்த திருமேனி இரக்கமில்லா எதிரிகளின் ஈட்டிபல ஏற்று ஏந்துவாரின்மையால், எடுப்பான்மையால் கர்பலா களத்திலே குருதிப் பெருக்கிலே துடித்துத் துவண்ட துயர நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் சம்பவமாகும்.

#### போர்

ஹுஸைனின் (ரலி) அவர்கள் யாருடன் யுத்தம் புரிந்தார்கள்? எந்த லட்சிய நோக்கத்துடன் யுத்த களத்தில் இறங்கினார்கள்? சர்வ லோகரட்சகனான எல்லாம் வல்ல இறைவன், எவனொருவன் ஒரு மூமினை மனமுரண்டாகக் கொல்வானோ அவனுக்குக் கூலி நரகமே" என்று தன் திருமறையில் கூறுகின்றான். ஆனால் தீரர் ஹுஸைனின் (ரலி) அவர்கள் காபிருடன் யுத்தம் புரியவில்லை. ஒரு எதிர் மதவாதியுடன் போரிடவில்லை. சிரேஷ்ட சஹாபியான அஜ்ரத் அமீர் முஆவியா (ரலி) அவர்கள் மைந்தர் யஜீதுடன் போர்புரிந்தார்கள்.

#### உயிர்த் தியாகம்

யஜீது ஒரு முஸ்லிமாகவே தான் சீவித்திருந்தார். அவரது ஆட்சி முஸ்லிம் ஆட்சி முறையைத்தான் தழுவி இருந்தது. யஜீதுடைய சைனியங்களும் முஸ்லிம்களாவே இருந்தது. இப்படியிருந்தும் ஏன் ஹுஸைனின் (ரலி) அவர்கள் போர்க்களம் சென்று ஷஹீதானார்களென்பதை சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் இஸ்லாமிய ஆட்சி முறை இஸ்லாமியச் சுத்த ஜனநாயகம்

ஏ. எல். எம். இப்ராஹீம்

எப்படிப்பட்டதென்பதை உலகிற்கு அறிமுகப்படுத்தும் நோக்கமாகவேதான் ஹுஸைனின் (ரலி) அவர்கள் வீரமரணமெய்தினார்கள். இஸ்லாமிய அரசியலமைப்பை மனிதவர்க்கம் உணர வேண்டும். என்பதற்காகத்தான் அன்று கர்பலா களத்திலே உயிர்த் தியாகம் செய்யப்பட்டது. இதனை முஸ்லிம்களாகிய நம் நினைவு கூர்தல் அத்தியாவசியம்.

#### இஸ்லாமிய உணர்வு வேண்டும்

"சுவர்க்கத்திலுள்ள இளைஞர்களின் தலைவர்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் புகழப்பட்ட இமாம் ஹுஸைனின் அவர்களை நாம் கண்ணியப்படுத்த வேண்டுமானால் அவர்களின் இஸ்லாமிய உணர்ச்சி ஓரளவு நம் இதயத்தில் இருக்கிறதா என்பதைத் துருவிப் பார்க்க வேண்டும். இஸ்லாத்தின் பெருமையை- சிறப்பைக் கண்ணியப்படுத்திப் பாதுகாப்பதற்காக உயிர்த் துடிப்புடன் கிளர்ந்தெழும் உண்மையான இஸ்லாமிய உணர்வு நம் இதயத்தில் இடம்பெற வேண்டும். நீதிக்கும் நியாயத்திற்கும் வாதாடும் உண்மைப்பாதை கல்லும் முள்ளும் நிரம்பியது தான். அதன்மீது ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும் போதும் ஒரு சிறிய கர்பலா நம்மை எதிர் கொண்டழைக்கும். இமாம் ஹுஸைனைப் போல் அந்தக் கர்பலாவை நாம் துணிவுடன் மேற்கொள்ள வேண்டும். இதில் தான் ஹுஸைனுக்கு அளிக்கும் பதிலும் மரியாதையும் அடங்கியிருக்கிறது.

#### அரசியல் நெருக்கடி

இன்றைய உலகக் கண்ணோட்டத்தில் முஸ்லிம் உலகை நோக்குவோமானால் மற்றொரு கர்பலா நம்மை எதிர் நோக்கிக்கொண்டிருக்கிறதென்பதை உணரலாம். இஸ்லாமிய உலகின் கேந்திரஸ்தானமாகவும் இதயமாகவும் விளங்கும் மத்திய கிழக்கிலே உலக வல்லரசுகளின் திருவிளையாடல்களாலும் சுய நலங்களாலும் அடிக்கடி அரசியல் நெருக்கடிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இன்றைய வல்லரசுகளுக்குநீதி, நியாயம், உண்மையென்ற அரும் பெருங்கொள்கைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் கவலையில்லை. அரபு நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அளிப்பதும் இஸ்ரவேலுக்குப் பிரிட்டன் பிரான்ஸ் போன்ற நாடுகள் ஆதரவு காட்டிவந்ததிலும் இஸ்லாமிய அரசியல் உலகில் பெரும் பிரச்னைகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இவ்வல்லரசுகள் காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்ற விதமாகக் கொள்கைகளைக் கடைப்பிடித்து வருவதினால் தான் கடந்த வருடம் இஸ்ரவேலுக்கும் எகிப்துக்குமிடையில் நடந்த அரசியல் போர் உலக அரசியல்நெருக்கடியை ஏற்படுத்தியது. சுய நலத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் தன்னை அடகு வைத்த பிரிட்டன் எகிப்தில் நின்றும் பின்வாங்கவேண்டியிருந்தது மாத்திரமல்ல உலக அரசியலில் தன் செல்வாக்கை இழக்க வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்பட்டது.

#### சத்தியம் வெல்லும்

எகிப்துக்கும் இஸ்ரவேலுக்கும் நடந்த போர் யஜீதுக்கும் ஹுஸைனுக்கும் நடந்த போரைப் போன்றதுதான். நீதிக்கும் அநீதிக்கும் இடையில் நடந்த போர்தான். செங்கோலுக்கும் கொடுங்கோலுக்கும் இடையில் நடந்த போரில் கடைசியில் நீதி நியாயம் அமையப்பெற்ற செங்கோன்மையே வெற்றி பெற்று வருவதைச் சரித்திர ஏடுகள் நிரூபித்துக் காட்டுகின்றன. இதில் இருந்து உணர வேண்டியதென்ன? அசத்தியத்தையும் அநியாயத்தையும் ஆண்மையுடன் எதிர்த்து நிற்பதில் முஸ்லிம்கள் தயங்கக்கூடாது. இஸ்லாமிய அரசியல் நியதியில் முஸ்லிம்கள் சமாதானப் பிரியர்களாகவே இருக்க வேண்டும். அது மதக் கடமைகளிலும் ஒன்று. ஆனால் அநீதி எங்கு தலைகாட்டுகிறதோ அதை எதிர்த்துப் போராடவும் அவசியம் நேரிடும் போது தன் உயிரையும்தியாகம் செய்து கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். இதுதான் உண்மைத் தியாகம். ஷஹீதான வழி. கர்பலாவும் இமாம் ஹுஸைனின் அவர்களின் சம்பவமும் இதைத்தான் நிரூபிக்கிறது. இமாமவர்கள் அன்று கர்பலாவிலே மடிந்து விட்டாலும் இன்றளவும் இஸ்லாமிய சரித்திரத்திலே அவர்களின் வீரவரலாறு பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டிருக்கிறது.

### டெலிவிஷன் மூலம் இயக்கப்படும் ஆலை

மாஸ்கோ பிராந்தியத்தில் கொலோமாவிலுள்ள பெரிய இயந்திரக் கருவித் தொழிற்சாலையை தொலைவிலிருந்து கட்டுப்படுத்தும் டெலிவிஷன் சாதனம் ஒன்று சமீபத்தில் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த சாதனத்தை [illegible] விசேஷ பரிசோதனை அட்டவணை உபயோகிக்கப்படுகிறது.


## விரேனிற்ரு

நிகரற்ற நிவாரணி
★ ரத்தக் குறைவு
★ தூக்கமின்மை
★ உற்சாகக் குறைவு
★ நரம்புத் தளர்ச்சி
★ பசியின்மை
முதலானவற்றிற்கு கைகண்ட மருந்து



கிடைக்குமிடங்கள்:
பெட்டா பார்மஸி, டாம் வீதி, கொழும்பு.
ஞானசுந்தர வைத்திய சாலை, செட்டியார் தெரு, கொழும்பு.
ரோயல் பார்மஸி, யாழ்ப்பாணம்.

மிஸியர், கொழும்பு.



## நோத் சிலோன் டிரேடிங் கம்பெனி லிமிட்டெட்,

மோட்டார் வாகனங்கள் வேண்டுமா?
இரும்புக் கட்டிடச் சாமான் வேண்டுமா?
மின்சார மோட்டார் உபஉறுப்புக்கள் வேண்டுமா?

வேறென்ன வேண்டும்?

North Ceylon Trading Co. Ltd.
11/3, Stanly Road, JAFFNA.
போன்: 587. தந்தி: "யாழ்றேட்ஸ்"



## "உஷா"

ஒவ்வொரு வீட்டுப் பெண்களுக்கும் உகந்தது அழகிய தோற்றத்துடன் விளங்கும் உஷா தையல் மெஷின்களே.

எல்லா உஷா மொடல்களும் அதிநூதன தொல்லையற்ற சாதனங்களுடன் கூடியவை.

உபகரணங்கள் தேவையான அளவு பெற்றுக் கொள்ளலாம். ஏனையவற்றிலும் பார்க்க எங்களிடம் மிகவும் சகாயமான விலைகளில் உள்ளன.



விலைகளின் விபரம்:

| | |
|---|---|
| கை மொடல் விலை | ரூ. 195/- |
| மடக்கும் மொடல் விலை | ரூ. 3‌35/- |
| டிறேடில் மொடல் விலை | ரூ. 315/- |

தவணைப் பணம் செலுத்திப் பெறக் கூடிய வசதிகள் உண்டு.

ஏக விநியோகஸ்தர்கள்:
ரெய்முசன்ஸ்லிமிட்.
17, புதிய சோனகத் தெரு, கொழும்பு-12
போன்: 6‌60. தந்தி: "குர்பிர்"


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 8 மணித்தியாலத் தூக்கம் அவசியமா?

## நெப்போலியனின் நாலு மணித்தியால நித்திரை

### பகலில் படுத்தெழும்புவது நல்லதா?

### உறங்கும்போது நடக்கும் உண்மைச் சம்பவங்கள்

நம்மில் பலரிடம் ஒரு விசித்திரமான வழக்கம் இருக்கிறது. பெருமைப்பட வேண்டிய விஷயங்களுக்காக நாம் பெருமைப்புடுவதில்லை. அவற்றைப் பொருட்படுத்துவதுகூட இல்லை. ஆனால் சிறுமைப்பட வேண்டிய- வெட்கித் தலைகுனிய வேண்டிய விஷயங்களையெல்லாம் பெருமைக்குரியனவாகக் கருதி அவற்றைப் பிரமாதப்படுத்துவோம். இல்லையா?

சிலர் பெருமையாகச் சொல்லுவார்கள்: "நான் இரவு கொஞ்சம்கூடக் கண் மூடவே இல்லை." இதற்கு எதிர்மாறாக வேறு சிலர் சொல்லுவார்கள்: "பொழுதுபட 7 மணிக்குப் படுத்த நான் விடிந்து சரியாகப் பத்து மணிக்குத்தான் எழும்பினேன்— எப்படியிருக்கிறது என் நித்திரை?" இதில் அவர்களுக்கு ஒரு பெருமை.

#### 'இன்சோமினியா' வியாதி

உண்மையில் கொஞ்சமேனும் தூங்காமல் இருப்பதும், அதிகமாகத் தூங்குவதும் பெருமைக்குரிய விஷயங்கள்தானா? இல்லவே யில்லை. தூக்கம் பிடிக்காமல் இருப்பது, அதனால் தூங்காது கண்விழிப்பது ஒரு வியாதி. இன்சோமினியா (Insomnia) என்று அந்த வியாதிக்கு பெயர். பொல்லாத வியாதி. ஆளை அணுவணுவாகச் சிதைத்து நடைப்பிணமாக்கிவிடும். வேளாவேளையில் வைத்தியம் செய்து இதைக் குணப்படுத்திக்கொள்ள வேண்டும். இல்லையேல் வாழ்க்கை சுவைக்காது. சுமையாகவே தோன்றும்.

#### நித்திரை அளவோடு இருக்க வேண்டும்

இனி அதிகம் தூங்குவதைப் பார்த்தால் அதுவும் நல்லாரோக்கியத்துக்கு உகந்ததன்று. அதிகம் தூங்கி எழுந்தவர்களுக்கு சோர்வு காணும். சுறுசுறுப்பு இருக்காது. முகத்தில் செந்தழிப்பு இருக்க முடியாது. சாதாரணமாகச் சொன்னால் முகம் இருண்டு உறைந்துபோய் இருக்கும். இப்படி அதிகம் தூங்கும் பேர்வழிகளைத் தூங்குமூஞ்சிகள் என்று ஏளனமாகச் சொல்லுவார்கள்.

தூக்கம் அல்லது நித்திரை நமக்கு அவசியம் வேண்டிய ஒன்று; ஆனால் அது அளவோடு இருக்க வேண்டும். குறைந்தாலும் கெடுதி-கூடிவிட்டாலும் ஆபத்து. அப்படியானால் அந்த அளவு தான் என்ன என்பதை அறிய வேண்டாமா?

#### 8 மணி நேரம்

ஜோன் ஹன்டர் என்ற மேல்நாட்டு அறிஞர் ஒருமுறை ஹாஸ்யமாகச்சொன்னார்: "ஒரு ஆணுக்கு 6 மணித்தியால நித்திரை வேண்டும்; பெண்ணுக்கு 7 மணித்தியால நித்திரை வேண்டும்; ஆனால் மடையனுக்கோ 8 மணித்தியால நித்திரை வேண்டிக்கிடக்கிறது." ஜோன்ஹன்டர் என்பவர் இப்படி வெறுமனே ஹாஸ்யத்துக்காகச் சொன்னபோதிலும் அவர் சொல்லியதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. எல்லோருக்கும் ஒரே அளவு நித்திரை வேண்டும் என்ற வரையறை கிடையாது. ஒவ்வொருவருக்கும் அவரவரின் வயது, சரீர அமைப்பு, உழைப்பு இவற்றிற்கேற்ப கூடக்குறைய நித்திரை தேவைப்படுகிறது. என்றாலும் குழந்தைகளும் கிழவர்களும் நீங்கலாக மற்றுமுள்ள அனைவரும் பொதுவாக நாளொன்றுக்கு 8 மணித்தியாலம்வரை தூங்குகிறார்கள் என்று கொள்ளப்படுகிறது.

#### 8 மணித்தியால நித்திரை அவசியமா?

இந்த எட்டு மணித்தியால நித்திரை அவசியந்தானா என்ற கேள்வி எழுகிறது. இப்படிக் கேட்பவர்கள் சரித்திரப் பிரசித்திபெற்ற நெப்போலியன் விஷயத்தைப் பிரஸ்தாபிக்கிறார்கள். நெப்போலியனை நெப்போலியனே நாளொன்றுக்கு நாலு மணித்தியாலந்தான் தூங்கினானே, அப்படியானால் நாம் எட்டு மணித்தியாலம் தூங்க வேண்டிய அவசியம் என்ன வந்துவிட்டது என்று கேட்கிறார்கள். எட்டு மணித்தியாலம் தூங்க வேண்டும் என்ற அவசியம் என்ன என்பதை இதுவரை யாரும் ஆராய்ச்சிபண்ணிச் சொல்லவில்லை.

#### நெப்போலியனின் குறுந்துயில்

அது ஒருபுறமிருக்க நெப்போலியன் விஷயத்தை எடுத்துக்கொண்டால் அது ஒரு தனி ரகம் என்பது தெரிய வரும். நெப்போலியன் மிகுந்த விடாமுயற்சிக்காரர். ஓய்வு ஒழிச்சல் இன்றி தன் இலட்சிய ஈடேற்றத்துக்காக வாழ்க்கை பூராவும் உழைத்தவர். அவர் இரவு நேரங்களில் சுமார் 4 மணித்தியாலம் மட்டுமே தூங்கினார் என்பது உண்மை. ஆனால் அவர் விஷயத்தில் பலருக்குத்தெரியாத பிறிதொரு உண்மையும் இருக்கிறது. அவர் பகலிலும் தூங்கியிருக்கிறார். பகலில் இருந்தாற்போலத் தூங்குவதைத் தூக்கம் அல்லது நித்திரை என்று சொல்வதில்லை. அது குறுந்துயில். குறுகிய நேரத்துக்கு துயிலுதல் குறுந்துயில். ஆங்கிலத்தில் நேப் (Nap) என்று சொல்வது. இந்தக் குறுந்துயிலுக்கு கட்டிலோ பாயோ வேண்டியதில்லை. குந்தியிருக்கும் கட்டாந்தரையோ, கதிரையோ, வாங்கோ போதும். இப்படிக் குறுந்துயில்களால் நெப்போலியன் தனது நித்திரை நேரத்தைப் பூரணப்படுத்திக்கொண்டார் என்பது இப்போ பலர் வெளியிடும் அபிப்பிராயம். 8 மணித்தியால நித்திரை இல்லாவிட்டாலும் 6 மணித்தியால நித்திரையாவது அவருக்கு இருந்திருக்கிறது என்று உறுதியாகக் கூறப்படுகிறது.

#### குழந்தைகளும் கிழவர்களும்

குழந்தைகள் 8 மணித்தியாலத்துக்கு அதிகமாகத் தூங்குகிறார்கள் என்றாலும் அவை ஒரேடியாகத் தொடர்ந்து தூங்குவதில்லை. நெப்போலியன் பகலில் குறுந்துயில் கொண்டது போலக் குழந்தைகளும் நாளொன்றில் பலதடவைகளில் சிறிது சிறிது நேரத்துக்குத் தூங்குகிறார்கள். வயதானவர்களின் தூக்கமும் இந்த வகையிலேயே அமைந்துவிடுகிறது. வயது ஏற ஏற அவர்கள் குழந்தைப் பருவத்துக்குத் திரும்பிவிடுகிறார்கள்.

#### பகல் நித்திரை

இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. குழந்தைகள், கிழவர்கள் நெப்போலியன் போல எல்லோரும் பகலில் தூங்கலாமா? அது நல்லாரோக்கியத்துக்கு உகந்ததா? தூக்கம் என்றால் என்ன என்பதைச் சரியாக அறிந்துகொண்டால் இந்த கேள்வி எழுந்திருக்கமாட்டாது. நாம் தூங்குகிறோம் என்றால் பூரண ஓய்வெடுக்கிறோம்; இளைப்பாறுகிறோம் என்றுதான் பொருள். ஓய்வு பகலிலும் தேவைப்படலாம்; இரவிலும் தேவைப்படலாம். ஆனால் பகலில் ஓய்வு பலருக்குத் தேவைப்பட்டாலும் அது கிடைப்பதில்லை. கிடைப்பதற்கான சூழ்நிலை வாய்ப்பதில்லை. இந்த அசௌகரியத்தினால் ஒரேயடியாக இரவில் ஓய்வெடுக்கும் பழக்கத்தை அவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

#### தூக்கத்தின் முற்பகுதி

தூக்கத்தின் கடைசிப் பகுதி மிகவும் முக்கியமானதென்றும் அத்தருணத்திலேயே ஆழ்ந்த தூக்கம் பிடிக்கிறது என்றும் சிலர் கருதுகிறார்கள். இது தப்பு. ஆழ்ந்த தூக்கம் பிடிப்பது முற்பகுதியில். இது ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்ட உண்மை. சாதாரணமான தூக்கத்தின் போது மூளை இலேசாக வேலை செய்துகொண்டே இருக்கும். ஆனால் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும்போது மூளை கொஞ்சம்கூட வேலை செய்யாது. ஆழ்ந்த தூக்கத்துக்கு இதுதான் அதிமுக்கிய அறிகுறி. மூளை வேலை செய்கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடிக்க என்ஸிபலோகிராப் (Encephalograph) என்று சொல்லப்படும் கருவி ஒன்று இருக்கிறது. இதைக்கொண்டு பரிசோதித்துப் பார்த்ததில் தூக்கத்துல் முற்பகுதியிலேயே மூளை கொஞ்சமேனும் வேலை செய்யாதிருக்கிறது என்ற உண்மை புலப்பட்டிருக்கிறது. இரவில் பொதுவாக 12 மணிக்குப் பின் மூளை சிறுகச் சிறுக வேலை செய்ய ஆரம்பித்துவிடுகிறது என்பதும் என்ஸிபலோகிராப் என்ற இந்தக் கருவிமூலம் அறியக்கிடக்கிறது. இதனால், விடியற்காலை நித்திரையைப்பற்றி அளந்துகொட்டுபவர்களின் கூற்றுகளில் எதுவித உண்மையும் இருக்க முடியாதென்பது பெறப்படுகிறதல்லவா!

#### எல்லாம் ஓய்கின்றன

தூங்கும்போது உடலின் ஒவ்வொரு முக்கிய உறுப்பும் பூரண ஓய்வுபெறுகிறது. ஆனால் அவை எல்லாம் ஒரே நேரத்தில் தத்தமது கடமைகளை நிறுத்தி ஓய்ந்துபோவதில்லை. படிப்படியாகவே ஒவ்வொன்றும் ஓய்கிறது. முதலில் மூளையும், அடுத்து கால்கள் கைகளில் உள்ள பெரிய தசைநார்களும், தொடர்ந்து அவற்றிலுள்ள சிறிய தசைநார்களும் ஓய்வு பெறுகின்றன. அதன்பின் முகம் கண் இமைகள்-இவற்றிலுள்ள நுண்ணிய தசைநார்களும்கூட ஓய்வெடுத்துக்கொள்கின்றன. கடைசியாகப் புலன்களும் ஓய்ந்துவிடுகின்றன. முதலில் பார்வை, அடுத்துக்கேட்டல், தொடர்ந்து உணர்தல், நுகர்தல், சுற்றில் பாக்கியுள்ள அனைத்தும் ஓய்ந்துபோகின்றன. இந்த நிலையில் பூரணமான ஆழ்ந்த நித்திரை கிடைக்கிறது. மயக்கு மருந்து சாப்பிட்டாலும் இந்த அநுபவமே கிடைக்கிறது. தூங்கப் போகும்போது உடலின் உறுப்புகளும் புலன்களும் எந்த ஒழுங்கு முறைப்படி ஓய்ந்தனவோ அதே ஒழுங்கின்படி விழித்தெழும் சமயத்திலும் தத்தம் வேலையைத் தொடங்குகின்றன.

#### உருண்டு புரண்டு படுத்தல்

நித்திரையைப்பற்றி இன்னும் இரண்டொரு விஷயங்களைப் பார்ப்போம்.

நித்திரையில் கைகால்களை நீட்டி மடக்கி, ஆட்டி அசைத்து, உருண்டு புரண்டு கொள்வது நித்திரைக்கு ஊறு செய்வதாகாதா? இல்லை. தசைநார்களை இடையிடையே நித்திரையில் ஆட்டி அசைப்பது இயற்கையும் சிலருக்கு இன்றியமையாததும்கூட. இப்படிச் செய்யாவிட்டால் சிலருக்கு கழுத்துப் பிடிப்பு, கைகால் உளைவு ஏற்பட்டுவிடுகின்றது.

(11-ம் பக்கம் பார்க்க)

ஒவ்வொரு வீட்டிற்கும் ஏற்ற நூதனமான,
பெண்கள் விரும்பும் தையல் மெஷின்

"கெயிட் & நியூ"

★ அளவற்ற விதம் விதமான சித்திரத் தையல், பொத்தான் தையல், வளைவுத் தையல், பூவேலைகள், கொடி வேலைகள் செய்யும் அதிசய மெஷின்.

★ பக்கங்களுக்கியங்கும் ஊசியுடையது.

★ சிறு பிள்ளைதானும் இலகுவாகத் தைக்கலாம். ஆனால் மூளையுள்ள யந்திரம் போல் அபாரமான வேலைப்பாடுகள் செய்யக்கூடியது.

★ யந்திர வேலைக்குப் புகழ் பெற்ற ஜெர்மன் தயாரிப்பு

'கெயிட் & நியூ'

தையல் மெஷின்.

★ வேண்டிய தோற்றங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

★ 'கெயிட் & நியூ' தையல் மெஷினில் சில்லறைத் தொந்தரவுகளை நீக்கும் புது யந்திர சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது.



"HAID & NEU"

சோல் ஏஜண்டுகள்:

டொலர் கார்ப்பரேஷன்,

71, குமார வீதி, புறக்கோட்டை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிப் பொறுப்பு அவர்கள் கையில்-அதனுல் ஆட்டிப் படைக்கிருர்கள்

:0:

# ஒற்றையாட்சி ஒழிந்து கூட்டாட்சி மலர்ந்தாலன்றித் தமிழினத்துக்கு மீட்சியில்லை

:0:

## மொழிச் சமத்துவம் சட்ட மூலம் கிடைத்தாலும் நிலைமை மாருது; பிரச்னைகள் தீர்ந்து போகா

"சிங்களம் மட்டும்" சட்டத்தை மாற்றித் தமிழுக்குச் சமஅந்தஸ்து அளிக்கப்பட்டால் தமிழ் மக்களின் சகல பிரச்னைகளும் தீர்ந்துவிடும். சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லாது போய்விடும்" என்று அரசியல் அனுபவம் மிக்க, அறிவிற் சிறந்த தலைவர்கள் சிலர் கூறுகின்ருர்களே, இவர்கள் ஈழச் சரித்திரத்தின் கடந்தகால நிகழ்ச்சிகளைச் சிறிது சிந்தித்துப் பார்க்கட்டும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஆட்சிப்பீடத்திலிருந்தபோது, "தமிழுக்குச் சமஅந்தஸ்து அளிப்போம்" என்று கொள்கையளவில் ஏற்றுக்கொண்டிருந்தபோது, தமிழ் மக்களுக்கு அது இழைத்து வந்த இன்னல்களைத் தமிழ் மக்கள் மறந்துவிட்டார்களா?

### பிரஜாஉரிமை

ஆண்டு பலவாக ஈழம் உயர்ந்தோங்க வேண்டுமென்ற இலட்சியத்தோடு பனி வெயில் பாராது உதிரஞ் சிந்தி உழைத்து வருகின்ற மலைநாட்டுத் தமிழ் மக்களின் பிரஜாஉரிமை மறுக்கப்பட்டு, அரசியல் சுதந்திரம் அபகரிக்கப்பட்டு நாடற்றவர்கள் என்ற நாமதேயம் சூட்டப்பட்டு, நடுத்தெருவில் தவிக்க விடப்பட்டிருக்கின்ருர்களே! இது எதனுல்? 1954ம் ஆண்டு எலிசபெத் மகாராணியார் இலங்கைக்கு விஜயம் செய்தபோது தமிழ் மந்திரிகள் ஆட்சிபீடத்தில் இருந்தபோதும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதே இது எதனுல்? தலைமுறை தலைமுறையாகப் பாவிப்பிலிருந்து வந்த இயற்கைத் துறைமுகம் காங்கேசன் துறை இன்று சீர்குலைந்த நிலையில் காட்சியளிக்கும்பொருட்டுக் கைநெகிழ்த்தப்பட்டிருக்கின்றதே இது எதனுல்?

### சட்ட ஷரத்து செயல்படவில்லை

"சிங்களம் மட்டும்" சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு முன்பே அரசாங்க காரியாலயங்களில் தொங்கிக் கொண்டிருந்த அறிவித்தல் பலகைகள் யாவும் சிங்கள மயமாகியதே! உயர்தர கல்வி கற்பதற்குத் தகுதிவாய்ந்த தமிழ் மாணவர்கள் பலர் தங்கள் திறமைகளை விருத்தி செய்ய வசதியற்ற நிலையில் சர்வகலாசாலைத் தேர்விலே தமிழ் மாணவர்களின் விகிதாசாரம் குறைக்கப்பட்டதே! எதனுல்? சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் அரசியல் சட்ட அமைப்பில் சேர்க்கப்பட்டிருந்த 29வது ஷரத்து செயல்படாதொழிந்தது எதனுல்?

### குடியேற்றம்

தமிழ் மக்கள் வாழவேண்டிய பகுதிகளில் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாருக சிங்களவர்களைக் குடியேற்றுகின்றதே இந்த அரசாங்கம், இது எதனுல்? வருடம் நாற்பது லட்சம் ரூபா வருமானம் கொடுக்கும் சிமெந்துத் தொழிற்சாலையின் அபிவிருத்திவேலைகள் யாவும் புறக்கப்பட்டிருப்பது எதனுல்? காலத்துக்குக்காலம் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்யும் பிரமுகர்கள் அனுராதபுரியில் தடுத்து நிறுத்தப்படுவது எதனுல்? சென்ற ஜூன் ஐந்தில் காலிமுக மைதானத்திலே சத்தியாக்கிரகிகள் பொலீஸ் படை முன்னிலையிலேயே இனவெறியர்களால் தாக்கப்பட்டது எதனுல்? மட்டக்களப்பிலே, கல்லோயாக் காட்டிலே கன்னி

**ஆ. சவிரிப்பிள்ளை**

யர் கற்பைக் கயவர்கள் குறையாடினுர்களே, திரிகோணமலையில் நடராசன், மன்னுரில் தனுஷ்கோடி இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்களே, இவர்கள் செய்த கொலைக் குற்றந்தான் என்ன?

### எல்லாம் ஒற்றை ஆட்சி திட்டத்தினுல்

உரிமையை மறுத்திருக்கும் அரசாங்கத்திற்குத் தங்கள் உள்ளக் கொதிப்பைக் காட்டுவதற்கும் உரிமையில்லை என்று பறைசாற்றும் பண்பற்றவர்களைக் கேட்கின்றேன்: உரிமையைக் காக்க முனைந்தவர்களுக்கு, அதுவும் தமிழ் நாட்டிலேயே பூட்ஸ் கால்களால் உதை கிடைத்ததேன்? ஆட்சியிலே பங்கு கோரும் சமஷ்டிவாதிகளை, நாட்டைப் பிரிக்கும் வகுப்புவாதிகள் என்று வசைமாரி பொழியும் தேசியவாதிகளைக் கேட்கின்றேன்—கடந்த மந்திரி சபைகளிலே அங்கம் வகித்திருந்தும் தமிழ் மக்களின் உரிமைகளைக் காப்பாற்ற முடியாது பரிதாபகரமான நிலையில் வெளியேறிய மாஜி மந்திரிகளைக் கேட்கின்றேன்—சமாதான மகாநாடு கூட்டிச் சமரசம் பேச முனையும் சமரசவாதிகளை, சந்தர்ப்பவாதிகளைக் கேட்கின்றேன்: உள்ளத்திற் கள்ளமின்றி, அந்தரங்கசுத்தியுடன் பதில் கூற முடியுமா? இவ்வளவும் நிகழ்ந்துவிட்டது எதனுல்? ஒற்றையாட்சித் திட்டத்தினுல் என்பதை மறுக்க முடியுமா?'

### சிங்களம் செழிக்கிறது தமிழ் தாழ்கிறது

தமிழ் மக்கள் கையில் ஆட்சிப் பொறுப்பு இருந்தால் இவ்வளவும் நிகழ்ந்திருக்க முடியுமா? ஆட்சி தங்கள் கையில உள்ளதென்ற அகந்தை பிடிலன்ரே சிங்கள வகுப்புவாத அரசாங்கம் தமிழினத்தின் உரிமைகளைப் பறித்து வாட்டி வதைக்கின்றது. சிங்களம் செழிக்கிறது, தமிழ் தாழ்கிறது. சிங்களப் பிரதேசங்கள் சீர்பெறுகின்றன, தமிழ்ப் பிரதேசங்கள் தேய்வடைகின்றன!

### ஏட்டுச்சுரைக்காய்

"தமிழுக்குச் சமஅந்தஸ்து வழங்குவோம்" என்ற சட்டத்தை ஏட்டிலே எழுதிவிட்டு, நாட்டிலே, நடைமுறையிலே, அமுல் நடத்தப்போவது எந்த அரசாங்கம்? ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவுமா? தமிழ்மொழி வளர, தமிழினம் தழைக்க தமிழ்நாடு செழிக்க இன்னோர் இனத்தின் தயவை எதிர்பார்ப்பதற்குத்தானு தமிழ் மக்கள் விரும்புகிருர்கள்? மொழிப் பிரச்னை தீர்ந்துவிட்டால் தமிழ் மக்களின் பிரச்னை தீர்ந்துவிடுமா? தமிழ் நாடு சிறப்புற்றுவளர முடியுமா? சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட்டு விடுமா? சிமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிக்கப்பட்டுவிடுமா? காங்கேசன் துறைமுகம் திருத்தப்பட்டு விடுமா?

### பயங்கொள்ளித் தலைவர்கள் அறிவார்களா?

இந்தியர் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பதேன்? பிரச்னையைத் தீர்க்க முயல்பவர்கள் தமிழரல்லாத காரணத்தால், தமிழ் மக்கள் கையில் ஆட்சிப் பொறுப்பு இல்லாததால். மலைநாட்டுத் தமிழ் மக்களுக்குப் பிரஜா உரிமை கிடைப்பதை தமிழினம் தழைக்க வேண்டுமென்று விரும்பும் தமிழ்த் தலைவர்கள் விரும்பவில்லையா? விரும்பினுல் மொழிப் பிரச்னை தீர்ந்தால் பிரச்னைகள் தீர்ந்துவிடும் என்று இன்னமும் கூறுவார்களா? உயிரைத் தியாகம் செய்து, மனைவி மக்களைப் பிரிந்து, காடுமேடுகளைக் கடந்து, உரிமைப் போராட்டத்தை முன்னின்று நடத்துவதற்கு உடலில் வலுவற்று வீட்டிலே அடங்கிக் கிடக்கும் தலைவர்கள் தமிழ் மக்களின் பிரச்னைகள் என்னவென்பதை எப்படி அறிந்துகொள்ள முடியும்?

### ஒற்றை ஆட்சி ஒழிய வேண்டும்

காடைத்தனங்களுக்குப் பயந்து வீட்டில் அடைபட்டுக் கிடப்பதா? உயிருக்குப் பயந்து உரிமைகளை இழப்பதா? தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர வேண்டுமானுல் தமிழ் மக்களுக்கும் ஆட்யுரிமை வேண்டும். ஆட்சியில் பங்கு வேண்டும். அது சமஷ்டி அமைப்பில்தான் பெற முடியும். சமஷ்டிக் கட்சி மொழிக்காக மாத்திரம் போராட முன்வரவில்லை. அக்கட்சியினர் நாலு கோரிக்கைகளை வைத்தே போராட்டத்தை ஆரம்பிக்க முன்வந்துள்ளார்கள். "தமிழ் மக்களையும் நாம் புறக்கணிக்க முடியாது. நியாயமான அளவு தமிழ் உபயோம் என்ருலும் கொடுத்தே தீர வேண்டும்" என்ற முடிவுக்கு இந்த அரசாங்கம் வந்ததென்ருல் உத்தேசஆகஸ்ட்போராட்டமே அதற்குக் காரணம். இதை

(10-ம் பக்கம் பார்க்க)


**தமிழ்**
**சிரேஷ்ட பரீட்சை**

கடந்த பரீட்சையின் வினு விடைகள்!

| | |
|---|---|
| தமிழ் மொழி | ரூ. 3-00 |
| சைவ சமயம் | ரூ. 3-00 |
| ஆங்கிலம் | ரூ. 3-00 |
| எண் கணிதம் | ரூ. 3-00 |
| இலங்கை சரிதம் | ரூ. 3-00 |
| ஆங்கில கட்டுரை | ரூ. 3-00 |
| தமிழ்க் கட்டுரை | ரூ. 3-00 |

ஆங்கிலப் பரீட்சைக்கு வினு-விடைகள், குறிப்புகள் எல்லாப் பாடங்களிலும் கிடைக்கும்.

★ ஆங்கிலம்
★ ஹிந்தி

பேச, வாசிக்க, எழுத தபாலில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.


சாந்தி கல்லூரி,
தபால் பெட்டி: 1398,
கொழும்பு.



**வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்**



எவரி 5 அந்தர்



மேசைத் திராசு

எமது ஸ்தாபனத்தில் கிடைக்கும்.

**கே.என்.அப்துல்காதர்ராவுத்தர் & கம்பெனி**
312, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10



போன்:- 281. தந்தி:- "ஜுவல்லர்ஸ்"

**எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்**

உத்தரவாதம் பெற்ற வைரங்கள்!

அழகு மிக்க தங்க ஆபரணங்கள்!!

யாவற்றிற்கும் சிறந்த இடம்

**யாழ்ப்பாணம்**

# தங்கமாளிகை

★ தோற்றத்திலே கவர்ச்சி!
★ உழைப்பிலே புகழ்ச்சி!!
★ தரத்திலே உயர்ச்சி!!!

பெற்று விளங்குபவை

**எல். கே. எஸ். நகைகளே.**

நிகரற்ற அழகுற்ற எல். கே. எஸ். நகைகளையே என்றென்றும் அணியுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1957 ஜூலை மாதம் 28-ந் திகதி

194 ஏ, தட்டா தெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183

# மட்டக்களப்பு மாநாடு

உலகின் பார்வை இவ்வாரம் மட்டக்களப்பின்மீது விழுந்திருக்கிறது. இலங்கை எங்கே இருக்கிறது என்று கேட்டால், அது கொழும்பில் இருக்கிறது என்று பதிலளிக்கும் பக்குவத்தில் இருந்தவர்கள்கூட இன்று மட்டக்களப்பைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டது மட்டுமல்லாமல், அதன் முக்கியத்துவத்தையும் நன்கு உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒருகாலத்தில், பின்தங்கிய பிரதேசமாகக் கருதப்பட்ட கிழக்கு மாகாணம் இன்று உலகின் பார்வையைத் தன்பக்கம் இழுக்கக்கூடிய அளவுக்கு முக்கியத்துவம் பெற்று முன்னணியில் நிற்கிறதென்றால், உண்மையிலேயே அது பெருமைப்பட வேண்டிய விஷயம். இந்தப் பெருமை யாரால், எப்படி ஏற்பட்டது? என்பதை ஆராயப் புகுந்தால், தமிழரசுக் கட்சி இதற்காகப் பட்ட பாடும், ஆற்றிய தொண்டும் நம் கண்முன்னே தோன்றிப் பழைய நினைவுகளைக் கிளறிவிடுகின்றன.

சென்ற வருடம் திருமலையிலே தமிழரசுக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. அதன்கீழ் ஈழமெங்குமுள்ள தமிழ் பேசும் மக்கள் பெருந்தொகையாகக் கூடினார்கள். "இனவெறிகொண்ட சிங்கள அரசாங்கத்தின் கெடுபிடி அத்துமீறிப் போய்விட்டது. அதன் ஒரவஞ்சக நடவடிக்கைகள் நம்மை ஒழித்துக்கட்டும் உத்தேசம் உடையனவாகவிருக்கின்றன. சிங்கள ஆட்சியில் நமக்கு மீட்சியே இல்லை. இலங்கையில் ஒற்றையாட்சித் திட்டம் அமுலில் இருக்கும்வரை தமிழ் பேசும் மக்கள் உரிமை பெற வழியில்லை-தலைநிமிர்ந்து தன்மானத்துடன் வாழ மார்க்கமில்லை" என்பதை அனைவரும் அறிந்து கொள்ளும்படி தெளிவாகவும் வெளிப்படையாகவும் தமிழரசுக் கட்சியினர் அங்கே கூறிவைத்தனர்.

குறைகளைக் கூறிய அவர்கள் அவற்றை நிவர்த்தி செய்ய வழியும் வகுத்தார்கள். நாலு கோரிக்கைகளை அரசாங்கத்துக்கு அனுப்பி அவற்றைப் பூர்த்தி செய்ய ஓராண்டுக் காலம் அவகாசமும் கொடுத்தார்கள். இந்த ஒரு வருடத் தவணைக்குள் அரசாங்கம் ஆவன செய்யாது ஏனோ தானோ என்று முன்போல் இருந்துவிட்டால் தாம் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம் என்று இறுதிஎச்சரிக்கையும் செய்தார்கள். இவை உலகின் கவனத்தை அப்போது ஈர்த்த நிகழ்ச்சிகள். இவற்றால் திருகோணமலைக்கு மட்டுமல்லாமல் கிழக்கு மாகாணம் முழுவதற்குமே பெயரும் புகழும் கிடைத்ததை யாரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது.

அரசாங்கத்துக்கு, கடந்த ஆண்டு கொடுத்த தவணைக் காலம் முடியும் சமயத்தில் நடக்கும் தமிழரசுக் கட்சியின் விசேஷ தேசிய மாநாடு மட்டக்களப்பில் இடம் பெறுகிறது. இம்மாநாடு, கூடும் காலமும் நோக்கமும் குறித்து மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துவிடுகிறது. எனவேதான் அகில உலகமும் இன்று மட்டக்களப்பின்மேல் பார்வையைச் செலுத்தியுள்ளது.

தமிழரசுக் கட்சி தனது முக்கிய மாநாடுகளை கிழக்கு மாகாணத்தில் நடத்துவதன் நோக்கங்களில் ஒன்று இன்று நிறைவேறிவிட்டது. அதாவது கிழக்கு மாகாணம், வடக்கு-மேற்கு மாகாணங்களைப்போல உலகறிந்த ஒன்றாக விளங்க வேண்டும் என்ற அதன் எண்ணம் ஈடேறிவிட்டது. இது மட்டுமே தமிழரசுக் கட்சியின் அபிலாட்சையாக இருந்திருக்குமானால் அதுபற்றி நாம் மகிழ்ச்சியடைவதற்கில்லை. கிழக்கு மாகாணத்தை உலகறியச் செய்வது ஒருபுறமிருக்க, வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் ஒன்றுபடுத்தும் முயற்சியிலும் அது ஈடுபட்டு வந்திருக்கிறது.

வடமாகாணத்திலும் தமிழர்கள்தான் வசிக்கிறார்கள்; கிழக்குமாகாணத்திலும்அப்படியே. ஆயினும், ஏனோ, எப்படியோ தமிழர்களிடையே பிரிவினைகள் வளர்ந்து வந்தன. மட்டக்களப்புத் தமிழர், திருகோணமலைத் தமிழர், யாழ்ப்பாணத் தமிழர் என்றெல்லாம் பாகுபாடுகள் மலிந்திருந்தன. ஒருவர் மற்றவரிலும் பார்க்க உயர்ந்தவர் எனக் கருதப்பட்டார். ஏற்றத் தாழ்வு பேசப்பட்டது. சென்ற காலங்களில், எல்லாம் சில தமிழ் அரசியல் தலைவர்கள் வடமாகாணம், அதிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலேயே, தமிழர்கள் வசிக்கிறார்கள் எனக்கருதி நடந்துவந்தார்கள். இவ்விதமாகப் பிரிந்திருந்த இருமாகாண மக்களையும்ஒற்றுமைப்படுத்தி அவர்களிடையே சௌஜன்யம் வளரச்செய்த பெருமை தமிழரசுக்கட்சி ஒன்றுக்கே உரியது.

தமிழரசுக் கட்சியின் சளையாத உழைப்பால் இருமாகாணமக்களுக்குமிடையேமலர்ந்தஐக்கியத்தைவளர்க்க கடந்த வருடத்துத் திருமலை மாநாடு பெரிதும் உதவியது. மட்டக்களப்பு மாநாடு அதை மேலும் வளர்த்துப் பாதுகாக்க உதவும் என்றே நம்புகிறோம். இதற்கான சூழ்நிலை மட்டக்களப்பிலே காணப்படுவதை மாநாட்டுக்குச் சென்றிருக்கும் நமது விசேஷ நிருபர் தரும் தகவல் சூசகமாகத் தெரிவிக்கிறது.

மாநாட்டில் ஆராயப்படவிருக்கும் விஷயங்களும் வெளியிடப்படவிருக்கும் தகவல்களும் என்ன என்பதை அறிவதற்காக மட்டக்களப்பின்மேல் பார்வையைச் செலுத்திக்கொண்டிருக்கும் அகில உலகத்துக்கும், மட்டக்களப்பு மாநாடு சந்தேகத்துக்கிடமின்றித் தெரிவிக்கவிருக்கும் முக்கிய செய்திகளில் ஒன்று, தமிழ் பேசும் மக்கள் எங்கு வாழ்ந்தாலும் எல்லோரும் ஓரினம்—எல்லோரும் ஓர் குலம் என்பதை அவர்கள் உணர்ந்து ஒழுகத் தலைப்பட்டுவிட்டார்கள் என்பதாகும்.

# மட்டக்களப்பிலே தேசிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளிட்ட உலக நாடுகள் பலவற்றின் கொடிகள் கம்பீரமாகப் பறந்துகொண்டிருக்கின்றன. இவற்றோடு மூவர்ணத் தமிழரசுக் கொடியும் பட்டொளி வீசிப் பறப்பது கண்ணுக்கும் கருத்துக்கும் பெரு விருந்தாய் அமைந்திருக்கிறது. இது தவிர, அரசியல் மாநாடு ஞாயிறன்று மைதானத்தில் ஆரம்பிக்கப்படும்போது தமிழரசு மூவர்ணக் கொடி அதிகார பூர்வமாக, நடு நாயகமான இடத்தில் உயர்த்தி வைக்கப்படும் என்று தெரிகிறது.

### சைக்கிள் ஊர்வலம்

மாநாடு ஆரம்பமாகும் வெள்ளியன்று 68 மைல் சைக்கிள் ஊர்வலம் ஒன்று நடைபெறவிருக்கிறது. தெற்கே திருக்கோவிலிலிருந்தும் வடக்கே வாழைச்சேனையிலிருந்தும் ஊர்வலம் புறப்படும். இடையில் உள்ள ஊர்களிலிருந்து பல சைக்கிள்வீரர்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வர். சைக்கிள் ஊர்வலம் மட்டக்களப்பை அடைந்ததும் அதற்கு பிரமாதமான வரவேற்பு அங்கு அளிக்கப்படும் என்று தெரிகிறது.

### பூரண கும்பம்

இது தவிர அரசியல் மாநாடு ஆரம்பமாகும் ஞாயிறன்று அரசடியில் இருந்து பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று புறப்பட்டு மைதானத்தை அடையவிருக்கிறது. அலங்கரிக்கப்பட்ட வீதிகள் வழியாக இந்த ஊர்வலம் செல்லும், அப்போது வீட்டுக்கு வீடு தாய்மார்கள் பூரணகும்பங்கள் வைத்து ஊர்வலத்தை வரவேற்று வாழ்த்தி வழியனுப்புவர்.

### தொண்டர்கள்

மட்டக்களப்பு மாநாட்டுக்கு இலங்கையில் எல்லாப் பாகங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் வந்து கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களையெல்லாம் வரவேற்று உபசரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மட்டக்களப்பு புகைவண்டி நிலையத்தில் தொண்டர்கள் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் வெளியூர்களிலிருந்து வருவோரை மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லுவார்கள்.

### உணவு ஜாகை

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவு, ஜாகை வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அரசடிப் பாடசாலை, தாண்டவன் வெளி ரோமன் கத்தோலிக்க பாடசாலை, சென் மேரீஸ் கல்லூரி ஆகிய இடங்களில் வெளியூர் அன்பர்கள் தங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. அரசடிப் பாடசாலையில் எல்லோருக்கும் உணவு தயாரிக்கப்படும் என்றும் ஏனைய இரு இடங்களிலும் தங்குபவர்களுக்கு அது பார்சல் பண்ணி அனுப்பப்படும் என்றும் தெரிகிறது.

### பொது மக்கள் உதவி

மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளியூர் அன்பர்களின் உணவு, மற்றும் சௌகரியங்களைக் கவனிப்பதற்கு ஆகும் பெருந்தொகைச் செலவுக்கு அநேகமாக மட்டக்களப்பின் எல்லா ஊர்ப் பெருமக்களும் மனமுவந்து பணமும் பொருளும் வழங்கியுள்ளதாகத்தெரிகிறது.

### நிகழ்ச்சி நிரல்

மாநாடு, மூன்று நாட்களுக்கு, மாதர் மாநாடு தொழிலாளர் மாநாடு, அரசியல் மாநாடு என்று மூன்று பிரிவுகளாக நடைபெறும். நிகழ்ச்சி நிரல் கீழே தரப்படுகிறது.

26-7-57 (1) ஊர்வலம் பிற்பகல் திருக்கோவில் வாழைச்சேனை முதலிய இடங்களிலிருந்துவரும்சைக்கிள் அணிவகுப்பும் ஊர்வலமும் மட்டக்களப்பு நகரை அடைதல்.

(2) மாலை 5-30 மணிக்கு ஊர்வலம் மட்டக்களப்பு மைதானத்தை அடைந்ததும் மட்டக்களப்பு நகரசபைத் தலைவர் திரு. ஏ. எஸ். டீ. கனகசபை அவர்கள் வரவேற்புரை கூறலும் நன்றியுரை நவிலலும்.

27-7-57 காலை: மாதர் மாநாடு.

இடம்: மட்டக்களப்பு நகர மண்டபம்.

தலைவி: திருமதி டபிள்யூ. உலகசேகரம் அவர்கள்.

மாலை: தொழிலாளர் மாநாடு.

இடம்: மட்டக்களப்பு மைதானம்.

தலைவர்: திரு. கே. வைரமுத்து அவர்கள்.

28-7-57 காலை: கட்சி அரசியல் மாநாடு

இடம்: மட்டக்களப்பு நகர மண்டபம்.

தலைவர்: திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள்

(1) தலைமைப் பேருரை.

(2) சமாதானம் அல்லது போராட்டம்பற்றிய தீர்மானங்கள் விவாதிக்கப்படலும் நிறைவேற்றப்படலும்.

மாலை: மாபெரும் பொதுக் கூட்டம்.

இடம்: மட்டக்களப்பு மைதானம்.

தலைவர்: திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள்.

(1) காலை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பிரகடனஞ்செய்யப்படல்.

(2) சொற்பொழிவுகள்.

# முஸ்லிம் பகுதியில்........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூதூர்ப் பகுதியில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் இன்றையத் தேவைக்கேற்ற வகையில் அமைந்த நல்ல பள்ளிவாசல்கள் அங்கு கிடையாது. இதுபற்றி அரசாங்கம் கவலைகொண்டதுண்டா? இந்தக் குறையைப் போக்கக் கண்டு விரலைத்தானும் அரசாங்கம் அசைத்ததுண்டா? மூதூர்ப் பகுதியில் உள்ள சிங்களவர்களுக்கு சேருவாவெலையில் பெரியதோர் பௌத்த கோயில் இருக்கிறது. அப்படி இருக்க இன்னும் அவர்களுக்குக் கோயில் கட்டிக் கொடுக்க எண்ணும் அரசாங்கம் முஸ்லிம்களுக்கு இத்துறையில் ஏதும் செய்யாமல் இருப்பதன் அர்த்தம் என்ன? அவர்கள் படிப்படியாக பௌத்தத்தைத் தழுவிக்கொள்ள வேண்டுமென்ற பைத்தியக்காரத்தனமான எண்ணமா? என்று முஸ்லிம்கள் கொதித்தெழுகிறார்கள். இந்த நிலையில் மூதூர்த் தொகுதி எம். பி. ஜனாப் முகம்மது அலி ஒற்றுமை உபதேசம் செய்வதில் திருப்தியடைந்திருக்கிறார்.

### தமிழர்கள் ஆத்திரம்

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் மூதூர்ப் பகுதியில் வாழும் தமிழர்களும் மிகவும் ஆத்திரமடைந்திருப்பதாக அறிய வருகிறது. சின்னக் கோவில், பெரிய கோவில் என்று இரண்டு பூர்விக மாரியம்மன் கோவில்கள் அங்கு பாழடைந்த நிலையில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. அவற்றைப் புதுப்பிக்கும் முயற்சியில் அரசாங்கம் இறங்கினாலென்ன? வலுவில் கொண்டுவந்து நமக்குள் புகுத்தி வைத்துள்ள சிங்களவர்களுக்கு புதுப் புதுக் கோவில்கள் கட்ட முனையும் அரசாங்கம் நமக்கு உள்ள பழைய கோயில்களையாவது புதுப்பித்துத் தரக் கூடாதா என்று அவர்கள் கேட்கிறார்கள்.

# பிச்சைச் சம்பளம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து அங்கீகாரம் பெற்றார்.

### சிங்களவர்களுக்கு மட்டும் உதவி

ஆனால் இந்தப் பணம் இப்போது சிங்களப் பிரதேசங்களிலுள்ள சிங்கள மக்களுக்கு மட்டும் பெரும்பாலும் பகிர்ந்தளிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு ஆகிய பகுதிகள் முற்றாகப் புறக்கணிக்கின்றனவென்றும் திருகோணமலையிலும், வவுனியாவிலும் உள்ள சிங்களவர்களுக்கே பெரும்பாலும் நிதி உதவி செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தகவல் கிடைத்திருக்கிறது.

### யாழ்ப்பாணத்து விண்ணப்பங்கள்

[illegible] உதவி நிதி [illegible] 'பிச்சைச் சம்பளம்' கோரி யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து சுமார் 3000 விண்ணப்பங்களும், மட்டக்களப்பிலிருந்து சுமார் 1100 விண்ணப்பங்களும், மன்னாரிலிருந்து சுமார் 150 விண்ணப்பங்களும் நீண்டகாலமாக கவனிப்பாரின்றிக் காத்துக் கிடக்கின்றனவாம்?

### புகார்

சிங்களப் பகுதிகளுக்கு மேல்மிச்சமாக நிதி ஒதுக்கப்பட்டதால் பெருந்தொகையான பணம் அங்கெல்லாம் தேங்கிக்கிடப்பதாகவும், தமிழ்ப் பகுதிகளில் அவசியமான தேவையிருந்தும் அங்கு நிதித் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாகவும், சிங்களப் பகுதிகளில் தேங்கிக்கிடக்கும் மேலதிக நிதியைத் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு வழங்க சம்பந்தப்பட்ட அமைச்சர் சம்ம[illegible] தெரிவிக்கிறார் இல்லையென்றும் புகார் செய்யப்படுகிறது.

# ஆட்சி மொழி.....

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய வசதி செய்து கொடுக்கப்படும்.

### மலைநாட்டுத் தமிழர்

மலைநாட்டுத் தமிழர்களின் பிரஜா உரிமை, பிரஜா உரிமைச் சட்டத் திருத்தம் ஆகிய விஷயங்கள் பற்றித் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் தங்கள் கருத்தை வெளியிட்டு, விரைவில் அவற்றிற்கு தீர்வு காண வேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

இப்பிரச்னை விரைவில் கவனிக்கப்படும் என்று பிரதமர் தெரியப்படுத்தினார்.

### சத்தியாக்கிரகம் வாபஸ்

இந்த முடிவுகளின் பேரில் தமிழரசுக் கட்சி தனது உத்தேச சத்தியாக்கிரகத்தை வாபஸ் பெறுவதாகத் தெரியப்படுத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மொழி தமிழ் தான் வடக்கு கிழக்கு மாகாணங்களில்

## முக்கிய பிரச்னைகளில் சுமுகமான தீர்வு

## ஆகஸ்ட் அறப்போர் கைவிடப்பட்டது

### பிரதமர்—தமிழரசுக்கட்சியினர் சந்திப்பின் பெறுபேறு

(சுதந்திரன் நிருபர்)

—கொழும்பு ஜூலை 25

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழே ஆட்சி மொழியாக இருக்கும். பிரதமர்—தமிழரசுக் கட்சியினர் நாட்டின் நெருக்கடியான பிரச்னைகள் பற்றிச் சந்தித்துப் பேசியதன் பெறு பேறுகளில் இது ஒன்றாகும்.

தமிழ், இலங்கை தேசிய சிறுபான்மை இனத்தின் மொழி என்று அங்கீகரிக்கப்படும். சட்ட மூலம் இது உறுதிப்படுத்தப்படும். இம்முடிவும் பிரஸ்தாப பேச்சு வார்த்தைகளின்போதே செய்யப்பட்டது.

முக்கிய பிரச்னைகள் பலவற்றிலும் சுமுகமான தீர்வு காணப்பட்டிருக்கிறது. எனவே தமிழரசுக் கட்சியினர் தமது உத்தேச ஆகஸ்ட் அறப்போரை வாபஸ் பெறுவதாக அறிவித்துள்ளனர்.

இன்று தமிழரசுக் கட்சியினரும் பிரதமர்திரு. பண்டாரநாயகாவும் ஐந்தாவது தடவையாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். அதன்பின் இருசாராரும் கைச்சாத்திட்டு வெளியிட்டுள்ள அதிகார பூர்வமான அறிக்கையொன்றில் மேற்படி தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன.

அவ் அறிக்கையில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:

**ஆரம்பத்தில் நெருக்கடி**

நாட்டிலே நெருக்கடியை உண்டுபண்ணும் வகையில் வளர்ந்து வந்த அபிப்பிராய பேதங்களுக்கு முடிவு காணுமுகமாகத் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் பிரதமரோடு தொடர்ச்சியாகப் பேச்சுவார்த்தைகள்நடத்தி வந்தார்கள். ஆரம்பக் கட்டத்தில், தமிழரசுக்கட்சியின் கோரிக்கைகள் சிலவற்றிற்குப் பிரதமர் இணங்குவது அசாத்தியம் என்பது புலனாயிற்று. சமஷ்டி அரசமைப்பு ஏற்படுத்துவதையோ, பிரதேச சுயாட்சி வழங்குவதையோ அல்லது அரசாங்க மொழி மசோதாவைப் பாதிக்கக் கூடிய எந்த நடவடிக்கையையும் எடுப்பது பற்றியோ அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தான் விவாதிக்க முடியாமலிருப்பதாகப் பிரதமர் தெரிவித்தார்.

**பிரதமர் யோசனை**

அப்படியானால் தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகளைக் கைவிடாமலும், அதே தருணத்தில் தாழ்ந்து விட்டுக் கொடுக்காமலும்இருக்கக்கூடியதாக நிலையைச் சீர்படுத்துவதற்கு வழிதேட முடியுமா என்ற கேள்வி எழுந்தது.

இந்தக் கட்டத்தில், பிரதமர் ஒரு ஆலோசனை கூறினார். தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகளில் சிலவற்றை நியாயமாக நிறைவேற்ற, அரசாங்கம் தயாரித்துள்ள பிரதேசக் கவுன்ஸில் மசோதாவில் வகைசெய்யலாமா என்று பார்க்கும்படி அவர் சொன்னார். இதன் பிரகாரம் ஓர் உடன்படிக்கை செய்யப்பட்டது.

**மீண்டும் மந்தம்**

மொழிப்பிரச்னை சம்பந்தமாக தமிழரசுக்கட்சி தனது கொள்கையில் பிடிவாதமாக நின்றது. ஆனால் இந்த விஷயத்தில் பிரதமரின் நிலை குறித்து தமிழரசுக் கட்சியினர் நிலைமையைச்சீர்படுத்தும் வகையில் ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். தமிழ், நாட்டின் ஓர் தேசியமொழி என்று அங்கீகரிக்கப்பட வேண்டியதும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்க நிர்வாகம் தமிழில் நடக்கவேண்டியதும் தங்களுக்கு அவசியமானவை என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். பிரதமர் முன் சொன்னதுபோல, அரசாங்க மொழி மசோதாவைப் பாதிக்கக்கூடிய எந்த நடவடிக்கையையும் தன்னால் எடுக்கமுடியாது என்று கூறினார்.

**ஆட்சி மொழி**

பேச்சு வார்த்தைகளின் பின் தமிழ், இலங்கையின் தேசிய சிறுபான்மை இனத்தின் மொழி என்று அங்கீகரிக்கப்படுமென்றும் சட்டத்தில் இடம் பெறும் என்றும் ஒத்துக்கொள்ளப்பட்டது. சட்டம்பிரதமரின் நாலு அம்சத் திட்டத்தில் அரசாங்க மொழி மசோதாவைப் பாதிக்காத வகையில் அமைய வேண்டுமென்றும் ஒப்புக்கொள்ளப் பட்டது. இந்த அடிப்படையில், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஆட்சி மொழி தமிழாகவே இருக்கும். வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசாத சிறுபான்மையினருக்கு வேண்

(8-ம் பக்கம் பார்க்க)





இரத்தக் கோளாறுகளா?
தயங்காதீர்கள்!



மேற்படி இரத்தக் கோளாறுகள் யாவற்றையும், கிளார்க்ஸ் பிளட் மிக்ஸரை உட்கொள்வதன்மூலம் ஆரம்ப காலத்திலேயே சொஸ்தப்படுத்திவிடலாம். இரத்தச் சுத்திகரிப்புக்கு இன்றியமையாததொன்றென உலகப் பிரசித்திபெற்ற இந்த பழமையான நிவாரணி தனது இரத்தக் குழாயில் தங்கி நிற்கும் அசுத்தங்களால் ஏற்படக்கூடிய சகல தொந்தரவுகளையும் மிக லாவகமாக குணப்படுத்துகின்றது.

இந்த நிவாரணியை அருந்துவதன் மூலம் சாதாரண கீல்வாதம், கொப்புளம், வலியெடுக்கும் மூட்டுகள் மற்றும் இது போன்ற இரத்த சரும உபாதைகள் சொஸ்தமடையும்.

கிளார்க்ஸ்

CLARKE'S
BLOOD PURIFYING MEDICINE
BLOOD MIXTURE
REGD TRADE MARK

இரத்தச் சுத்திகரிப்பு நிவாரணி
பிளட் மிக்ஸர்

எல்லா வியாபாரிகளிடத்திலும் வில்லைகளாகவும் அல்லது திரவ பதார்த்தமாகவும் உண்டு.
எல்லா பெரிய மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள்:-
கொழும்பு ஏஜென்சீஸ் லிமிட்டெட்
355, டீன்ஸ் ரோட், கொழும்பு.
டெலிபோன்: 94211. தபால் பெட்டி: 913






Genuine
EAU DE COLOGNE
அசல் ஒடிக்கோலன்

தலையிடிபோன்ற நோயகளுக்கு நிகரற்ற நிவாரணி
அலங்காரத்துக்கு தலைசிறந்த அழகுசாதனம்

ராஜா & பீரிஸ் லிமிட்டெட்
கொழும்பு



மல்லர்ட்
வானொலிப் பெட்டி

மொடல் இல. MUS/122
ஏ. ஸி—டீ. ஸி.

ரூபாய் 150-00

ஒவ்வொரு வீட்டிற்கும் மல்லர்ட் வானொலி பெட்டி அவசியம் தேவை

இலங்கை முழுவதிலுமுள்ள மல்லர்ட் விநியோகஸ்தர்களிடத்திலும் கிடைக்கும்

Mullard

ஸோல் ஏஜெண்டுகள்:-
கொழும்பு ஏஜென்சீஸ் லிமிட்டெட்
355 டீன்ஸ் ரோட், கொழும்பு.
தபால் பெட்டி 913
டெலிபோன்: 94211 தந்தி: கொலாக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்தின் தேசிய விடுதலைப் போரில்

## சியாங்கை சேக் தம்பதிகள்

## கொலைவரினும் நாட்டை

### காட்டிக்கொடேன் என்று கணவன் பிடிவாதம்

### சிறையிலே வெள்ளையரிடம் தலைவியின் உரிமை முழக்கம்

### விடுதலை இன்றேல் விபரீதம் விளையுமென இறுதி எச்சரிக்கை

முதலாவது உலக மகா யுத்தத்தின் பின் உலகின் பல பாகங்களை ஆங்லேயர் பிடித்து ஆட்சி செலுத்தி வந்தார்கள். சீன தேசமும் அவர்கள் பிடியில் சிக்கியது. சுதந்திரமாகச் சுபீட்சமாக வாழ்ந்த சீன மக்களுக்கு அன்னியரின் -ஆங்கிலேயரின் ஆட்சி ஒரு சாபத் திட்டாக இருந்தது.

**சுதந்திர தாகம்**

அகண்ட வானவெளியிலே சுதந்திரமாகப் பறந்து திரிந்த பறவையைப்பிடித்து இரும்புக் கம்பிகளாலான கூண்டிலே அடைத்துவைத்துப்பாலும் பழமும் கொடுத்தாலும் அது பறந்துபோய் விடத்தான் விரும்பும். அது போலத்தான் சீன மக்களும் ஆங்கிலேயரின் ஆட்சியினின்று விடுதலையடையத் துடித்தார்கள். அவர்கள் ஆட்சியை எதிர்த்து உள்நாட்டுக் கலவரங்களை ஏற்படுத்தினார்கள். எந்த இனமும், எந்த இனத்துக்கும், எந்தக் காரணம் கொண்டும், எந்தநேரமும் அடிமையாக வாழ விரும்புவதில்லை. பூமி அமுக்கம் கூடிய இடத்தில் தான் எரிமலை ஏற்படுகிறது சீனவிலே பிரிட்டிஷாரின் அக்கிரமங்களும் அடக்குமுறையும் கூடக் கூட சீன மக்களின் சிந்தனையும் சுதந்திர தாகமும் பெருக்கெடுத்தோட முற்பட்டது.

பூ. செல்லத்துரை

**சியாங்கைசேக் கைது**

சீனவின் சுதந்திரப் படைக்கு சியாங்கைசேக் தலைமை வகுத்தான். அவனை ஆட்சியாளர் கைது செய்ய உத்தரவிட்டார்கள். இதன் பேரிலே 1936-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் தேதி சீனவின் தலைவன் சியாங்கை சேக் கைதியாக்கப்பட்டான். செய்தி செவிக் கேறியதும் சீன மக்கள் சீறி எழுந்தார்கள். சிப்பாய்கள் சினந்தெழுந்து சிறையை நோக்கி நடை போட்டார்கள்.

**சிறைநோக்கி சுந்தரி**

அதே நேரம் ஒரு பெண்மணி முன்வந்து சிப்பாய்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு சியாங்கை சேக்கிருக்கும் சிறைச்சாலைக்கு விமான மூலம் சென்றார். சிறைச்சாலையை வந்தடைந்ததும் தனது துப்பாக்கியைஎடுத்து கூடவந்த சிப்பாயிடம் கொடுத்து, ''என்னை யாராவது கைது செய்தால் முதலில் என்னையே சுட்டுவிடு'' என்று உத்தரவு கொடுத்து விட்டு உள்ளே சென்றார்.

**நிபந்தனையை ஏற்க மறுப்பு**

அங்கே சியாங்கைசேக், கைது செய்தவர்களின் நிபந்தனையை ஏற்று விடுதலையடைய மறுத்துவிட்டார். ''உங்களுடன் சமாதானம் செய்துகொண்டு சீனவை காட்டிக்கொடுப்பதா?'' என்று வெள்ளையரிடம் கூறிவிட்டார் 'என்னை உடனே கொன்றுவிடுங்கள் அல்லது என்னை என் தகுதிக்கேற்றவாறு நடத்துங்கள்'' என்று அவர் கூறிக்கொண்டிருக்கும் போதே அவரின் ஆருயிர்க் காதலியான மேடம் சியாங்கை அங்கே காட்சியளித்தாள்.

**எச்சரிக்கை**

கண்டதும் காதலியை நோக்கி ''நீ இங்கே வர வேண்டாம். வந்தால் உன்னுயிருக்காபத்து'' என்று அவர் எச்சரித்தார். ஆனால் மேடம் சியாங் அதைப் பொருட்படுத்தாது, அன்று தமிழ் நாட்டிலே காதலனுயிருக்காக கால தேவனையே எதிர்த்த சாவித்திரிபோல, தன் காதலனை சியாங்கை சேக்கை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று கைது செய்தவர்களிடம் இரண்டு நாட்களாக வாதாடினார். கடைசியில் விடுதலை செய்யாவிடில் உள்நாட்டுக் கலவரம் ஏற்படும் என்று எச்சரிக்கை செய்தார்.

**விடுதலை**

இதன் பேரிலே 1936 ஆண்டு மார்கழி மாதம் 25 தேதி சியாங்கை சேக் விடுதலையடைந்தான். சீன தேசம் வெள்ளையர் பிடியிலிருந்து விடுதலையடைவதற்கு இந் நிகழ்ச்சி ஓர் முன்னோடியாய் அமைந்தது.


பிரிட்டிஷ் வைத்திய விஞ்ஞானிகளின்

அரிய சாதனை

பிரித்தானிய வைத்திய ஆராய்ச்சியாளர்களின் இடைவிடாத முயற்சியின் காரணமாக வாழ்க்கையில் உற்சாக மற்றவர்களுக்கு ஓர் நல்ல செய்தி காத்திருக்கிறது.

நீங்கள் எப்போதாவது அல்லது எப்பொழுதுமே கீழ்கண்ட குறைபாடுகளினால் அவதிப்படுகிறீர்களா?

★ காலத்துக்கு முன்பே வயதில் அதிக தோற்றம்
★ நரம்புத் தளர்ச்சி
★ திடசித்தமின்மை
★ தாழ்வு மனப்பான்மை
★ பசிக் குறைவு, கண்பார்வை குறைந்து வருதல்
★ வாழ்க்கையில் நம்பிக்கையின்மை

இவைகளில் ஏதாவது உங்களைத் துன்புறுத்திவருவதுண்டானல் உங்கள் சரீரத்திலுள்ள பிட்யூட்டரி, தைராயிட் போன்ற சுரப்பிகள் (Glands) சரிவர செயல்படவில்லை என்பது நிச்சயம். அப்படியானல் நீங்கள் கீழ்கண்ட 'சுரப்பி' சிகிச்சைகளில் ஒன்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

★ டெஸ்ட்ரோன்ஸ் (Testrones)
ஆண்களுக்கு மாத்திரம்
100 வில்லைகள் 7/50, தபால் செலவு 50 சதம்

★ விரியூல்ஸ் (Virules)
ஆண்களுக்கு — நாள்பட்ட வியாதிக்கு
100 வில்லைகள் 10-50 தபால் செலவு 75 சதம்

★ ஓவரோன்ஸ் (Overones)
(பெண்களுக்கு)
100 வில்லைகள் 7/50 தபால் செலவு 50 சதம்

(சுதந்திரனைக் குறிப்பிட்டு எழுதினல் தபால் செலவு இனம்.)

இவை இங்கிலாந்தில் மிகவும் பிரசித்திபெற்ற பிரிட்டிஷ் கிளாண்டுலர் புரோடக்ட்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது.

'வாழ்க்கையின் சாரம்' என்ற சிறு புஸ்தகம் (ஆங்கிலத்தில் மட்டும்) 25 சத முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

பெட்டா பார்மஸி
இங்கிலீஷ் மருந்து ஷாப்
23. டாம் வீதி - கொழும்பு-12.

தந்தி: Tinctures. போன்: 7213


## இலக்கிய ஆராய்ச்சி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

து அனுபவித்து நிரூபிக்கிறார்கள்.

உணர்ச்சிப் படலங்களே, ஒளி வீசும் மொழிப் படலங்களாக உதயமாகின்றன என்று கோல்ரிட்ஜ் அனுபவித்துக் கூறுகிறார். இதுவே நமது தமிழ்ப் பெரியார் சிதம்பரநாதரும் கண்டுபிடித்த உண்மையுமாகும். இரண்டாவது கோலரிட்ஜ் பிறக்கவில்லை. இரண்டாவது டி. கே. சி. யும் கிடைப்பது அரிது.

**கவிதையின் கிரீடம் ஆராய்ச்சி**

கம்ப இராமாயணத்திற்கும் முத்தொள்ளாயிரத்துக்கும் டி. கே. சி. எழுதியிருக்கும் அபூர்வமான மின்னிற் கண்ணாடியான முன்னுரைகள் அழியாப் பொன்னுரைகளே கலையின் எல்லையும் கவிதையின் இதயக் கொந்தளிப்பும் சொற்களின் இசைச் சிறகுகளும் நமது ஆர்வக் கண்களின் முன் இன்பமாய் விளையாடுகின்றன. நாம் படித்துப் படித்துக் குதித்துக் குதித்து விளையாடுகிறோம். கவிதையின் கிரீடம் ஆராய்ச்சி! ஆராச்சியின் மந்திரச் சொல், சுடர் வீசி பவனி வருவதைப் பாருங்கள்.

டி கே. சி. யின் முத்தொளாயிர ஆராய்ச்சிப பதிப்பு ஒவ்வொரு தமிழனும் இடையறாது படித்து இன்புற வேண்டிய நூல். இது ஒரு இலக்கியச் சுரங்கம்—காதல் இன்னிசை--சிந்தனையோடும் தேன் ஆறு. கவிதைச் சுனை— உணர்ச்சி மின்னல் வளையம்.

**ஆராச்சியின் அவசியம்**

ஆராய்ச்சி அவசியமா? என்று சிலர் கேட்கிறார்கள். கலையின் சன்னலை, ஆராய்ச்சியாளனே நுட்பமாகத் திறந்து வைக்கிறான். உள்ளே ஒளியும், காற்றும் உலாவும் போது கலைக் கோயிலுக்குள் சாதாரண மக்களும் எதையும் சுலபமாக அறியக்கூடிய நிலை ஏற்படுகிறது. இதுவே ஆராய்ச்சியின் அவசியத்தை நன்கு காட்டுகிறது. மேல் நாட்டில் ஆராய்ச்சி வளர்ச்சியால், இலக்கிய பிருந்தாவனம் ஓவியமாக விரிந்து விட்டது. கலையின் உள்ளமும், குழந்தையின் உள்ளமும் இலக்கிய பூங்காவில் சந்திக்கும் வசதியும் அதனால்தான் நிகழ்ந்திருக்கிறது.

**தமிழன் உணர வேண்டும்**

கோல்ரிட்ஜ், ஸ்வின்பர்ண், ஹாஸ்லிட், லாம்ப், டிகுவென்ஸி, பிராட்லி, டௌடன், ஹெர்போர்டுராபர்ட்ஸன், ராட்ரே, பிரீஸ்டலி, மிடில்டன்மறி, ஆபெர்குராம்பி, புரூக், ஆர்னல்ட், பென்னெட், எட்வேர்ட்ஷாங்கள் முதலானவர்கள் செய்திருக்கும் ஆங்கில இலக்கிய ஆராய்ச்சி உயர்ந்தபடியில் உள்ளது. டி. கே. சி அவர்களும் நமது தமிழ் இலக்கிய ஆராய்ச்சிப் பணியில் மிக உயர்ந்தபடியில் இருக்கிறார்கள்; இதைத் தமிழன் நன்கு ஆழ உணரவேண்டும்.

**''இன்றைய அரசாங்கம் உணரட்டும்''**

''வள்ளுவன் தீட்டிய திருக்குறளுக்குப் புறம்பானது உலகத்தில் எதுவுமில்லை. அவ்வரும்பெரும் வேதம் தமிழ் மொழியிலே பிறந்து பெருமையுடன் விளங்கியதால் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலகத்திலே பலருடைய நன்மதிப்பையும் பெற்று வாழ்கின்றது. இதனால் தமிழ் மொழியின் பெருமையைப்பற்றி நான் கூறத் தேவையில்லை: 'செந்நெறி தவறிப் புன்மைபுரியும் அரசாட்சி குடிகளின் கண்ணீராகிய வெம்படையால் அழிந்துவிடும் என்ற வள்ளுவனின் அபாய அறிவிப்பை இன்றைய அரசாங்கம் உணரட்டும்''

இவ்வாறு அணிமையில் நவாலி முருகானந்த இலக்கிய கழகத்தாரால் கொண்டாடப்பட்ட திருவள்ளுவர் தின விழாவில் மேற்படி கழகச் செயலாளர் திரு க. நடேசன் தலைமைவகித்துப் பேசும்போது கூறினார். பின்பு அங்கு நடைபெற்ற பேச்சுப்போட்டிகளில் 1வது பிரிவில் திரு வே. சிற்றம்பலம் முதலாவதாகவும், இரண்டாவது பிரிவில் யே. யோசேப் 1வதாகவும் 3வது பிரிவில் செல்வன் மு. பாலசுப்ரமணியம் 1வதாகவும் தெரிந்தெடுக்கப்பட்டு வெள்ளிக் கிண்ணங்களைப் பரிசாகப் பெற்றனர். திருவாளர்கள்: இ. சிவசம்பு, ஐ. யோசேப் ஆகியோர் பேசியபின் விழா வள்ளுவர் வாழ்த்துப் பாவுடன் முடிவடைந்தது.

---

## ஆட்சி பொறுப்பு..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தத் தமிழனும் மறுக்க முடியாது. இன்னும் ஒற்றை ஆட்சியில் தமிழினம் நம்பிக்கை வைத்தால் தமிழ் இனம் மீட்சி பெற முடியாது. மீட்சிபெற வேண்டுமேல் ஒற்றையாட்சி ஒழிய வேண்டும். கூட்டாட்சி பெற்றே தீர வேண்டும்.


வெள்ளவத்தையில் | போன்: 8352. |

ஒரு புதிய குரோஸரி ஸ்டோர்ஸ் திறக்கப்பட்டுள்ளது.

உங்களுக்கு அன்றாடம் வேண்டிய பொருட்கள் அத்தனையும் ஆகக்குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

★ குரோஸரிப் பொருட்கள் ★ ஒயில்மண்ட் சாமான்கள்
★ காய்கறிகள் ★ பட்டர் ★ முட்டைகள்

மற்றும் குடும்பப் பெண்களுக்கு வேண்டிய தினைமுதல் பனைவரையுள்ள உணவுப் பொருட்களும், ஆடம்பரத்தின் அணிகலப் பொருட்களும் ஒரே கடையில் பெற்றுக் கொள்ளவேண்டுமெனில் இன்றே விஜயம் செய்யுங்கள்.........

டே ஸ்டார்.

வெள்ளவத்தையில் பணிவுமிக்க சேவை செய்யும் புதிய குரோஸரி ஸ்டோர்ஸ். 'மக்ஷா லிமிட்டெட்' ஸ்தாபனத்தாரின் புதிய நிறுவனம்.

| இலவச டெலிவரி | 84, காலி ரோட், வெள்ளவத்தை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை:

# மிஸ் செல்லம் - 1956

— புதுமைலோலன்

அன்றைய தபால்களைப் பிரித்தேன். இரண்டு விமரிசனக் கடிதங்கள்! 'கலைவாணி' என்ற மாத இதழில் 'மிஸ் பாமா-1956' என்ற தலைப்பில் நான் எழுதிய சிறு கதை பற்றிய விமரிசனங்கள் அவை. ஒன்றை ஒரு பெண் எழுதியிருந்தாள். மற்றதை ஓர் ஆண் எழுதியிருந்தான்.

எழுத்தாளருக்கு விமரிசனத்தபால் படிப்பதில் ஆவலதிகம். தமது கதையைப்பற்றி வாசகர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பதை அறிய கதாசிரியர்களுக்கு ஆவல் இருப்பது ஒன்றும் அசாதாரணமானதல்லவே. ஆகவே அவசர அவசரமாகத் தபாலைப் பிரித்தேன். பெண்ணின் கடிதத்தைமுதலாவது வாசித்துவிடுவோமே! ஏனெனில் நான் 'மிஸ் பாமா-1956' எழுதி வெளியான பிறகு, நானறிந்த பெண் சகோதரிகள் எல்லாம் என் மேல் 'பாய்ந்தார்கள்'.

''பெண்களை இழித்துரைப்பதுதானே கதாசிரியர்கள் வேலை'' என்றாள் ஒருத்தி.

''பெண்மையைச் சரியாக உணராது சடார் புடார் என ஏதாவது எழுதிவிடுவதா, என்ன?'' இன்னொருத்தியின் கோப உரை இது.

''பெண்ணைப் பற்றிய தன்மைகளை மணம்முடியாத உங்களால், நேர்மையாக ஆராய்ந்தறிய முடியவில்லை. அதனாலேயே மிஸ். பாமாவை ஒரு வேசியாக சிருஷ்டித்துவிட்டீர்கள்'' என்றாள் ஒரு ஆசிரியச் சகோதரி.

இப்படியான 'மதிப்புரைகள்' நேரிலும் கடிதமூலமும் கிடைத்தன. கதையின் கருத்துத்தான் அவர்களை ஆகர்ஷித்தது ஆபாசமாகச் சில வாக்கியங்கள் அமைந்துவிட்டன, எனவும் கூறினர் சிலர். எனவே இக்கதையை நான் ஏன் எழுதினேன் என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன்.

நான் இக்கதையில் சிருஷ்டித்த பெண் பாத்திரங்கள், உலகில்-இல்லை, தமிழ்பேசும் மக்கள் வாழும் நாட்டில் கிடையாதா? சமுதாயத்தின் வாழ்வுக் கோணங்கள் தானே கதையாகின்றன. அப்படியானால், இக்கதை என் கற்பனையில் உண்டாகக் காரணமென்ன? இந்தச் சமுதாயமா அல்லது நானா? நானும் சமுதாயத்தின் ஓர் அங்கம்தானே!

அடடா! அப்பெண்ணின் கடிதம் கையில் இருந்தபடி, யோசனையிலாழ்ந்துவிட்டேனே. படித்துவிடுவோம்? படிக்குமுன்பு ''மிஸ் பாமா-1956'' ஐ ஓர் முறை முன்னே கொண்டுவர வேண்டும். அதாவது கதையைத்தான்.

''மிஸ் பாமா-ஒரு ஆசிரியை; அலங்காரி. கடையிலேயுள்ள நாகரிகப்பொருட்கள் யாவும் சூடிக்கொண்ட ஒய்யாரி; அதாவது 1956-ம் ஆண்டு மொடல் பெண். அவள் லீவு காலத்தை மகிழ்வுடன் கழிப்பதற்குச் சிவனொளிபாதமலை யாத்திரை செய்தாள் ஓர் ஆணின் கைப்பாவையானாள். குளிரும் தனிமையும் பருவத் துடிப்பும் அவளை இளமை ஆசைக்கு இழுத்தன. அதனாலே, அவள் கர்ப்பமுற்றாள். சொந்த ஊர் வந்தபின்புதான் தான் கர்ப்பமுற்றிருந்ததையுணர்ந்தாள். அவள் கர்ப்பந்தரிக்கக்காரணமான 'திடீர்க் காதலன்' வேறு யாருமல்ல. அவளுடைய பாடசாலை ஆசிரியத் தோழி செல்விவிமலாவின்காதலன். கடைசியில், அந்தக் கதாநாயகன், மிஸ் பாமாவையோ, செல்வி விமலாவையோ மணஞ்செய்யவில்லை. வேறு ஒரு செல்வியைத் திருமதியாக்கிக் கொண்டான். மிஸ் பாமா பல ஆடவர் துணைகொண்டு வாழ்கிறாள். செல்வி விமலா கண்ணீர் விட்டபடி காய்ந்த வாழ்வு வாழ்கிறாள்......சிரித்தவள் சீரழிவதும், கண்ணியம் விரும்புபவள்கண்ணீர் உகுப்பதும் ''1956-ம் ஆண்டு மொடல்''—எனக்கதை முடிகிறது.

ஃ ஃ ஃ

கதையிலே 'கலைவாணி' ஆசிரியர்அறியாமலே, நான் எழுதாமலே இன்னோர் பிழையுமுண்டாகிவிட்டது. 'சிவனொளிபாத மலையிலே குளிரிலே......! என நான் எழுதியிருக்க-அச்சிலே சிவனொளிபாத மலையிலே, குளியிலே......' என வந்துவிட்டது. 'குளி' என்பது பிழை. 'குழி' என்றாவது வரவேண்டியது, 'ரி' தவறியதால் ஏற்பட்ட விபரீதம், இது ஆபாசம் எனப் பலரைக் கூறச் செய்தது. இன்னொன்று 'கொங்கை அசையச் சிரிப்பது' என்ற வசனம்! கையசைய நகைப்பது, உடலாடச் சிரிப்பது, என்பது போலத்தான் 'கொங்கையசையச் சிரிப்பது'ம் என்று ஏன் கொள்ளக் கூடாது? தமிழிலக்கியங்கள் படித்துப் பரீட்சை சித்தியடைந்தவர்களுக்கா 'கொங்கை' புதிய ஆபாசச் சொல். எது ஆபாசம்? சொற்கள் மட்டும் ஆபாசமா? அவை ஆபாசமெனில் இன்னுமெத்தனை எத்தனையோ ஆபாசங்களுண்டே! அது போகட்டும். தெளியும்போது தெளியட்டும்!

அப்பெண்ணின் கடிதம் படிக்க முன்பு 'கதாசிரிய மனம்' எங்கெல்லாம் ஓடுகிறது. ம்! கடிதத்துக்கு வருவோம்.

ஃ ஃ ஃ

மருதூர்
31-1-57

அன்புள்ள கதாசிரியர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் அணிமையில் எழுதியிருந்த 'மிஸ் பாமா1956'ஐப் படித்தேன். தங்களுடைய கதைகளை மிகவும் ஆவலுடன் படிப்பவர்களுள் நானுமொருத்தி. ஆனால், மிஸ் பாமாவைப் படித்ததும் உங்கள் மேல்ஆத்திரம்தான் பிறிட்டு வருகிறது. பெண்மையை இழிவுபடுத்த உங்கள் பேனை செலவாக வேண்டுமா? உங்களை நான் நேரிலறியாதவள். ஆனால், உங்கள் கதைகள்மூலம் உங்களையறிந்திருக்கிறேன்.

நல்லதொரு சமுதாயம் உருவாக வேண்டுமென்ற கனவு கொண்ட இலட்சியக் கதைகளையே நீங்கள் எழுதுவது வழக்கம். 'மிஸ் பாமா 1956' புதிய வேண்டாத கருத்தையல்லவா தருகிறது. மிஸ் பாமா போலப் பெண்கள் வேறு எங்காவது இருக்கலாம். தமிழ் நாட்டில் கிடையாது எனத் துணிவாகக் கூறுவேன். ஆனால், பாமாவையும் விமலாவையும் ஏமாற்றுகின்ற ஆண்களை இன்று, இச்சமுதாயத்தில் ஆயிரம் ஆயிரம் காணலாம். அப்படிப்பட்ட ஆண்கள் மத்தியிலும் தன்னை, தன் நெறியை இன்றைய தமிழ்ப் பெண் நன்கு காப்பாற்றியே வாழ்கிறாள். கண்ணியத்தை உயிராகக்கொண்டு, மனம் நிறைய வாழவே எப்பெண்ணும் விரும்புவாள். நீங்கள் கற்பனை செய்த பாமா போன்றோர் கிடையவே கிடையாது. அறியாமையால், பெற்றோரின் பாதுகாப்பின்மையால் சிலவேண்டாத பழக்கங்களை போதிய கண்காணிப்பின்மையால் பழகிவிட்டோர், தனிமையிலே புதியமோக உணர்வில் சிவனொளி பாத மலை யாத்திரைசெய்யலாம். ஆனால், நெறி தவறுவாளென்பதை என்னால் நம்ப முடியவில்லை. தமிழ்ப்பெண்மையப்படியானது. நான் ஒரு பெண். பெண்மையைப் பற்றி என்னால் நன்கு கூற முடியும். ஆகவே, தயவு செய்து பெண்களைக் குறையாக எழுதும் கதைகளைச் சிருஷ்டித்துப் பெண்ணுலகுக்கு அம்பெய்யாதீர்கள். தீமையம்பு நன்மைப் பக்கம் சாயாது. தீமைப் பக்கமே சாயும். ஆண்கள் சரியாகப் பெண்களை உணர முடிவதில்லை. கதாசிரியரும் ஆண்தானே! அதனால் வந்த வினைதான் 'மிஸ் பாமா 1956' குற்றமிருந்தால் மன்னியுங்கள். நான் கூறுவதையும் எண்ணிப் பாருங்கள்.

உண்மையுள்ள;
செல்வி. செல்லம்.

கடிதத்தைத் திரும்பவும் ஓர் முறை படித்தேன். செல்வி. செல்லம் இவ்வளவு ஆத்திரமடையக் காரணம்......? முதுகில் புண் கொண்டோர் சிறு துவார வேலியால் புகுந்து செல்லப் பயந்து, நியாயம் பேசுவதும் உண்டு. அதிகமாக, முடியாததை நியாமெனப் பேசித் தமது பெலயீனத்தை மறைப்பது அகநிலையின் ஒரு தன்மை. செல்லத்தின் ஆத்திரத்துக்கு இதுதான் காரணம். ஒருவேளை அவள் கூறியதெல்லாம் உண்மைதானா?

'நான் எழுதிய' கதை வழுத்தானா?' என்னைத்திரும்பவும் நான் கேட்டேன்.

அடுத்த கடிதத்தையும் படித்துவிடுவோமே! அது ஆணின் கடிதம்.

சோலைநகர்
31-1-57

கதாசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் எழுதிய 'மிஸ் பாமா1956' ஐப் படித்தேன். உண்மையாக மகிழ்ந்தேன். ஏனெனில், இன்றைய -1956ம் ஆண்டில் உலாவுகின்ற சில

(12-ம் பக்கம் பார்க்க)

# 8 மணித்தியாலத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### நல்ல தூக்கத்துக்கு இலேசான உணவு

அடுத்து தூக்கமும் உணவும். வயிறு நிறையப் போட்டுப் பிடித்துவிட்டுத் தூங்கப் போனால் உடனே தூக்கம் பிடித்துவிடும்; ஜாலியாகத் தூங்கி எழும்பலாம் என்று சிலர் சொல்லுவார்கள். இன்னும் சிலர் இலேசாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கப் போனால் இங்கிதமாகத் தூங்கி எழும்பலாம் என்று சொல்வார்கள். இதில் எது சரி எது தவறு?

பின்னால் சொன்னமாதிரி இலேசான உணவு சாப்பிடுவதுதான் நல்ல நித்திரைக்கு உகந்தது. அதிகம் சாப்பிட்டுவிட்டுத் தூங்கப்போனால் சடுதியாகத் தூக்கம் பிடித்தாலும் பிடிக்கலாம். ஆனால் நிம்மதியாகத் தூங்க முடியாது. வயிற்றில் போட்டுத் திணித்த உணவு அவ்வளவும் ஜீரணமாகும்வரை சில தசைநார்களும், உணர்ச்சி நரம்புகளும் ஓய்ந்துபோவதில்லை. அவை ஓயாதபோது பூரண நிம்மதியான நித்திரை ஏற்படுவதற்கில்லை. பெயருக்குத் தூங்கலாம்; ஆனால் பலனை அனுபவிக்க முடியாது. இந்த நிலையில் கனவுகள் வேறு காணவேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்படும்.

### கனவு

கனவு காணும்போது தூங்குபவரின் கண் இமைகள் மூடியிருந்தாலும் கண்மணிகள் கனவு நிகழ்ச்சிகளுக்கேற்ப அங்குமிங்குமாக இடம் பெயர்ந்துகொண்டிருப்பது இப்போ கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் கனவு பலர் கருதுவதுபோலத் திடீர் என்று தோன்றும் ஒன்றல்ல. அது தொடர்ச்சியாகக் குறிப்பிட்ட இடைவேளைகளில் தோன்றுகிறது. என்றாலும் ஆழ்ந்த தூக்கம் கிடைக்கும் முற்பகுதியில் கனவுக்கு இடமில்லை. பிற்பகுதியில், அதுவும் விழித்தெழுவதற்கு சற்று முன்னால் [illegible] கனவையே நினைவில் [illegible]துக்கொள்ளலாம்.

# அக்குறணைப்பகுதி முஸ்லிம்கள் பேசும் மொழி எது?

## 'கொத்துபா' வணக்கமும் பிரசங்கமும்

### நடப்பது அராபியிலும் தமிழிலுமே — சிங்களத்திலல்ல

தன்னை ஓர் முஸ்லிம் என்றழைத்துக்கொண்டு அக்குறணைவாசியாகிய ஜனாப் எச். எம். சரிபுத்தின் என்னும் நண்பர் 'டைம்ஸ் ஒப் சிலோன்' பத்திரிகைக்கு சமீபத்தில் எழுதியிருந்த கடிதம் ஒன்றைப் படித்தேன். ஆங்கிலம் கல்லாத முஸ்லிம்களுக்கு நண்பரின் ஆங்கிலக் கடிதத்தில் கூறப்பட்டுள்ள சில விஷயங்களைச் சுதந்திரன் மூலம் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

நண்பரின் கடிதத்தின் சுருக்கம் இதோ:

''நாங்கள் இலங்கையில் 900 வருடங்களுக்கு முன்பிருந்தேவாழ்ந்து வருகின்றோம். எங்கள் கிராமங்கள் இலங்கை முழுவதும் உள்ளன. ஆங்கிலேயர் வருமுன் நாங்கள் கண்டி மன்னர்களின் பிரசைகளாக இருந்தோம். நாங்கள் சிங்களம் பேசுகின்றோம். எங்களுக்குள், பண்டிதர்கள், வெதருளைகள் (வைத்தியர்கள்) சாதகங் கணிப்போர் இருக்கின்றார்கள். ஆகவே, பிரதம மந்திரி தமிழரசுக்கட்சியுடன் பாஷை விஷயத்தைப் பற்றிப் பேசுமுன், எங்களை ஏன் வினவாது போனார்? எங்களிடம் தமிழைத் திணித்து எங்களை செயற்கைத் தமிழர் ஆக்குகின்றார் அவர்.'' இந்த ரீதியிலேயே நண்பரின் கடிதம் வரையப்பட்டிருக்கிறது.

### பழக்க வழக்கங்கள்

தென் இந்திய தமிழ் மக்களின் [illegible] பள்ளிவாசல்கள், தைக்காக்கள் சமாதிகள் உள்ள இடங்களில் வருடாவருடங்கொடி ஏற்றித் திருவிழாக்கள் நடத்தல், பணம்கொடுத்து மணமகன் வாங்கல்ஆகியனவெல்லாம் அனுசரித்துக்கொண்டு 900 வருடங்களாகத் தங்கள் மனைகளில் தமிழ்ப் பேச்சுக் கட்டோடில்லாது, சிங்களத்தில் மட்டுமே தேர்ச்சி அடைந்து, பண்டிதர்கள், வெதருளைகள், சாதகங் கணிப்போரெனத் திறமையடைந்திருப்போரைச் சிங்கள முஸ்லிம்கள் என்றே கூறவேண்டும். அவர்களுள் ஒருவராகிய நண்பர் ஜனாப் சரிபுத்தீன், வெள்ளிக்கிழமைகளிலும், பெருநாள் தினங்களிலும், இவர்களின் பள்ளிவாசல்களில், 900 வருடத்தில் ஒருநாளாவதுகொத்துபாவெனும் வணக்கத்திலும்பிரசங்கத்திலும் அராபியும் சிங்களமுஞ் சேர்ந்து நடத்தப்பட்டிருப்பதை உண்மைப் படுத்துவாரா? முஸ்லிம்களின் பள்ளிவாசல்களில் இது கொண்டாடப்படுவது அராபிப்பாஷையிலுந் தமிழிலுமேஎன்பதை அவர் அறியார் போலும்!

எம். எம். சுல்தான்

### எப்படி நம்புவது?

தென்இந்தியாவில் இஸ்லாம் தோன்றிய நாளிலிருந்து, அராபிப் பாஷைக்குப் பக்கத் துணையாகி, மதம் பரவி வலியுறச் செய்தது தமிழ்மொழி என்பதையும், 1815-ம்ஆண்டில் ஆங்கிலேயர் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டதுயாரோடு, என்ன பாஷையில் கைசாத்திடப்பட்டது என்பதையும் எமது நண்பர் அறிந்திருப்பின் இந்த மாபெரும் பொய்யைக் கனவிலுங் கட்டிவிட்டிரார். வேடர்கள் வசிக்குங் கன்னெட்டாக் காடுகளில் தானும் தங்கிக்கிடந்த முஸ்லிம் மக்களின் குடும்பங்களில் தமிழே பாஷையாக இருந்து வர, அக்கமும் பக்கமும் தமிழ் நாடுகளாலுந் தமிழ் பேசும் மக்களாலுஞ் சூழப்பட்டுள்ள அக்குறணையில் இலங்கை முஸ்லிம்கள் 900 வருடமாகத் தமிழை அறியார் என்றால் யார்தான் அதை நம்ப முடியும்?

### மொழிச் சமத்துவம்

சிங்களம்பூரணமடையாப் பாஷை என அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அவ்விதமிருந்தும் தற்போதைய அரசியல் நிலையில் அப்பாஷைக்கு முதலிடங் கொடுக்க மறுப்போரை இலங்கையில் தேட முடியாது. சமஷ்டிக் கட்சி தானும் இதைமறுக்கவில்லை. ஆனால் தமிழ் பேசும் சமுதாயம் முழுவதுங் கோருவது தமிழுக்கும் சம அந்தஸ்து வேண்டும் என்பதே. இது உண்மையான ஜனநாயகக் கொள்கை. இதை மறுத்துப் பேரம் பேசுவோர் சர்வாதிகார வெறிபிடித்தோரே.

### அறியாமை

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களை முடிந்த மட்டில் மட்டந்தட்டிவைக்க முயற்சித்துவரும் பிரதம மந்திரி, ''முஸ்லிம்களைச் செயற்கைத் தமிழர் ஆக்குகின்றார்'' என்பது மிலேச்சத்தனத்தின் உச்ச நிலையை எடுத்தோதுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டி. கே. எஸ். சகோதரர்களின் ஒற்றுமை ரகசியம்

## பணத்தகராறு, போட்டி பொறுமை கிடையாது

### மூத்த சகோதரர் சண்முகத்தின் அருமை பெருமை பற்றி இளையவர் பகவதி

நாங்கள் சகோதரர்கள் நால்வர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

சிறு வயதிலேயே தாயையும் தந்தையையும் இழந்து மூத்த சகோதரர் திரு சங்கரண்ணா அவர்கள் பொறுப்பிலேயே நான் வளர்ந்து வந்ததால் அவரைக் கண்டாலே எனக்குப் பயம். எனது அறிவு வளர்ச்சி பெற்ற காலத்தில்கூட ஏதேனும் காரியங்கள் ஆகவேண்டியிருந்தால் வேறு யாரிடமாவது சொல்லித்தான் பெரிய அண்ணாவை அணுகுவேனே தவிர நேரடியாகச் சொல்லுவது கிடையாது.

இரண்டாவது சகோதரர் திரு முத்தண்ணா அவர்களும் கம்பெனி சம்பந்தமான விஷயங்களிலும் மற்றும் பல துறைகளிலும் ஈடுபட்டிருந்ததால் அவரிடமும் நெருங்கித் தொடர்புகொள்வதற்கு வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது.

மூன்றாவது சகோதரர் திரு சண்முக அண்ணா அவர்களிடம்தான் சிறு வயதிலிருந்தே நான் அதிகத் தொடர்புகொள்ளும்படியான சந்தர்ப்பங்கள் இருந்தன.

சகோதரரைப்பற்றிக் குறிப்பிடும்போது இளமைப் பருவத்தில் நடந்த சில விளையாட்டு நிகழ்ச்சிகள் ஞாபகத்திற்கு வருகின்றன.

#### திறமை

இளமையில் நாங்கள் இருவரும் கொஞ்சம் அதிகமான பக்தியில் ஈடுபட்டிருந்தோம். பூசை செய்வதற்காக சுமார் இருபது முப்பது சுவாமிகளின் படங்களைத் தாயார் வாங்கிக் கொடுத்திருந்தார். அந்தப் படங்களை நாங்கள் இருவரும் சமமாகப் பிரித்துக் கொண்டு வீட்டிடல் தனித்தனியான இடங்களில் அலங்காரம் செய்வோம். நான் எவ்வளவுதான் சிரமப்பட்டாலும் படங்களை ஒழுங்கான முறையில் வைக்கமுடிவதில்லை. அவர் அழகுபடுத்துவதைப் பார்த்துக் கொண்டே இருப்பேன். அவை நன்றாக வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்ததும் 'ஓ' என்று அழ ஆரம்பிப்பேன், தாயார் வந்து என்ன வென்று விசாரிப்பார்கள். நல்ல படங்களை அண்ணா எடுத்துக்கொண்டதாக புகார் செய்வேன். எனக்கு வேண்டிய படங்களை எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு தாயார் சென்றுவிடுவார்கள். என் விருப்பப்படி எடுத்துக்கொண்டு பிடிக்காத படங்களை அவரிடம் தள்ளிவிடுவேன். நான் ஒதுக்கிவிட்ட படங்களை அவர் எடுத்துக்கொண்டு அழகான முறையில் அலங்கரித்துவிடுவார். அத்துடன் தனக்கு அவசியம் வேண்டும் என்ற படங்கள் என்னிடம் இருந்தால் தூரத்தில் இருந்தபடியே அந்தப் படத்தைப் பற்றி ரொம்பவும் மோசமாக வர்ணிக்க ஆரம்பிப்பார். அவர் அதைப்பற்றிச் சொல்ல சொல்ல அந்தப் படம் என்னிடமிருப்பதுமிக மிக அவலட்சணமாகத் தோன்றும். உடனே அதைத் தூக்கி அவரிடமே கொடுத்துவிடுவேன். இப்படி எத்தனையோ சம்பவங்கள். இதை எதற்காக குறிப்பிட்டேன் என்றால் சிறு வயது முதலே எந்தக் காரியத்தையும் மிகத் திறமையாகச் செய்யும் சக்தி அவரிடம் அமைந்துள்ளது என்பதற்காகத்தான்.

#### சிறு வயதில் ஆங்கிலப் பேச்சு

உயர்திரு எம். கே. ராதா அவர்களின் தந்தையார் காலஞ்சென்ற கந்தசாமி முதலியார் அவர்கள்தான் எங்கள் கம்பெனியில் நாவல் நாடகங்களுக்கு ஆசிரியராக இருந்தார். அப்போது நடைபெற்றுக்கொண்டிருந்த ராஜாம்பாள், ராஜேந்திரன் முதலிய நாடகங்களில் எல்லாம் சில இடங்களில் வசனங்கள் ஆங்கிலத்தில் இருக்கும். ஆங்கிலத்தை அப்படியே தமிழில் எழுதிப் பாடச் செய்து மேடையில் ஒப்புவிப்பது வழக்கம். ராஜாம்பாள் நாடகத்தில் வக்கீல், பாரிஸ்டர் இருவரும் நீண்டநேரம் பேசவேண்டும். சகோதரர் அவர்கள் மேடையில் பேசும்போது பாடம் செய்து ஒப்புவிப்பதுபோல் இராது. ஓரளவுக்கு ஆங்கிலம் படித்தவர்கள் எப்படிப் பேசுவார்களோ அதே முறையில்தான் இருக்கும். இவ்வளவு சிறு வயதில் ஆங்கிலம் அழகாகப் பேசுகிறானே என்று மக்கள் ஆச்சரியப்படுவார்கள்.

#### நாடக ஒத்திகையிலேயே பிரகாசிப்பார்

பம்பாயில் மேனகா படப் பிடிப்புக்காகச் சென்றிருந்தோம். டைரக்டர் ராஜா சாண்டோ அவர்கள் முதல்நாள் ஒத்திகையில் எல்லோரையும் நடிக்கச் சொன்னார். சாதாரணமாக நடிகர்கள் ஒத்திகையில் சரியாக நடிக்காமல் படப்பிடிப்பின்போது நடித்துக்கொள்ளலாமென்று அலட்சியமாகவே நடிப்பார்கள். ஆனால் அண்ணா அவர்களோ மேடையில் எப்படி நடிக்கவேண்டுமோ அதே முறையில் ஒத்திகையிலும் நடித்துக் காண்பித்து முதல் நாளே ராஜா அவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார். எதையும் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆர்வமும் மனத்தில் பதியவைத்துக்கொள்ளும் சக்தியும் சிறு வயது முதலே அவரிடம் அமைந்துள்ளது. இத்தகைய திறமை அவரிடம் இருந்ததால்தான் காலம் சென்ற தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர் திரு. சங்கரதாஸ் சுவாமி அவர்கள் அவரைக் கதாநாயகனாக நடிக்க வைப்பதற்காகவே 'அபிமன்யு' நாடகத்தை எழுதினார்.

#### சிறந்த பண்புகள்

தற்காலத்து நடிகரைப் போல் இல்லாமல் தனக்கு நடிப்புச் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களை என்றும் மறவாது பக்தி செலுத்துபவர் எனது அண்ணா. எந்த விஷயத்தையும் தன் மனத்தில் பதியவைத்த பிறகுதான் மற்றவர்களுக்கு அதை அவர் விளக்குவார். நாடகத்துறையில் ஏதாவது ஒரு அம்சத்தில்தான் சிலர் திறமைசாலிகளாக இருப்பார்கள். சகோதரர் அவர்களோ நடிப்புச் சொல்லித் தருவதோடு மட்டுமல்லாமல் பாட்டுக்கள் கற்றுத் தருவது, மேடைக்கு ஏற்ற முறையில் நாடகக் கதைகளை எழுதிக்கொள்வது, செட்டிங் முதலிய விஷயங்களுக்கு யோசனை சொல்லுவது ஆகிய நாடக சம்பந்தப்பட்ட அத்தனை விஷயங்களிலும் தேர்ச்சிபெற்றுள்ளார். இப்படி எல்லா வகையிலும் திறமைசாலியாக உள்ள நடிகர்கள் சிலர்தான் இருக்கிறார்கள். எத்தனையோ புதிய புதிய நடிக நடிகையர்கள், கதாசிரியர்கள், வசனகர்த்தாக்கள் பாட்டெழுதுபவர்கள் ஆகியவர்களைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

தான் செய்வதே சரி என்று நினைக்காமல் வயதில் சிறியவர்களாக இருந்தாலும் நாடக சம்பந்தமான விஷயங்களில் மற்றவர்கள் சொல்லுவதையும் கேட்டுத்தான் காரியங்கள் செய்வார்.

#### தமிழ் அறிவு

எந்தப் பள்ளியிலும் சேர்ந்து படிப்பதற்குவாய்ப்பில்லாதிருந்தும் தற்போது தமிழகத்திலுள்ள அறிஞர்கள் பலர் கண்டு வியக்கும் வண்ணம் தமிழ் அறிவு பெற்றுள்ளார்.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பே கம்பெனியில் அறிவுச் சுடர் என்று கையெழுத்துப் பத்திரிகை ஒன்று ஆரம்பித்து அதன் ஆசிரியர் பொறுப்பை மிகத் திறம்பட நடத்தினார். அந்த அனுபவமும் ஆர்வமும் வீண்போகவில்லை. இப்போது சுமார் முப்பதினாயிரம் பிரதிகள் விற்பனையாகும் 'நடிகன் குரல்' பத்திரிகைக்கு பொறுப்பாசிரியராக விளங்குகிறார்.

சகநடிகர்களைப் பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்துவதில் மிகுந்த ஆர்வமுள்ளவர். எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற தாராள மனப்பான்மை கொண்டவர். என்னிடம் அவர் கேட்பதெல்லாம் நாடகச் சேதியே தவிர பண சம்பந்தமான எந்த விவரத்தையும் கேட்கமாட்டார்.

(13-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழில்....
தம்பி
பகவதி பற்றி
சண்முகம் எழுதுகிறார்

# மிஸ் செல்லம் 1956

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களையப்படியே படம் பிடித்துவிட்டீர்கள். முழுவது உண்மை. இப்படியாகத் தாம் செய்வதைப் பிழையென்றே, அவர்கள் ஒப்புக்கொள்வது கிடையாது 'மிஸ்' என்று கூறிக் கூறி அவர்களில் சிலர் செய்யும் அட்டகாசம்-படித்தவர்கள்தானா இவர்கள் என எண்ணச்செய்கிறது நம்மை.

உங்களுடைய கதையிலே வருகிறாளே பண்பில்லாத-மோகவெறி கொண்ட பாமா. அதே போன்ற ஒரு பெண்ணினால் நான் படும் அல்லல், அப்பப்பா! என் உள்ளமே கற்பாறையாகிவிட்டது. உங்களுக்கு எனது கதையைக் கூறினால் என் வேதனை ஒரு அளவுக்குக் குறையும் என்று நம்புகிறேன் எனவே சுருக்கமாகக் கூறுகிறேன் படியுங்கள்.

ஃ ஃ ஃ

நான் எஸ். எஸ். ஸி. படிக்கும்போது எனக்குக் கற்பித்தாள் ஓர் ஆசிரியை. எனக்கு அப்போ இருபது வயது. பல முறை எஸ். எஸ். ஸி. யில் தங்கிவிட்ட 'கெட்டிக்காரன்' நான்.. அவளோ எஸ். எஸ். ஸி. தராதரப் பத்திர ஆசிரியை. அவளுக்கு இருபத்திரண்டு வயசுவரையிலிருக்கலாம். ஆசிரியையும் மாணவனும்தான் நாங்கள் இருவரும். என்றாலும், இவற்றையா பார்க்கிறது! காதல் [illegible] முடிப்பதாக வாக்குமாற்றிக் கொண்டோம். எனக்கு உத்தியோகம் கிடைத்ததும் இருவரும் திருமணம் என்று திட்டம் தீட்டினோம். ஓராண்டு மறைந்தது எனக்கே தெரியாது எங்கள் கல்லூரி ஆசிரியர் ஒருவருடன் இந்தியாவிலுள்ள மைசூர் சென்று வந்தாள் ஆசிரியை-அதாவது என் காதலி. இது நியாயமானதா என நான் காதல் உரிமையில் அவளைக் கேட்டேன். அவள் ஆத்திரப்பட்டாள். ஐயம் கொண்டவன் என்றாள் என்னை. கடைசிக் கடிதமே எழுதிவிட்டாள்'' அக் கடிதத்தையும் இத்துடன் இணைத்துள்ளேன் தயவுசெய்து அதையும் சிரமத்தைப் பாராது படியுங்கள்.

அன்புள்ள
—சி. செல்வராஜன்
மருதூர்
5-7-56

சந்தேகப் பிராணியே!

கூடப் படிக்கும் ஆசிரியருடன் பிரயாணஞ் செய்தால் சந்தேகப்படுவதா? ஆணின் பெலயீனமே சந்தேகமாகித்தானே புறப்படுகிறது. இப்படிப்பட்ட காதல் எதற்கு? நான்தான் ஆளையறியாது தவறுசெய்துவிட்டேன். எனது சுதந்திரத்தில் கைவைக்கும் எந்த ஆணும் எனது காதலனாக முடியாதவன். இனிமேல் நமக்குள் இருந்த தொடர்பு யாவுமே அறுபட்டுவிட்டது. மீண் தொல்லை தரவேண்டாம்.

இப்படிக்கு
—செல்வி செல்லம்

சுதந்திரமே நீ வாழ்க என நான் எண்ணினேன். என்ன செல்வி செல்லமா? எனக்கு இன்று எழுதியவிமர்சனக் கடிதமும் அவளுடையதுதானே அதே அவள்தானா இந்தச் செல்லம். எழுத்துக்களை ஒப்பிட்டுப் பார்த்தேன் சந்தேகமே இல்லை. ஒரே எழுத்துக்கள். அவள்தான் இவள்! இவள்தான் அவள்!!

நான் நன்றாகச் சிரித்தேன் பெண்கள் பலே கைக்காரிகள்! புதிர் என்று பலரும் இதைத்தான் பெண்மேல் சுமத்திக் கூறினரோ! அறிந்தும் அறியாததுபோல வாழ்வது சில பெண்களின் இயல்பா, என்ன? எ...ன்...ன...?

நியாயம் பேசும் அதே செல்லம், பாமா செய்த அதே பிழையைத் தானும் செய்திருக்கிறாள். பெண்மையை இழக்காதிருக்கலாம். வேற்று ஆடவருடன் தனிமையில் பயணஞ் செய்வதும், உல்லாசமாக உலாவுவதும் பிழையில்லையா? பிழை விடுவது மட்டுமல்ல, பிழைக்கு வழிதரக்கூடிய பாதையில், தூய உள்ளத்தோடு செல்வதும் பிழைதான்!

இந்த உண்மையை மிஸ் பாமா போன்ற பெண்மணிகள் உணர முடியாது. ஏனெனில் அவர்கள் எண்ணும் உலகம் வேறானது. வாய்ச்சொல்லும் செயலும் அவர்களைப் பொறுத்தமட்டில் வெவ்வேறானவை. பரிதாபத்துக்குரிய பாமாக்களுக்காக நான் ஒரு சொட்டுக் கண்ணீர் விட்டேன்.


## கட்டிடச் சாமான்கள்

- அஸ்பெஸ்டோஸ் கூரை தகடுகள்
- அஸ்பெஸ்டோஸ் தட்டை ஓடுகள்
- சிமெந்து
- சினுச்சட்டி பைப்புகள்
- சினுச்சட்டி பிட்டிங்ஸ்
- கல்வனைஸ் பைப்புகள்
- கல்வனைஸ் பிட்டிங்ஸ்
- கல்வனைஸ் தகடுகள்
- கல்வனைஸ் கூரை தகடுகள்
- ஈய நூல்
- 'மட்டோபார்' கொங்கிரீட் வலை
- 'மட்டோபார்' இணைத்த வலை
- இரும்பு கொங்கிரீட் கம்பிகள்
- எக்ஸ்பான்டெட் வலை
- "கொலேய்ட்" மரத் திராவகம்
- "கொலேய்ட்" கிருமி மருந்து
- முள்ளுக் கம்பி

முதலியன முதலியன

இவற்றை எங்களிடம் மிகவும் சகாயமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

சாமுவேல் சன்ஸ் அன் கம்பெனி
லிமிட்டெட்,
371, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நடிகர் நடிகைகளுக்கு அரசாங்கப் பரிசு

## மந்திரி சுப்பிரமணியம் அறிவிப்பு

**சிறந்த நாடக நடிகைக்கும் நடிகருக்கும் பரிசு கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக மந்திரி சுப்பிரமணியம் அறிவித்தார்.**

**சேவா ஸ்டேஜ் நாடக கோஷ்டியார் ஆரம்பித்திருக்கும் நாடக கல்வி (பயிற்சி) நிலையத்தை சென்னை மைலாப்பூர் ரசிகரஞ்சனி சபாவில் மந்திரி சுப்பிரமணியம் ஆரம்பித்து வைத்தார்.**

**நாடகத்தில் நடிப்பது எப்படி என்று பயிற்சி கொடுப்பதற்காக இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

நாடக கல்வி நிலையத்தை ஆரம்பித்து வைத்து மந்திரி பேசியதாவது:-

தமிழ் நாட்டில் நாடகங்களில் சிறந்த முறையில் நடிக்கிருர்கள். ஆனல் நாடக மேடையும், ஜோடனையும் நல்ல முறையில் அமைக்கப்படுவதில்லை. அரங்குகளை நல்ல முறையில் எப்படி அமைப்பது என்பதை சங்கீத நாடக சங்கம் ஆராய்ந்து யோசனை கூறவேண்டும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் இந்த கல்வி நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை நடத்துவது கடுமையான வேலையாகும். இதை ஏற்றுக்கொண்டிருக்கும் நடிகர் சகஸ்ரநாமத்தை பாராட்ட வேண்டும்.

நாடக கல்வி நிலையத்தில் பயிற்சிக்கான 3 மாத கால திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகச் சொன்ஞர்கள். அந்த காலம் போதாது என்றும் சொன்ஞர்கள். சிறிது சிறிதாக இதைப் பெரிதாக்கிவிட வேண்டும். 3 மாத படிப்பை 3 வருஷ படிப்பு ஆக்கிவிடவேண்டும்.

### பரிசுத் திட்டம்

நல்ல நாடகங்களுக்குப் பரிசு கொடுக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

இதுவரை நடிக்கப்பட்ட நாடகங்களைப் பார்த்து அவற்றில் சிறந்த நாடகத்துக்கு இந்த வருஷம் சர்க்கார் பரிசு கொடுக்கும். அதேபோல் நடிகர் நடிகைக்கும் பரிசு கொடுக்கப்படும்.

இம்மாதிரி ஒவ்வொரு வருஷமும் சர்க்கார் பரிசு கொடுக்கும்.

நல்லமுறையில் நாடகங்கள் நடிக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்த திட்டத்தைச் சர்க்கார் வகுத்து இருக்கிறது.

### அகௌரவமில்லை

இந்தப்போட்டியில்கலந்து கொள்வது தங்கள் கௌரவத்திற்குக்குறைவுஎன சிலர் நினைக்கிருர்கள். பரிசு கிடைக்காமல் போய்விட்டால் தங்கள் நாடகத்தை மேற்கொண்டு நடிக்க முடியாமல் போய்விடும் என்று நினைக்கிருர்கள்.

பரிசு பெருத நாடகங்கள் தரம் குறைந்தவை என்று ஆகாது. இவ்வாறு மந்திரி சுப்பிரமணியம் பேசி முடித்தார்.

இந்த நாடக கல்வி நிலையத்தை ஆரம்பித்து நடத்தும் நடிகர் சகஸ்ரநாமம் பேசுகையில் கூறியதாவது:-

### மகிழ்ச்சிக்குரியது

இந்த கல்வி நிலையத்திற்கு வருஷம் 3 ஆயிரம் ரூபாய் பண உதவி கொடுக்க சங்கீத நாடக சங்கம் ஒப்புக்கொண்டு இருக்கிறது.

இந்த கல்வி நிலையத்தில் சேர பத்தாயிரம் பேர் விண்ணப்பித்துக்கொண்டார்கள். தமிழ் நாட்டில் நாடகக் கலையைகற்க ஆர்வம்கொண்டவர்கள் இவ்வளவு பேர்கள் இருக்கிருர்கள் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

முதல் ஆண்டில் 30 பேர்களுக்குத்தான் பயிற்சி அளிக்கமுடியும்.

தமிழ் நாட்டில் இப்போது புதிய நடிகர்கள் இல்லை. அந்தக் குறையைத் தீர்க்க நாங்கள் பாடுபடுவோம்.

### மாணவிகள் சேரவில்லை

விண்ணப்பம் அனுப்பியவர்களில் பட்டதாரிகளும் இருந்தார்கள். அவர்களில் 30பேரைத் தெரிந்து எடுத்திருக்கிருேம்.

பயிற்சிபெற்று தேறியவர்களுக்கு வேலை கொடுக்கும் உத்தரவாதத்தை நாங்கள் கொடுக்கவில்லை.

நாடகம் நடிக்கப் பழக ஒரு மாணவிகூட இப்போது சேரவில்லை என்பதுதான் வருத்தமாக இருக்கிறது. அவர்களுக்கு சில சலுகைகள் கூட கொடுக்கத் திட்டமிட்டிருந்தோம்.

இவ்வாறு நடிகர் சகஸ்ரநாமம் பேசி முடித்தார்.

கூட்டத்தில்ருக்மணிதேவி. மு. வரதராசஞர் ஆகியோர் பேசிஞர்கள்.

## டி. கே. எஸ். சகோதரர்களின் ....

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

### நிதி இலாகா

இத்தகைய தாராள மனப்பான்மை அவரிடம் கொஞ்சம் அளவுக்கு மீறி இருப்பதால்தான் முன் ஜாக்கிரதையாக நிதி இலாகா பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள மிகப் பிரபலமான நடிக, நடிகையர்கள் எல்லாம் சகோதரரிடம் மிகுந்த மதிப்பு வைத்துள்ளார்கள்

பட உலகிலே சிறந்த டைரெக்டர்களில் ஒருவராக திரு. கே. ராம்நாத் அவர்களைக் குறிப்பிட்டதைப் போல் நாடக உலகில் ஒரு சிறந்த டைரக்டராக திரு. சகோதரர் அவர்களை குறிப்பிடலாம். சகோதரர்களாகிய நாங்கள் இவ்வளவு ஒற்றுமையாக இருப்பதற்குக் காரணம் சாதாரணமாகக் குடும்பக் கலகங்களுக்கு அடிப்படைக் காரணங்களான போட்டி, பொருமை பணத் தகராறு ஆகிய தீய விஷயங்கள் எங்களிடம் தலைகாட்டாமல் இருப்பது தான்.


3 வது வெற்றிகரமான வாரம் !

எல்பின்ஸ்டன் ரெக்ஸி

சிவாஜி கணேசன், ஜமுனா

டி. ஆர். ராஜகுமாரி

நடித்துள்ள

தங்கமலை ரகசியம்

எமது அடுத்த திரை விருந்து !

ஜெமினி கணேசன், சாவித்திரி

நடித்துள்ள

கற்புக்கரசி



இவ்வருடத்திய திரைப் பட அதிசயத்தை எதிர்பாருங்கள் !

சிட்டாடல் பிலிம்சாரின்

மல்லிகா

(தமிழ்)

நடிகர்கள்:

ஜெமினி கணேசன்,

பத்மினி, டி. எஸ். பாலையா,

கே. ஏ. தங்கவேலு,

எம். என். ராஜம், பேபி ராஜகுமாரி.

வெளிவரும் நாளை எதிர்பாருங்கள்!





இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது வெற்றிகரமான 4வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு)

தினசரி மாலை 6, இரவு 9-30, சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி ஞாயிறு காலை 10 மணி

ராணி (யாழ்ப்பாணம்)

போகம்பரை (கண்டி)

ஜோதி (திருகோணமலை)

மணமகன் தேவை

நடிகர்கள்: சிவாஜி கணேசன், பானுமதி, சந்திரபாபு, டி. ஆர். ராமச்சந்திரன், கருணாநிதி, பிரமீளா, ராகினி, அங்கமுத்து.

பின்னணி இசை:

கண்டசாலா, ஏ. எம். ராஜா, கோவிந்தராஜன், எம். எல். வசந்தகுமாரி, ஜிக்கி, பி. லீலா.

முருகன் (ஜிந்துப்பிட்டி) கடைசி வாரம்!

சாவித்திரி, நாகேஸ்வரராவ் நடிக்கும்

எங்கள் வீட்டு மகாலட்சுமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்

## வேதனை!

அதிக நாட்களுக்குப் பின்னர், எனது நெருங்கிய நண்பன் ஒருவனை நான் சமீபத்தில் சந்தித்தேன்.

அவன் முகம் வாடியிருந்தது. எப்போதும் உற்சாகமாக இருக்கும் அவன் சோர்ந்து காணப்பட்டான்.

அவன் நிலையின் காரணத்தை வினவியபோது, "உன்னைப் போல நானும் ஒரு காலத்தில் மகிழ்ச்சியாக இருந்தவன்தான். ஆனால் இப்போது, எனது வாழ்வில் அதிகம் தோல்விகள் ஏற்பட்டு விட்டதால், சதா வேதனைப் பட்டுக் கொண்டேயிருக்கின்றேன்" என்று மிக்க வருத்தத்துடன் சொன்னான்.

வேதனை...! உல்லாச வானம் பாடியாக, மகிழ்ச்சியின் சிகரத்திலே, குதூகலத்துடன் இருந்த அவன் இப்போது வேதனைக்குப் பலியாகியிருக்கின்றானே, ஏன்...? "பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த போது நான் அடிக்கடி சிகரட் பிடிப்பேனல்லவா? ஒரு சினிமாப் படத்தையும் விடாமல் பார்ப்பேனல்லவா? ஆடம்பரமாக உடையுடுத்தி அதிகமாகச் செலவழிப்பேனல்லவா? அவையெல்லாம் என்னைப் பலி கொண்டு விட்டன......" என்று அவன் சோர்வின் காரணத்தை, வாட்டத்தின் காரணத்தை என்னிடம் சொன்னான்.

உண்மைதானே! பாடசாலைச் சீவியம் மிகவும் முக்கியமானது. அந்த நாட்களிலே, எனது துரதிஷ்ட நண்பனைப் போல சில கெட்ட பழக்கங்களைப் பழகிவிட்டால் அவைகளில் இருந்து மீழுவது எத்தனை கஷ்டமாக இருக்கிறது!

அப்படிப் பட்டவர்கள், பாவம், வேதனைக்குப் பலியாவதைவிட வேறு வழியேயில்லையல்லவா?

—'தேன்மொழி'

## தீரன் ஆவாய்!

'மலர்மகன்'

மேகங்கள் மறைத்த போதும்
ஒளியைச் சிந்தி
மேதினிக் கழகு தரும்
நிலவைப் பாரு
வேகமதாய் தீபச் சோதி
எரியும் போது
திரியதுவும் கருகிவிழும்
தியாகம் பாரு
குழந்தையின் நோயும் தீர
மருந்தை உண்டு
கஷ்டமதை அடையும் தாயின்
பெருமை என்ன?
இழந்த உன் இன்பத்தாலே
பிறரின் துன்பம்
தீருமென்றால் மகிழ்ச்சி கண்டு
தீரன் ஆவாய்!

## ஒரே உள்ளம்

நமது பழந்தமிழ்ப் பாட்டனும் பாட்டியுமாகிய வள்ளுவரும் அவ்வையாரும் ஒருசில விஷயங்களில்மட்டும் வேறுபட்ட உள்ளமுடையோராய் இருப்பினும் பெரும்பாலான விஷயங்களில் ஒரே உள்ளமுடையோராகவே இருந்துள்ளனர். ஒன்று கூடிப் பிறந்ததினாலோ என்னவோ? இருவரும் ஒரே உள்ளத்தினராகவே இருந்துள்ளார்கள் என்பதை அன்னாரின் பைந்தமிழ்ப் பாக்களைப் பயிலும் போதில் அறிய முடிகிறது. ஆணும் பெண்ணுமாகிய இவ்விருவரும் ஒரே காலத்தவர் எனினும் வெவ்வேறிடங்களில் வாழ்ந்துள்ளார்கள். வெவ்வேறு விதமான வாழ்க்கையை கைக்கொண்டிருந்தார்கள். வெவ்வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். வெவ்வேறான பாடல்களை இயற்றினார்கள். எனினும் பல விஷயங்களில் மற்றெவரினும் பார்க்க இவ்விருவரும் ஒருமித்த கருத்துள்ளோராகவே விளங்கியுள்ளார்கள். இது பெரும் வியப்பேயாகும்.

கல்வியைப்பற்றி வள்ளுவர் சொல்கையில் "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண் என்ப" என்றார். அவ்வையாரும் "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்றார். உழவினைப்பற்றிச் சொல்லும்போது வள்ளுவர் "சுழன்றும் ஏர்ப் பின்னதே உலகம்" என்றார். அவ்வையாரும் "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை" என்றார். தொழிலினைச் செய்வதைக் கூற வந்த வள்ளுவர் "எண்ணித் துணிக கருமம்" என்றார். அவ்வையாரும் "நுண்ணிய கருமமும் எண்ணித் துணி" என்றார். மழையைப் பற்றிக் குறிப்பிடுகையில் வள்ளுவர் "சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல்" என்றார். அவ்வையாரும் "மாரியின்றேல் காரியமில்லை" என்றார். நட்பினைப்பற்றிச் சொல்லும்போது வள்ளுவர் "நாடாது நட்டலிற் கேடு இல்லை" என்றார். அவ்வையாரும் "இணக்கமறிந்து இணங்கு" என்றார். "உலகத்தோடவ்வது ஒறைவது அறிவு" என்றார் வள்ளுவர். "தேசத்தோடொத்து வாழ்" என்றார் அவ்வையார். "பெரிதே பெரியாரைப் பேணித்தமராக்கொளல்" என்றார் வள்ளுவர். "பெரியாரைத் துணைக்கொள்" என்றார் அவ்வையார். "கற்றிலனாயினுங்கேட்க" என்றார் வள்ளுவர். "கேள்வி முயல்" என்றார் அவ்வையார். "யாதானும் நாடாமால் ஊராமால்" என்றார் வள்ளுவர். "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாஞ் சிறப்பு" என்றார் அவ்வையார். "அற்றால் அளவறிந்துண்க" என்றார் வள்ளுவர். 'மீதூண் விரும்பேல்' என்றார் அவ்வையார். "இன்னாத கூறல் காய் கவர்ந்தற்று" என்றார் வள்ளுவர். "ஞயம்படவுரை" என்றார் அவ்வையார். 'நெஞ்சங்கடுத்தது காட்டும் முகம்' என்றார் வள்ளுவர். "அகத்தினழகு முகத்தில்தெரியும்" என்றார் அவ்வையார். இன்னும் இப்படியாக எத்தனையோ விஷயங்களில் ஒத்த உள்ளமுடையவர்களாய் இருந்தமையாலேயே ஒரே கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். யாவற்றையும் எழுத 'வளர்மதி' இடந்தராது. ஆதலின் ஒரே உள்ளமுடையவர்களான வள்ளுவர்—அவ்வையார் பாக்களை கசடறக் கற்போம். இன்பங் கொள்வோம். அதன்படி நின்று வாழ்வோம்.

—"தாமரைத்தீவான்"

(வ. இ. 105)

கந்தகெதரை.

## திருக்குறளை தினம்தேடுவாய்

பண்: தேஸ் பாணி: ஆதி

தொகுப்பு

தெள்ளு தமிழிசை யினிலே பாடிடுவாய்
திருக்குறளதனைத் தினம் தேடிடுவாய்

எடுப்பு

உள்ளமெலாம் கொள்ளைகொள்ளும் குறளமுதை
உலகுக்கு வழங்கிடவே பணிபுரிவாய்

முடிப்பு

அறம் பொருள் இன்பம் எனு முப்பாலால்
அழகுறப் பொலியும் ஒரு அறநெறியாம்
திறம்பட அதற்கென நீ சேவை செய்வாய்
தீந்தமிழ்க்கே உயிரைச் செலவு செய்வாய்

வந்தவ ரெல்லாமே முந்திவிரைந்தே
வந்தனை செய்துமே வாழ்ந்திடும் விந்தை
சிந்தை மகிழ்வுறும் செந்தமி ழன்றிச்
சந்தம் முழங்கும் பிற மொழியேது?

—தே. சுந்தரராசன்

அண்ணமலை நகர்.

## தாகமுள்ள புரு!

தண்ணீர்த் தாகத்தால் வருந்திய புருவொன்று, தாகத்தைப் போக்குவதற்கு அங்குமிங்கும் அலைந்து திரிகையில், அதிர்ஷ்டவசமாக ஒரு பலகையைக் கண்டது. அப்பலகையில் ஒரு படம் வரையப்பட்டிருந்தது; ஒரு பொய்கையிலே தண்ணீர் தங்கி, அத்தண்ணீரிலே விரிந்த தாமரைகள் சிரிப்பதுபோன்ற படம் சுயரூபமெடுத்தாற்போல் தீட்டப்பட்டிருந்தது. அப்பொய்கையிலே தண்ணீர் உண்மையாகத்தான் இருக்கிறது என்று நினைத்த புரு, தாகத்தைத் தீர்க்க-தண்ணீரைப் பருக, தடாகத்தில் வீழ்ந்து குடித்தது. தண்ணீர்த் தடாகம் தான் என்றெண்ணி ஏமாந்த புரு விரைவாக வீழ்ந்ததால் அதன் மெல்லிய சிறகுமுறிந்தது. சிறகு ஒடிந்த புரு செயலற்று தரையில் சாய்ந்து துடிதுடித்தது. ஈற்றில் அருகிலிருந்த ஒருவர் அச்சிறகொடிந்த புருவை எடுத்துச் சென்றார்.

(புத்திமதி:- போலிகளைக் கண்டு ஏமாறலாகாது! எப்பொழுதும் [illegible] விட வேண்டும்.)

—அ. அ. மஹ்மூது

மாத்தளை

## சிநேகிதிக்கு

அன்பான விநோதினி!

இலங்கை வானொலி நிகழ்ச்சியில் என் பேச்சைக் கேட்டதாயும் உமக்கும் அப்படிப் போய்ப் பேச விருப்பமென்றும் எழுதியிருந்தீர். உம்மைப்போற்தான் நானும் பலகாலமாக ஆசைப்பட்டேன். ஆனால் ஒரு முறை வானொலி நிலையத்திற்குப் போனீராஞல் அதன் பிறகு பயமே இராது. தனியாக ஒரு அறையில் றேடியோ அக்காவின் மடியிலிருந்து கொண்டு பேசுவதென்றால் யாருக்குத்தான் பயம் வரும்? நாம் மட்டக்களப்பிலிருந்து போவதால் தூரத்திலிருந்து வந்திருக்கிறோம் என்று நம்மை மிக்க அன்போடு றேடியோ அக்கா வரவேற்பா. 'வணக்கம் குழந்தைகளே!' என்று அக்கா சொல்லும் போது கேட்க இனிமையாயிருக்கிறது. ஆனால் அக்காவுடைய சிரித்த முகம் நமக்குத் தெரிவதில்லையல்லவா ஆனால் வானொலி நிலையத்திற்குப் போனால் அக்காவை நேரே பார்த்து வணக்கம் சொல்லலாம். என் தம்பி போய் வந்த நாள் தொடக்கம் எடுத்ததற்கெல்லாம் றேடியோவையும் றேடியோ அக்காவையும் புகழ்ந்து கொண்டே இருக்கிறான். அடுத்த முறை என் சினேகிதர்களையெல்லாம் கூட்டிவருவதாக சொல்லி வந்திருக்கிறேன். ஆகையால் நீரும் எங்களுடன் வாரும்! நம் சிநேகிதிகட்கெல்லாம் சொல்லி எல்லோருமாகப் போனால் இன்பமாயிருக்குமல்லவா? உன் பதிலை எதிர்பார்க்கின்றேன்.

—நளினி இராமச்சந்திரன்.

மட்டக்களப்பு.

## கலை

கண்ணைப்பறிக்கும் வெண்மணற்பரப்பு-அதைத் தழுவித் தவழும் நீலத்திரை கடல், பால் வெண் நுரைகளைப் பரவிச் செல்கிறது. இந்த மனோரம்மியமான காட்சியில் மனம் லயித்திருக்கிறான் ஓர் கவிஞன். அவனது உள்ளத்தில் ஊற்றெடுத்த உணர்ச்சி வெள்ளம்' கவிதையுருவிலே பீறிப்பாய்கிறது.

இங்ஙனமாக உணர்ச்சிப் பெருக்கை உருவகப்படுத்துவதையே கலையென்கிறோம். இதனை உணர்ந்த தமிழ் வல்லுனர்

"காணுகின்ற காட்சியிலே
கவிந்து மனம்தான் லயித்துப்
பேணுகின்ற அனுபவத்தைப்
பிறர் எல்லாம் அறியும்வணம்
சொல்லாலோ அசையாலோ
சொலற்கரிய நடத்தாலோ
கல்லாலோ வணத்தாலோ
காட்டுவதே கலையாகும்"

எனக் கலைக்கு இலக்கணம் வகுத்துத் தந்துள்ளனர்.

இதயத்தில் உதயமான உணர்ச்சியைக் கவிதையாகப் பாடிக் கலையை வளர்க்கிறான் கவிஞன். சிற்றுளி கொண்டு கற்பாறைகள் குடைந்து, தன் சிந்தனையின் சித்திரங்களைச் சிலைகளாக்கிச் சிறப்பிக்கின்றான் சிற்பி. தன் மனங்கவர்ந்த காட்சியைத்தான் மெருகிட்டு வரைகிறான் ஓவியன். நெளிந்து வளைந்து ஆடும் நடன நங்கையும் தன் உள்ளத்தின் உணர்ச்சிகளுக்கேற்பத்தான் உடலுறுப்புகளை அசைக்கிறாள்.

இங்ஙனமாக ஒவ்வொருவரும் தத்தம் உணர்ச்சிகளை உருவகப்படுத்துவதனால் கலைஞர்களாக மிளிர்கின்றனர். இதனால் கலை இவர்களுடனேயே எல்லை கண்டுவிட்டது என்று கூறமுடியாது.

ஒருவன் அழுகிறான், சிரிக்கிறான். தன் நாளாந்த வாழ்விலே இதுபோன்று எத்தனையோ விதமாக நடந்து கொள்கிறான். இப்படியான ஒவ்வோர் நடத்தையும் அவனது உணர்ச்சியைப் பிரதிபலிக்கத்தான் செய்கிறது. எனவே இவை யாவற்றிலுமே கலையின் சாயல் இருக்கத்தான் செய்கிறது.

தமிழர் பண்பாட்டிலே முக்கிய அம்சமாகக் கருதப்படும் கலை, பண்டைதொட்டு நல்வளர்ச்சி கண்டு வந்தது. பாரதத்து மும்முடி வேந்தர்கள் மட்டுமின்றி, குறுநில மன்னர்களும், ஈழத்து வேந்தர்களும் கலையைப் பேணி வளர்த்தனர். பாரதத்தை ஆளவந்த அந்நியர்களும் எமது கலைக்குப் புதுமெருகுஊட்டிப்போற்றி வளர்த்தனர். உதாரணமாக இந்தியாவிலேயுள்ள 'தாஜ்மகால்" இன்றும் சிற்பக் கலையின் சிகரமாக ஒளிவிடுகின்றது. பல்லவர்கள் தந்துசென்ற கலைச்செல்வங்கள் காஞ்சிபுரத்திலும், மாமல்லபுரத்திலும் காணப்படுகின்றன. இலங்கை மன்னன் காசியப்பன் சிகிரியாக் குன்றின்மேல் செதுக்குவித்த சித்திரக் குகைகள், ஈழத்துக் கலை வளர்ச்சியைக் காட்டும் அழியாத முத்திரைகள் எனலாம்.

—'அச்சுவேலி பெனடிக்ற்'

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்.............................................

பாடசாலை.............................................

விலாசம்.............................................

.............................................

............................ ............................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்:

# நாடற்றவர் தொகை நாளாந்தம் உயர்கிறது

## பிரஜா உரிமைப் பிரச்னை தீர்க்கப்படாவிட்டால் நாட்டின் பொருள் வளம் குன்றும்

### இ. தொ. கா. மன்னார் மாவட்ட கமிட்டி கூட்டத்தில் காரியதரிசி கருத்துரை

"இந்நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்காக உழைத்து உழைத்து உருக்குலைந்துபோன பத்து லட்சம் மலைநாட்டுத் தமிழ் மக்களின் நிலை இன்னும் திரிசங்கு சுவர்க்கம்போலவே இருக்கிறது. பிரஜாவுரிமை மனுக்கள் நிராகரிக்கப்படும் வேகத்திலிருந்து நாடற்றவர் தொகைதான் நாளிலும் பொழுதிலும் பெருகிக்கொண்டுவருகிறது.

நீதி - நியாயமற்ற முறையில் பிரஜாவுரிமை மனுக்களை நிராகரிப்பதைத் தவிர, பிரஜாவுரிமை பிரச்னையைத் தீர்ப்பதில் மக்கள் அரசாங்கத்திற்கு எவ்வித சிரத்தையுமிருப்பதாகத் தெரியவில்லை. பிரஜாவுரிமைப் பிரச்னை சுமுகமாக தீர்க்கப்படாவிட்டால் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியே குன்றிவிடும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மன்னார் மாவட்ட கமிட்டி பொதுக் காரியதரிசி திரு. எஸ். ஆர். எம். வி. வேலுச்சாமி காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மன்னார் மாவட்ட கமிட்டியின் மாதாந்தக் கூட்டம் அதன் காரியாலயத்தில் தலைவர் திரு ஏ. எஸ். பிச்சை தலைமையில் கூடியது.

பலர் பேசிய பின்னர் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) மொழிப் பிரச்னை சம்பந்தமாய் சமீபத்தில் பிரதமர் பண்டாரநாயகா அவர்களும், சமஷ்டிக் கட்சித் தலைவர்களும் சந்தித்து, பரஸ்பரம் இரு கட்சிகளின் நோக்கங்களைப் பரிமாறிக் கொண்டமைக்கு இக் கமிட்டி தனது இதயபூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறது.

பிரதமரும் இவ் விஷயத்தில் இறுதிவரை மனிதாபிமானத்துடன் நடந்து இரு சமூகங்களும் ஒற்றுமையுடனும் சௌஜன்யத்துடனும் வாழ வழி வகுப்பாரென நம்புகிறது. மொழிப் பிரச்னை விஷயத்தில் ஓர் சுமுகமான முடிவிற்கு வராவிட்டால் தமிழர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் நாட்கள் வெகுதூரத்திலிராது என்பதையும், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் எச்சரிக்கை செய்கிறது.

(2) மன்னார் பொலீஸ்நிலையத்தில் கடமையாற்றிய பொலீஸார் அனைவரையும் மாற்றி அமைதியை நிலைநாட்டக் காரணமாயிருந்த அதிகாரிகளுக்கு இக்கமிட்டி நன்றி தெரிவிக்கிறது.

(4) காங்கிரஸ் தலைவர் திரு எஸ். தொண்டமானையும் மற்றும் அரசியல் தலைவர்களையும் அழைத்து மன்னார் ஜில்லாவில் கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கிறது.

(4) நாட்டில் அமைதியின்மை ஏற்படும் காலத்தில் நாட்டின் மக்களிடையே, அமைதியை ஏற்படுத்த சகல ஆயத்தங்களும் செய்ய வேண்டுமென்ற எச்சரிக்கையை இக் கமிட்டியின் அங்கத்தினர் அனைவருக்கும் விடுவிக்கும்படி கோரப்படுகிறது.

---

#### அக்குவைனஸ் தமிழ் மன்றம்

இடைக்காலத் தேர்தல் அணிமையில் நடைபெற்ற போது புதிய நிர்வாக சபை குழு மன்றத்தின் அங்கத்தினர்களால் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: திரு. அ. தங்கராசா, உபதலைவர்: திரு சி. செல்வத்துரை, பொதுச் செயலாளர்; திரு எஸ். டி. மிராண்டா, உப செயலாளர் திரு எஸ். எம். யெஹியா, பொருளாளர்: திரு. த. சின்னக்கோன், கணக்குப் பரிசோதகர்: கு. தனபாலசிங்கம், விஞ்ஞானப் பகுதி பிரதிநிதி செல்வி எல். பிரசன்னகி, பொருளாதாரப் பகுதி பிரதிநிதி திரு. ச. லோகேஸ்சுவாராய்; கலைப் பகுதிப் பிரதிநிதி செல்வி சந்திரா அரியகுட்டி.

#### "பாட்டாளிகளின் கூட்டாளிகள்; குட்டு அம்பலம்!"

"பாட்டாளிகளின் தோழர்கள் என்று கூறிக்கொண்டு நாட்டில் நடமாடும் கம்யூனிஸ்ட்கள், பாராளுமன்ற பொறுக்குக் கமிட்டியில் இந்நாட்டில் ஐந்து வருடங்கள் வசித்துவந்தவருக்கு வாக்குரிமையளிக்க உரிமையளிக்க வேண்டுமென வந்த பிரேரணையை எதிர்த்து வாக்களித்திருக்கின்றனர். இப்படிப்பட்ட நிலையில் தங்களை பொதுவுடமைவாதிகள் என்று சொல்லிக்கொள்ள அவர்கள் வெட்கப்பட வேண்டும்" இவ்வாறு பதுளை உடுவரை தோட்டத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் திரு. அ. தங்கராசன் பேசுகையில் கூறினர்.

உடுவரை தோட்ட இ. தொ. கா. தேர்தல் கூட்டம் அணிமையில் மாவட்ட உபதலைவர் திரு ஏ. கே. களப்பன் தலைமையில் நடைபெற்றது.

திரு என். எஸ். இராசசுந்தரம் பேசிய பின்னர், மாவட்ட உப-பிரதிநிதி திரு எஸ் எஸ் லோகநாதன் மாற்றலாகிச் செல்வதால் அன்னருக்கு மக்கள் சார்பாக மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அதன்பின் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர் திரு. ராமசாமி, உப - தலைவர்: நாராயணசாமி, காரியதரிசி: திரு கே. பெருமாள், இணைக்காரியதரிசி: திரு சிவலிங்கம், தனாதிகாரி: திரு. செல்லையா.

#### பாரதி கலாமன்றம்

கொச்சிக்கடை தோப்பு பாரதி கலாமன்றத்தின் 10வது கூட்டம் சென்ற 10-7-57ல் தோழர் கு. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

அவ்வமயம் தோழர்கள் மனோகரன், யு வின்சென்ற் டிபோல், அ. பே. ப. பிள்ளை கு. மாணிக்கம் முதலியோர் சொற்பொழிவாற்றினர்.

பின்வரும் முக்கிய தீர்மானங்களுட்பட பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

1. பாரதி நினைவு விழாவை 13-9-57ல் கொண்டாட வேண்டும். கட்டுரைப் போட்டி-பேச்சுப் போட்டி என்பவற்றை நடத்த வேண்டும்.

2. மன்ற வளர்ச்சிக்கு ஓர் படக்காட்சியை ஆவணி மாதம் முதல் வாரத்தில் காட்ட வேண்டும்.

3. "பாரதி" என்ற கையெழுத்துப் பத்திரிகையை ஆவணி மாதம் வெளியிட வேண்டும். ஆசிரியராக தோழர் யு வின்சென்ற் டிபோலும், துணை ஆசிரியராக து. இம்மானுவேல் சில்வாவும், போஷகராகவும் நிர்வாக ஆசிரியராகவும் தோழர் அ. பே ப. பிள்ளையும் தெரிவுசெய்யப்பட்டனர்.

4. நீர்கொழும்பு பிரிவுக் காரியாலயத்தில் தமிழ் குமாஸ்தா நியமிக்க விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பக் கடிதம் உள்நாட்டு மந்திரிக்கு அனுப்ப வேண்டும்.

---

#### பாரதி படிப்பகம்

யாழ்ப்பாணம் பாரதி படிப்பகத்தின் ஆதரவில் சென்ற 21-6-57ல் திருவள்ளுவர் விழா படிப்பகத் தலைவர் திரு இ. இராசையா தலைமையில் நடைபெற்றது.

அதுபோது திரு கே. பி. முத்தையா, செல்வி பத்மா பஞ்சநதேஸ்வரன், திருவாளர்கள்: கரிகாலன், அ. விசுவநாதன் முதலியோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

---

#### அப்புவலையில் இ. தொ. கா. கூட்டம்

"இந்நாட்டின் எதிர்காலம் மலைநாட்டுத் தமிழர் கையில்தான் இருக்கிறது. இந்நாட்டை வளமாக்கிய மலைநாட்டுத் தமிழ் மக்கள்தான் நாட்டின் சுகதுக்கங்களில் அதிக பங்கு கொண்டுள்ளார்கள். மலைநாட்டுத் தமிழர்களின் வாழ்வைப் பாதிக்கும் எத்தகைய சட்டத்தையும் ஆட்சியாளர்கள், கொண்டு வந்து அநீதி இழைக்காமல் இருக்கவேண்டுகிறோம்" இவ்வாறு பதுளையைச் சேர்ந்த அப்புவலை மேல்கணக்கு தோட்டத்தில் நடைபெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் மாவட்ட காரியதரிசி திரு சுப்பிரமணியம் பேசுகையில் கூறினர்.

கூட்டத்திற்கு திரு ஏ. கே. களப்பன் தலைமை வகித்தார். திருவாளர்கள் எம். சுப்பையா, அ. தங்கராசன், பி. கற்பகம், எம். சிவலிங்கம், ஆகியோர் பேசிய பின் நடப்பு வருடத்திற்கு கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்: சிவநாதம்பிள்ளை, உபதலைவர்: வி. தங்கவேல், காரியதரிசி: வி. சுந்தரம், இணைக் காரியதரிசி: ராமகிருஷ்ணன், தனாதிகாரி: தருமலிங்கம், கமிட்டிகள்: கே. கதிர்வேல், ஏ. கதிர்வேல். வி. அய்யாத்துரை, கே. நடேசன், கே. தங்கையா, ஏ. ராஜமையா.

---

#### ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்

ரத்தொட்டை ஜில்லாவைச் சேர்ந்த கல்மடுவு தோட்டத்தில் கடந்த 30-7-57-ல் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தோர்தல் கூட்டம் திரு நாகரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திருமதி கோகிலம் சுப்பையா ஜ. தொ. கா. கொடியை ஏற்றிவைத்தார். திருவாளர்கள் நடேசன், வேலுப்பிள்ளை, பெரியநந்து முதலியோர் பேசினார்கள்.

பின்னர் கல்மடவு கேட்டன் ஆகிய இருடிவிசன் தோட்டக்கமிட்டி உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். கேட்டன்: தலைவர்: எஸ். சின்னச்சாமி, உபதலைவர்: பழனியாண்டி, காரியதரிசி: மாரிமுத்து, உபகாரியதரிசி: சுப்பையா, தனாதிகாரி: சின்னையா. கல்மடுவு தலைவர்: ஆர். பழனியாண்டி, உபதலைவர்: செல்லையா, காரியதரிசி ஏ. ராமசாமி, தனாதிகாரி: சின்னையா.

---

## குரும்பசிட்டியில் தமிழரசுக் கூட்டம்

### போராட்ட நிதிக்கு ரூபா1059 பொதுமக்கள் அன்பளிப்பு

"இதற்கு முன்னர் இருமுறை குரும்பசிட்டியில் நடைபெற்ற தமிழரசுக் கூட்டங்களில் நான் பங்குபற்றியுள்ளேன். முதல் முறை கூட்டம் வைப்பதற்கே இடமில்லாமல் சலித்த இளைஞர்கள் எங்கேயோ ஒரு மூலையில் ஏதோ ஒரு கழகத்தின் பெயரிலே பற்றைக் காடுகளை வெட்டி மிகக் கஷ்டப்பட்டுக் கூட்டம் நடத்தினர். அப்பொழுது "கூட்டம் இல்லை" என்று சிலர் கள்ளத் தந்தி அடித்து என்னை வராது தடுத்துக் கூட்டத்தைக் குழப்ப முனைந்தனர். பின்னர் இரண்டாம் முறை நடைபெற்ற கூட்டத்தின் போது "கல் விசுவோம்— காடைத்தனம் புரிவோம்" என்று சிலர் வாய் வீரம் பேசிக் கூட்டத்தைக் குழப்ப எத்தனித்தனர். ஆனால் இன்று அந்த நிலைமை முற்றிலும் மாறி பிரசித்தமான பிள்ளையார் கோவில் வீதியில் பிரமாண்டமான கூட்டம் நடைபெறுவதே தமிழரசுக் கட்சியின் தூய்மையை மக்கள் உணரத் தலைப்பட்டனர் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாகும்":

இவ்வாறு குரும்பசிட்டியில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிப் பொதுக் கூட்டத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அமிர்தலிங்கம் பேசுகையில் கூறினர்.

குரும்பசிட்டி பிள்ளையார் கோவில் வீதியில் பிரமாண்டமான தமிழரசுக் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது. திருவாளர்கள் சி. வன்னியசிங்கம், எஸ். இராசதுரை, கே. துரைரத்தினம், எஸ். நடராசா, செல்வி பத்மாவதி வேலுப்பிள்ளை, திருமதி ஏ. அமிர்தலிங்கம் முதலியோர் கூட்டத்தில் சொற்பெருக்காற்றினர். திரு வ. கந்தையா (ஆசிரியர்) கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

குரும்பசிட்டிப் பொது மக்கள் சார்பாகபோராட்ட நிதிக்கு 1059 ரூபா நன்கொடை அளிக்கப்பட்டது. திரு வன்னியசிங்கம் [illegible] மக்கள் அளித்த நிதிக்கு நன்றி தெரிவித்தார்.

#### ஆதி வேளாளர் சங்கம்

ஆதி வேளாளர் சமூகமுன்னேற்ற சங்கத்தின் ஆறுவது ஆண்டு விழா நடந்த 7-7-57-ல் சங்கத் தலைவர் திரு. வே. இராமசாமி தலைமையில் வாலிப முன்னேற்றக் கழக புதிய பணி மனையில் நடைபெற்றது.

மேற்படி விழாவில் திருமதி கோகிலம் சுப்பையா திருவாளர்கள் நடேசன், ஆர். ஆர். கே. பெட்லர், சுழவாணன், ஜனுப்கள் டி. எம். பீர்முகம்மது, ஜலால் முதலியோர் சொற்பெருக்காற்றினர்.

பின் புதிய ஆண்டு நிர்வாகஸ்தர்களாக கீழ்க் கண்டவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. ஜே. மனுவேல், உபதலைவர்: செல்லையா. செயலாளர்: வை. இராமசாமி, துணைச் செயலாளர்: திரு. எச். பத் [illegible] கள்: ஜோன் செல்லையா சிவலிங்கம்.

#### அண்ணா பகுத்தறிவு மன்றம்

"எல்லோரும் ஓரினம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் அதில் வாழும் பிரஜைகள், உயர்வு தாழ்வின்றி வாழ வேண்டும், தீய பழக்க வழக்கங்களை ஒழித்து தூய மனிதர்களாக வாழ்வதற்கு தன் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்தார் புத்தர்பெருமான். அத்தகைய சாத்வீகத்தியாகியின்பொன் மொழிகளைப் போற்றும் இந் நாட்டில் ஒருசாராருக்குநீதி வழங்க தயங்குகின்றனர் ஆட்சியினர்"

இவ்வாறு 7-7-57-ல் அண்ணா பகுத்தறிவு மன்றத்தின் செயற் குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கிய திரு டி. வி. நடராசா பேசுகையில் கூறினர்.

பின்னர் கீழ் கண்ட தீர்மானம் நிறைவேறியது:

தமிழ் மக்களின் கோரிக்கைகளை மதித்து விவாதிக்க முன்வந்த பிரதமரை பாராட்டுவதோடு தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை அங்கீகரிக்க வேண்டுமென ஆட்சியினரை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்படி தீர்மானத்தை ஆதரித்து தோழர்களான எம் உமர், க. சு. தமிழ்நாதன், வை. மு. அழகேசன், இரா நெல்லைராஜ், பாண்டியனார், எம். ஏ. ரகீம், வி. கே. சாமி, கோ. ச அ. அசன், எஸ். வி. நாயகம், ஆறுமுகம் சேது ஆகியோர்கள் பேசினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி முரசு கொட்டும் மகத்தான 2வது வாரம்!

# கிங்ஸ்லி பிளாஸா வெப்பிளி

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)

# வெலிங்டன் விஜயா மொடர்ன்

(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு) (பதுளை)

நடிகர்கள்:

என். டி. ராமராவ்,

ஜெமினி கணேசன்,

எஸ். வி. ரங்கராவ்,

தங்கவேலு,

எம். என். நம்பியார்

டி. பாலசுப்பிரமணியம்,

கருணாநிதி,

ஏழுமலை.



நடிகைகள்:

சாவித்திரி

★

லட்சுமிபிரபா

★

சந்தியா,

★

முத்துலட்சுமி,

★

ராஜகாந்தம்

ஆகியோர்.

# மாயா பஜார்

மகாபாரதக் கதைகளிலுள்ள "வத்ஸலாவின் கல்யாண"த்தைச் சித்தரிக்கும் உன்னத சித்திரம்.

இதில் வரும் சகுனி மாமாவின் கபட சூழ்ச்சிகளும், ஸ்ரீ கிருஷ்ணனின் மாயா ஜாலங்களும், கடோத்ஜகனின் வீரச் செயல்களும் மாறுவேஷங்களும்— அஸ்த்ர யுத்தங்களும் உங்கள் மனதைக் கவரும்வண்ணம் அமைந்துள்ளன.

இப்பத்திரிகை கொழும்பு தட்டா தெரு 196ம் இல்லத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1957 ஜூலை மாதம் 28ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org